சமரஸ வெற்றி

PEACE PACT

காந்திஜீயின் வெற்றி என்னும்

சமரச வெற்றி

மகாத்மா காந்தி—லார்டு இர்வின் சமரச உடன்படிக்கை முதலிய விவரங்கள்.

AMRITAM & Co.,

Post Box 222 Madras.

THE KESARI PRINTING WORKS
MADRAS

சுதந்தர மெங்கே?

சுதந்தரம் விரும்பாதவர் யார்? அதற்கு அனுசரிக்க வேண்டிய பத்திய பாகங்களை மகாத்மா காந்தி சொல்லி வருகிறார். ஆனால் கசப்பு—கஷ்டமாயிருக்கிறது. என்று மும் காந்தி ஒளி இடைவிடாது வீசுகின்றது. துன்பம் அதிகரிக்கின்றது. மகாத்மா கண்டிக்கிறார். சுதந்தரம் இங்கிலாந்தில் இல்லை. உங்கள் ஒவ்வொருவரிடத்திலு மிருக்கிற தென்கிறார். இது என்ன இரகஸ்யம்! முதலா வது ஊக்கம் வேண்டும். புதிய ஊக்கத்தைப்படி; அதுவே முதல் பாடம் (அணா 2.)

வர்த்தக யுக்தி.

இரண்டாம் பாடம். இதுவரை ஆயிரக் கணக்கில் செலவாகி இப்பொழுது புதிய பதிப்பு வெளி வந்திருக் கிறது. உனக்கு உற்சாகத்தை ஊட்டி தட்டி எழுப்பக் கூடிய அதியற்புத சக்தி வாய்ந்தது. ஒரு முறை படித் தால் உன்னை உயர் பதவிக்கு ஆளாக்கும். இதுவே உண் மையான படிப்பு. இரண்டு பாகம் 56 குறிப்புங்கொண் டது. விலை அணா 12.

வியாபார தந்திரம்.

மூன்றும் பாடம். இந்தியாவின் தொழில் நிலைமையை விளக்கிக்காட்டி, முன்னேற்ற மடைவதற்கான பல வழி களனைத்தும் பரம ஹம்ச ஸ்ரீராம கிருஷ்ணர் முதல் மகாத்மா காந்தி இறுதியாக, கூறிய பொன் மொழிகளே யாகும். இது சமயம் படிக்கத் தவறாதீர்கள்.

விலை ரூபா 1-8-0.

தேசீய பாடங்கள் (இந்திய நிலைமை)

கடைசியாக தேசீய பாடமாகிய (1) சமரச முயற்சி— மகாத்மா விடமும் அரசப் பிரதிநிதியிடமும் சமரஸத்துக் காக தூதுசென்ற விபரம் கடிதப் போக்கு வரத்து (அணா 8.) (2) காந்திஜியின் வெற்றி—இதில் காந்தி—இர் வின் உடன்படிக்கை, சந்தேக சமாதானங்களுடன் அடங் கியது. (விலை அணா 12.) இவ்விரு நூல்களையும் படி வெற்றி உனக்கே! மேற்கண்ட நூல்கள் எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.

ஜவஹர்லால்

இந்தியரின் மூச்சிலும் பேச்சிலும் இன்று பிரதான புருஷராயிருக்கும் பண்டித ஜவஹர்லால்!

இளஞ்சிங்கங்களைத் தட்டி எழுப்பிப் புது உற்சாகமும், ஊக்கமும், பலமும் ஊட்டிய நமது மாபெருந்தலைவர்.

இவர் ஜீவியசரிதம் இப்பொழுது விற்பனைக்குத் தயார். பள்ளிப்படிப்பு, சீமைவாசம், பாரிஸ்டர் பரீக்ஷை, லாயர் தொழில் முதற்கொண்டு—சகல ராஜ போகங்களையும் துறந்து தேசத்திற்குத் தொண்டாற்றிய அருஞ்சேவை, பெருந்தியாகம், ஜெயில்வாசம் அவ்வப்போது நிகழ்த்திய வீரம் செறிந்த சொற்பொழிவுகள், காங்கிரஸ் தலைவர் பதவி பேருரை கராச்சி காங்கிரஸில் செய்த அரிய பிரசங்கங்கள் முதலிய யாவும் ஒருங்கே திரண்ட புஸ்தகம். தமிழகத்துக்கே முதல் நூல்.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

விலை அணு 12 தான்.

அட்டவணை.

அயல் நாட்டு ஜவுளிகளை

ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்?

சீமைத் துணி பகிஷ்காரமானது அரசியல் சங்கடங்களை உண்டாக்குவது உண்மையேயாகும். எனினும் இந்தியாவில் பொருளாதார நெருக்கடியையும், வாழ்க்கை நெருக்கடியையும், தீர்த்து அரை பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான ஜனங்கள் கஷ்டத்தைக் குறைப்பதற்காகவே சீமைத்துணி பகிஷ்காரத்தை அனுஷ்டிக்கும்படியான அவசியம் ஏற்பட்டிருக்கிறது. சீமைத் துணி பகிஷ்காரம் இத்தேசத்தில் சாசுவதமான பொருளாதார முன்னேற்றத்திற்கான ஓர் இயக்கமாகும். ஆகையால் அந்த இயக்கத்தை நசுக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் கிளர்ச்சி செய்வதைக் காட்டிலும், லங்காஷயரிலுள்ள பிரபல தலைவர்கள் தங்கள் தேசத்தில் உற்பத்தியாகும் சாமான்களை எந்த தேசத்தில் விரும்புகிறார்களோ அந்த தேசங்களுக்கு அனுப்பி பட்டுவாடா செய்ய முயற்சிப்பார்களானல், பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் பரஸ்பரம் நல்லெண்ணம் விருத்தி யடையும்.

—மகாத்மா காந்தி.

இந்தியாவில் ஜவுளி ஏற்றுமதி இறக்குமதி விவரம்.

இந்தியா சீமைக்கு ஏராளமாக துணி ஏற்றுமதி செய்துகொண்டிருந்தது. அதை நினைத்தால் இப்பொழுது கனவுபோலிருக்கிறது. அடியிற்கண்ட கணக்குகளைப் பார்த்தால் 1814-ம் வருஷத்தில் எவ்வளவு ஏராளமாக துணி பீஸ்கள் போய்க்கொண்டிருந்த தென்பதையும், 1849-க்குள் எவ்வளவு வேகமாய் குறைந்து போயிற்றென்பதையும் நண்பர்கள் அறிந்து கொள்ளலாம்.

இந்தியா இங்கிலாந்துக்கு ஏற்றுமதிசெய்த துணி.

		பீஸ்கள்.
1814-ம் ஞு		12,66,608
1821	,,	5,34,459
1828	,,	4,22,504
1835	,,	3,06,086
1842	,,	1,81,224
1849	,,	36,152

அடியிற்கண்ட கணக்கைப் பார்த்தால் அந்நியநாட்டு துணிகள் எவ்வளவு வேகமாய் இந்நாட்டில் பெருத்து வந்திருக்கிறதென்பது விளங்கும். ஒண்டவந்த மாடு ஊர் மாட்டை துரத்தியதுபோல் சீமை ஜவுளி வந்து இந்திய நெசவுத் தொழிலை அழித்தது.

இந்தியா, இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்து வரும் துணி.

	கெஜம்.
1814-ம் வரு	8,18,208
1821 ,,	1,91,38,726
1828 ,,	4·28,28,077
1836 ,,	5,17,77,277
1875 ,,	61,64,36,752
1905 ,,	137,83,00,234
1925 ,,	148,87,13,446
1917 ,,	169,30,00,000
1928 ,,	181,00,00,000

இந்தியாவின் கடன்.

இந்தியர் பணம் வருஷா வருஷம் கடனுக்கு வட்டியாகவும், பென்ஷனாகவும், இன்சூரன்ஸ் வழியாகவும், இந்நாட்டிலுள்ள வெளி நாட்டு கம்பெனிகள் அடையும் லாபம் மூலமாகவும் வெளி நாடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறது.

	1900-01	1928-29
	(கோடி ரூபாய்	கோடி ரூபாய்)
வெளி நாட்டுகடன்	200	— 470
பென்ஷன், செலவுமுதலியவைகளுக்காக இந்தியமந்திரிக்கு அனுப்புவது	10	— 19
பிரிட்டிஷார் இந்நாட்டில் போட்டிருக்கும் மூல தனம்	352	— 1237

இவற்றிலிருந்து மூன்று இனங்களிலும் தொகை எவ்வளவு உயர்ந்திருக்கிற தென்பதை அறியலாம். பிரிட்டிஷ் மூல தனத்திற்கு அரை வட்டிபோட்டாலும் வருஷம் 80 கோடி ரூபாய் வட்டியாகிறது.

எப்படி பெருகிற்று?

பிரிட்டிஷார் இந்தியாவில் போட்டிருக்கும் மூலதனம் 352 கோடியிலிருந்து 1237 கோடியாக எப்படி பெருகிற்று? இதுவே ஒரு பெரிய ஆச்சரியம். சென்ற 50 வரு

ஷகாலமாக ஏற்றுமதி இறக்குமதி புள்ளி விவரங்களைப் பார்த்தால், இந்தியாவிற்கு இங்கிலாந்திலிருந்து மூலதனம் எதுவும் வரவில்லையென்பது தெரியும். மூலதனம் வராமலே இங்குள்ள மூலதனம் வளர்ந்தது எப்படி? ஒரு ரூபாய்க்கு ஒரு வட்டி வீதம் போட்டு வட்டிக்கு வட்டி சேர்த்துக்கொண்டுபோனால், 100 வருஷங்களில் அந்த ஒரு ரூபாய் லக்ஷரூபாயாக பெருகிவிடும். அரை வட்டி வீதம் போட்டால் 12 வருஷங்களில் முதல் இரட்டிப்பாய்விடும். இதுதான் ரகசியம். பிரிட்டிஷார் இங்கு போட்டதாகச் சொல்லும் மூலதனங்களிலிருந்து கிடைக்கும் லாபத்தை திரும்பவும் மூலதனத்தோடு சேர்த்துக்கொண்டேபோவதால்,மூலதனம்பெரிதாயிற்று. ஆதியில் போட்ட மூலதனத்தையாவது பிரிட்டனிலிருந்துகொண்டு வந்தார்களா? அதுவும் இங்கு சம்பாதித்த பொருளே. ஆகவே இங்கு இந்தியரிடம் சம்பாதித்த பொருளாயிருந்தாலும், இன்று 1237 கோடி ரூபாய் பிரிட்டிஷ் மூலதனம் என்ற பெயரால் இந்நாட்டில் இருக்கிறது. கட்டையோ நெட்டையோ இந்த தகராறை தீர்த்துவிடுவதே மேல்.

தற்கால இந்திய நிலைமை.

நாலைந்து மாதங்களுக்கு முந்தி, ப்ரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய தேசங்களை சாவதானமாய் சுற்றிப்பார்த்து, ஆங்குள்ள நிலைமைகளை இந்தியாவுடன் சீர்தூக்கிப் பார்த்து வந்தவரோடு நாம் நேரில் சந்தித்து சில கேள்விகள் கேட்டோம். அதற்கு அவர் சொன்னதாவது :—

அயல்நாடுகளில் ஆடம்பர வாழ்க்கை படிப்படியாய்க் குறைந்துவிட்டது. சுதேசி, சுதேசப்பொருள் என்று சொல்லிக்கொள்ளாமலே தங்கள் நாட்டில் தயாராகும் பொருளை வாங்கிக்கொள்கிறார்கள். தேசப்பற்று, தேசாபிமானம் மிகுந்துள்ளதால் சட்டதிட்டங்களும் ஏற்றுமதி இறக்குமதிகளில் கையாளப்பட்டு வருகின்றன. ஆளுவோரும் ஆளப்படுவோரும் ஒத்துப்போகிறார்கள்,'' என்றார். இந்தியாவை அந்நியர் ஆளுவதால், இந்தியமக்கள் வெகுகாலமாய் அபிமானப் பற்றுகளை மறந்து அயர்ந்து நித்திரையிலிருந்து விட்டனர். காங்கிரஸ் மகாசபை தோன்றி சுமார் 45 வருஷகாலமாய் தட்டி எழுப்பிவந்ததன் பலனாய், இந்த இரண்டுவருஷம் இடைவிடாது பல இன்னாலுக்குட்பட்டும் அதிதீவிரமாய் வேலைசெய்து வருகின்றது. தீவிர முயற்சிக்குட்பட்ட அந்நியத்துணி பகிஷ்காரம் நல்ல பலனைக் கொடுத்துவருகிறது. சர்க்காருடன் ஸமரஸ உடன்படிக்கையில் ஜவுளி பகிஷ்காரம் விட்டுக் கொடுக்கப் படவில்லை என்பது இன்றும் அனுஷ்டானத்திலிருந்து வருவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இது ஒரு புரமிருக்க இப்பொழுது உலகெலாம் வியாபாரமும் செல்வ நிலையும் ஸ்தம்பித்து நிற்கின்றன. இதற்குக் காரணம் இந்தியாவின் தற்கால சீர்கேடான நிலைமையென்று சொல்லுகின்றனர். மகாத்மாகாந்தியின் இயக்கங்கள் மூலாதாரம் என்கின்றனர். முதலாவது இந்தியாவிலிருந்து விளை பொருள்களான பஞ்சு, மணிலாக்கொட்டை, நிலவாகை, கோதுமை, சணல் முதலியவைகளின் ஏற்றுமதி திடீரென நின்றுவிட்டது. இரண்டாவது மலாய் நாட்டிலுள்ள ரப்பர் விலை வெகுவாய்க் குறைந்து விட்டது. மகாத்மா காந்தியின் இயக்கமில்லாவிடினும் வியாபார நிலைமை தற்கால நிலைமைக்கு வந்தே தீரவேண்டும். இந்திய விளை பொருள்கள் அந்நிய நாடுகளிலும் தயாராகின்றன. இந்தியாவில் விலைவாசி திடீரென விழுந்துவிட்டது. எல்லாம் மலிந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி முதலான விடங்களில் விலை குறைந்திருந்தும் நெல் வாங்குவாரில்லை. இந்நிலைமை சீர்பட பலமாதங்கள் செல்லும். வரவர சிக்கனம் தானே அதிகரிக்கும். அநேக வருஷங்களுக்கு முன் எம்மால் எழுதப்பட்ட * 'வியாபார தந்திரம்' என்ற நூலில் எதிர் கால சம்பவம் இன்னதென விளக்கியிருக்கிறோம். அதைப் படிப்போர் சரியென்று ஒப்புக்கொள்ளாதிரார். சர்க்கார் திட்டமும் காங்கிரஸ் இயக்கமும் மூலாதாரமான விஷயங்களில் ஒரு சரியான முடிவுக்கு வருமானல் நிலைமை திருந்தலாம். கதர் ஆடம்பரத்தைக் குறைத்துவிட்டது. கதர் விர்த்தியாகிறது.

---

* வியாபார தந்திரம் விலை ரூ. 1—8—0 எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

காந்தி-இர்வின் ஒப்பந்தப்படி சர்க்கார் நடந்து கொள்ளவில்லை என்ற புகார் ஒவ்வொரு மாகாணத்திலும் இருந்து வருகிறது. சர்க்கார் உத்திரவு வெகுதூரம் சென்று வேலை செய்யவேண்டியதாகிறது. பார்லியமெண்டுக்கு வைஸ்ராய் உத்திரவாதி.
வைஸ்ராய்க்கு மாகாண கவர்னர்கள் உத்திரவாதி. கவர்னருக்கு பல இலாகா அதிகாரிகள் உத்திரவாதி. போலீஸ் இலாகா அங்கத்தினர்க்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்திரவாதி. இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு சூப்ரண்டன்டும், சூப்ரண்டன்டுக்கு இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டருக்கு சப் இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டருக்கு எட் கான்ஸ்டபிளும், எட்கான்ஸ்டபிளுக்கு கான்ஸ்டபிளும் முறையே உத்திரவாதியாகின்றனர். எனவே சமரஸம் நிலவ இவ்வாறு படிப்படியாய் மனோசாந்தி உண்டாக வேண்டும். சர்க்காரைவிட மகாத்மா காந்திக்கு சமரஸ வேலையில் அதிகப் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஜெயிலில் இருப்பவர்களை விடுதலை செய்யவும், நிலங்களைத் திருப்பிக் கொடுக்கவும் மகாத்மா முயற்சி செய்துவருகிறார். இதற்காக கவர்னர்களையும் அவரது அதிகாரிகளையும் கலந்து பேசிவருகின்றார்.

இனி இந்தியாவின் முற்போக்கான விஷயங்களை, இங்கிலாந்தில் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டி மறுமுறையாக, காங்கிரஸ் தலைவர்களின் பிரதிநிதி மகாத்மாவுடன் பேசப்போகின்றார்கள். லார்டு இர்வின் இதற்கு மிக்க ஆதரவளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவுக்கு இனி நல்ல அதிர்ஷ்டம் என நம்புகிறோம்.

மதராஸ்,
21—5—1931. } M. A. நெல்லையப்பர்.

சமரஸ வெற்றி

இராஜீய கிளர்ச்சியை முன்னிட்டு இங்கிலாந்திலுள்ள இராஜ தந்திரிகள் இந்தியாவுக்கு முற்போக்கான நிலைமையில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டி, லண்டனில் சர்வ கட்சி மகாநாடு ஒன்றைக் கூட்ட ஏற்பாடு செய்திருந்ததில், காங்கிரஸ் மகா சபையின் சார்பாக, மகாத்மா காந்தி ஒத்துழைக்க மறுத்துவிட்டு, சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து நடத்திவந்ததை வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறோம். சட்ட மறுப்பு, அந்நியநாட்டு ஜவுளி மறியல் இயக்கங்கள் வெகு தீவிரமாய் இந்தியாவின் நாலாபக்கங்களிலும் நடைபெற்று வந்ததால், உலகெலாம் பல தொழிலும் நடைபெறுவதற்கின்றி, ஸ்தம்பித்துவிட்டது. இந்தியாவிலோ சொல்லுதற்கரிய கஷ்டநிலைமை கடுமையாயிருந்துவந்தது. இந்த இராஜீயக் கிளர்ச்சியினின்றும் நாட்டில் சமரஸம் சமாதானம் நிலவவேண்டி ஸ்ரீமான் ஜயகர், ஸர். ஸாப்ரு ஆகிய இருவரும், இராஜப்பிரதிநிதியிடமும் மகாத்மா காந்தியிடமும் தூது சென்றனர். இவர்களுடைய * 'சமரஸ முயற்சி' பலிக்க

---

* சமரஸ முயற்சி :—இராஜப்பிரதிநிதிக்கும் மகாத்மாவுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துகள், 11 திட்டங்கள், நிபந்தனைகள், மற்று முதலான பல விஷயங்களும் கோர்வையாக அடங்கியிருக்கின்றன. விலை அணா 8.

வில்லை. சட்ட மறுப்பும், மறியலும் மும்முரமாக நடந்து வந்தன.

இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுக்கு உசிதமாய்த் தோன்றிய பலரை லண்டனில் நடைபெற்ற சர்வகட்சி மாக நாட்டுக்கு அனுப்பிவைத்தனர். ஆங்கே இந்தியாவின் சீர் திருத்தத்துக்கான பல வழிகளையும் பற்றிப் பேசலானார்கள். ஆனால் கிளர்ச்சி செய்துகொண்டுவந்த காங்கிரஸ் மகா சபையினர், இதில் கலந்துகொள்ளாதிருந்தது பெருங்குறையென்பது யாவரும் உணரக்கூடியதாயிருந்தது. மகாத்மா காந்தியையும், காங்கிரஸ் காரியக் கமிட்டியையும் விட்டு, எவ்விதத்தும் ஒரு முடிவுக்கு வரமுடியாதென்று தீர்க்காலோசனை செய்து, பிரதம மந்திரியாகிய மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு இறுதியாக சர்வகட்சி மகாநாட்டில், ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

பிரதம மந்திரி அறிக்கை

பிரதம மந்திரியின் பிரசங்கம்

மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு லண்டன் சர்வ கட்சி மகாநாட்டில் 1931 ஜனவரி மீ 19உ பின்வருமாறு பேசினர்:—

நாம் இப்பொழுது கடைசியாகக் கூடியிருக்கிறோம். இம் மகாநாட்டின் அக்கிராசனத்தை வகிக்கையில் எனக்கிருந்த சந்தோஷம் வேறு எந்தக் கூட்டத்திலும் இருந்ததில்லை. முதலில் இந்த மகாநாட்டில் நான் பேசினபோது இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்தவேண்டிய விஷமாக நீங்கள் எங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை என்றும், இந்தியாவின் சுயராஜ்ய முறையை நிர்ணயிக்க எங்களுடன் கலந்து

வேலைசெய்ய நீங்கள் வந்திருப்பது எங்களுக்குத் தெரியுமென்றும் சொன்னேன்.

பிரிட்டிஷார் செய்துள்ளவை

இந்த மகாநாட்டின் நடவடிக்கைகளால் நீங்கள் ஏமாந்து போயிருப்பினும் திருப்தி யடைந்திருப்பினும் நீங்கள் திரும்பிப்போனதும் உங்களை நாங்கள் சம அந்தஸ்துடன் நடத்தினோம் என்பதை ஜனங்களுக்குச் சொல்லுவீர்கள் என்று நம்புகிறேன். "எங்களுடைய கட்சியை எடுத்துச் சொன்னோம்; கூடுமானவரையில் நமக்கு இணங்கவேண்டிய மனோபாவத்துடன் நாங்கள் சொன்னதையெல்லாம் அவர்கள் காதில் வாங்கிக்கொண்டார்கள். அவர்களுடைய கட்சியையும் எங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக் கவனித்தால், இந்தியாவில் பல விஷயங்கள் அபூர்வமானவையாக இருப்பதால் நாமும் அவர்களும் ஒத்துப்போகவேண்டுமென்று எங்களுக்குத் தெரிந்தது என்று சொல்லுவீர்கள்" என்று நம்புகிறேன். நாங்கள் எவ்வளவு விட்டுக்கொடுக்கக் கூடுமோ அவ்வளவு விட்டுக்கொடுக்க இசைந்துள்ளோம். நீங்கள் இந்தியாவுக்குப் போய்ப் பொது ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்துகொள்ளுங்கள்; நாங்களும் இங்கு பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். உங்களுக்காக நாங்கள் பொதுஜனங்கள் முன் பரிந்து பேசி அவர்கள் ஒப்புக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். இதுவரையில் நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று கவனியுங்கள். ப்ரிட்டிஷார் எக்காலமும் இந்தியாவை அடக்கி யாள விரும்பவில்லை என்று உங்களுக்கு எத்தனையோ உறுதி மொழிகள் கூறப்பட்டிருக்கின்றன. கல்வி தேசத்தில் பரவும்படி நாங்கள் செய்யவில்லையா?

ராஜீய ஆசைகளை உங்களுக்குண்டாக்கக்கூடிய புஸ்தகங்களைப் பாடங்களாக ஏற்படுத்தவில்லையா? இந்தியாவை எப்பொழுதும் அடக்கி யாள நாங்கள் விரும்பியிருந்தால் எங்களுடைய ராஜாக்களும் ராணிகளும் உங்களுக்கு உறுதி மொழி கூறியிருப்பார்களா?

மார்லி-மின்டோ அரசியல் முறை ஏற்படுத்தப்பட்ட போது, அம்முறை முற்போக்கில் கொண்டு விடும்படி அதிலேயே விதை போடப்பட்டிருக்கவில்லையா? மாண்டேகு செம்ஸ்போர்டு அரசியல்முறை ஏற்படுத்தப்பட்டபோது அதனுடன் நின்றுவிடாது இன்னும் அபிவிருத்தி ஏற்படுமென்று சொல்லப்படவில்லையா? ஸைமன் கமிஷனை நியமித்தும் மாண்டேகு செம்ஸ்போர்டு முறையில் அடங்கியுள்ள ஒரு உறுதி மொழியை நிறைவேற்றவே.

கமிஷன் செய்த வேலை

ஸைமன் கமிஷன் பேஷான வேலை செய்திருக்கிறது. அதன் சிபாரிசுகளை நீங்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிடினும் ஒரு விஷயம் நிச்சயம். அந்தக் கமிஷனுடைய சிபார்சுகள் இல்லையானால், இந்த மகா நாட்டில் நீங்களும் நாங்களும் ஒத்துப்போயிருக்கமுடியாது. அந்தக் கமிஷன் அங்கத்தினர்களிடத்தில் இந்தியா எவ்வளவு நன்றி பாராட்டினாலும் தகும். அந்தக் கமிஷன் நியமித்தபோதே பிரிட்டிஷ் பார்லிமெண்டின் பிரதிநிதிகளும் இந்தியாவின் பிரதிநிதிகளும் கலந்து யோசனை செய்யவேண்டுமென்று எங்களுக்குள் முடிவு செய்துகொண்டோம். ஆகையால்தான் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். இந்தியாவின் முக்கியமான ராஜீயக் கட்சிகள் இங்கு வந்திராததற்கு நான் வருந்துகிறேன்.

உலகிற்குக் கேடு செய்வது யார்?

இராஜீய வியவகாரங்களில் நான் அமிதவாதி என்று நீங்களும் என்னுடைய சகாக்களும் நினைப்பது எனக்குத் தெரியும். நான் அமிதவாதியாயினும் மிதவாதியாயினும் எனக்கொருகொள்கையுண்டு. அதென்னவெனில் எவர் ஒரு ஜனத்திற்கும் மற்றொரு ஜனத்திற்கும் மாச்சரியத்தை உண்டு பண்ணுகிறாரோ அவர் உலகில் சமாதான மேற்படும்படி செய்யமாட்டார் என்பதே. சம்சயத்தை எவர் உண்டு பண்ணுகிறாரோ, அவர் ஒத்துழைப்பு சாத்தியப்படக்கூடாமற் செய்கிறவர். அவர் உலகிற்கு நன்மை செய்யக்கூடியவரென்று சென்ற இரண்டரை மாதங்களில் நாம் இங்கு செய்துள்ள வேலைகளின் பலனாக இந்தியாவின் வாலிபர்கள் நியாயமான வாதத்தைக்கொண்டே பிறரை ஜயிக்கவேண்டுமென்று நினைப்பார்களானால் அப்படி நினைப்பதன்மேல் அவர்கள் சாத்தியமான வேலைகளைச் செய்யக் கிளம்புவார்களானால், இந்திய ஜாதி முன்னுக்குப் போகும்படி நாம் செய்தவர்களாவோம்.

வகுப்புப் பிரச்சினைகள்

வகுப்புப் பிரச்சினைகள் போன்ற விஷயங்கள் நமது வழியை மறுத்துவிட்டன. உங்களுடைய தகராறுகளை நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுடைய இஷ்டம். நாங்கள் இந்து அபிமானிகளுமல்ல யாரையும் அபிமானிக்கவுமில்லை. உங்களுக்குள் இருக்கும் அபிப்பிராய பேதத்தை உபயோகப்படுத்தி விஷமம் செய்ய நாங்கள் விரும்பவில்லை அதை நீங்கள் நம்பவேண்டாம். உங்களுக்குள் சமரஸ மேற்படவேண்டு மென்பதே எங்களுடைய பிரார்த்தனை. வகுப்புப் பிரச்சினைகளைப்பற்றி மறுபடியும் நான் பிரஸ்தா

பிக்க வேண்டியிருக்கும். ஆனால், ஒரு] சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மகா நாட்டில் கலந்து பேசியதன் பலனாக, வகுப்புவாதிகள் சிலருடைய மனோ பாவமும் மாறியிருக்கிறது. தங்களுடைய வகுப்புகளுக்கு உண்மையாக நடந்துகொள்ளவேண்டி யிருப்பதால் உடன் பாட்டிற்கு வரக்கூடவில்லையே என்று அவர்கள் வருந்துகிறார் கள். நிர்ப்பந்தத்தின்மேல் ஏற்படக்கூடிய உடன்பாடு பலன் தராது, சிறு சமுகங்களின் பிரதிநிதிக்கு சிலபாத்தியங்களைத் தெரிவித்துக்கொண்டதை நான் கேட்டுக்கொண்டிருந்திருக் கிறேன். ஒரு விஷயத்தை நினைப்பில் வைத்துக்கொள்ளுங் கள்: இங்கு கூடியுள்ள நாங்கள் உங்களுக்கு சில உரிமைகளை அளித்துவிடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இன் னின்ன அசௌகரியங்கள் உங்களுக்கு ஏற்படுத்தப்படக் கூடாதென்று நாங்கள் சட்ட மியற்றி விடுவதாகவே வைத் துக்கொள்ளுங்கள். அதெல்லாம் சரியாகப் பலன் தருவது உங்களுடைய ஜனங்களின் புத்திசாலித்தனத்தைப் பொறுத் தது. அவர்களுடைய மனோவலிமையைப் பொறுத்தது; வார்த்தைகள் காரியமாவது எங்களைப் பொறுத்ததல்ல.

ஸமஷ்டி முறை

சமஷ்டி அரசியல் முறையே சிரேஷ்டமான தென்று எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். சமஷ்டி முறை சாத்தியப்படும்படிச் சமஸ்தானாதிபதிகளாகிய ராஜாக்கள் இணங்கிவந்ததைப்பற்றி எல்லோரும் புகழ்ந்து பேசியபிறகு நான் என்ன சொல்லக்கூடும்! சமஸ்தானாதிபதிகள் வருவ தற்குமுன் எவ்வித அரசியல் முறையை நிர்ணயிப்பதென்ற நிச்சய மேற்பட்டுவிடவில்லை. அவர்களுடைய தேசபக்தியே சமஷ்டிமுறை சாத்தியப்படும்படிச் செய்தது. அதற்காக

இந்தியாவும் பிரிட்டனும் மகாராஜாக்களிடத்தில் மிகவும் நன்றி பாராட்டவேண்டும்.

பாதுகாப்புகள்

அந்த அரசியலை நிர்மாணிப்பதில் சில ஆபாசங்கள் குறுக்கே தோன்றியிருக்கின்றன. பாதுகாப்புக்களை ஏற்படுத்துவது என்ற வார்த்தையைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. (சிரிப்பு) அது என் குற்றங்களில் ஒன்றெனக் கருதுகிறேன். அந்த வார்த்தை இயற்கையாக உங்கள் மனதில் மிகுந்த சந்தேகத்தை யுண்டுபண்ணுகிறது. நாம் பகுத்தறிவை உபயோகித்து யோசிப்போம். இங்கு கூறப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கள் மூன்று தலைப்புகளின் கீழ்வருகின்றன.

கவர்னர், கவர்னர் ஜெனரல், மன்னர்பிரான் அல்லது வேறு யாருக்காவது விசேஷ அதிகாரங்களை யளிப்பது ஒரு பிரிவு. இந்த பந்தோபஸ்து சுயேச்சையான ஒவ்வொரு அரசியலிலும் இருக்கும். அதிகாரத்திலுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ராஜ்யத்தில் சிறந்த ஸ்தானத்திலுள்ள ஒருவரால், கவர்ன்மெண்டின் சாதாரண அதிகாரங்கள் பயன் படாமற் போய்விடும்போது அந்த அதிகாரம் உபயோகிக்கப் படுவதாக விருக்கும். என்னுடைய இந்தியா நண்பர்களாகிய நீங்கள் பிறர் உதவியில்லாமலும் பிறர் யோசனையைக் கேளாமலும் உங்கள் தேசத்திற்கான அரசியலைத் தயாரித்த போதிலும் இம்மாதிரி பந்தோபஸ்து அதில் இல்லாமல் நீங்கள் தயாரிக்க முடியாது (கரகோஷம்).

அடுத்தாப்போல் இரண்டாவது வித பந்தோபஸ்து இருக்கிறது, அதில் இரண்டு பிரிவுகளிருக்கின்றன. உங்கள் சார்பாக நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் காரண

மாக இந்தியா மந்திரியோ அல்லது மன்னர்பிரானே அளித்த உத்தரவாதங்கள் இப்போதைப்போல் புதிய அரசியலின் கீழும் பொறுப்பாக விருக்குமென்பது முதல் பிரிவிலடங்கியது. வரவு செலவும் இப்போதுள்ள உத்தியோகவர்க்கங்களும் இதற்குத் தகுந்த உதாரணங்களாகும். இந்தியாவின் நன்மையை உத்தேசித்து இந்த உத்தரவாதத்தை உலகத்திற்கு வியக்தமாகத் தெரிவித்துவிடவேண்டும். நாங்கள் தலையிடவேண்டுமென்று விரும்பவில்லை. எங்களுக்கு அந்தப் பணம் வேண்டுமென்பது கூடவில்லை. இந்தியா இந்தக் கடமைகளையும் பொறுப்புகளையும் வகிக்குமா என்று சந்தேகமேற்பட்டால் இந்தியாவின் அந்தஸ்திற்குக் குறைவேற்பட்டுவிடும். உலகத்தில் இந்தியாவின் மதிப்பை நல்ல ஸ்திதியில் வைப்பதற்காகவே அந்தப் பிரிவை ஒதுக்கிவைக்கவேண்டியிருக்கும்.

பிறகு இன்னொரு பிரிவு இருக்கிறது. பூராவும் இந்தியாவைப்பற்றியதாக வில்லாமல் மாறுதலுக்குக் கொஞ்சம் காலம் வேண்டியதாகச் சில விஷயங்களிருக்கின்றன. உங்களுடைய பொறுமை சோதனைக்குட் படுத்தப்பட்டுவிட்டது எனக்குத் தெரியும். நீங்கள் நீண்ட காலம் காத்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் மிகவும் வேகமாகச் செல்லுகையில் காலத்தில் கருமித்தனம் காட்டக்கூடாது. அமைதியாயும் திடமாயும் படிப்படியாயும் கட்டப்படுவது நிலைத்து நிற்கும். அவசரப்பட்டுக் கட்டப்படுவது வீணாகி அமிழ்ந்துபோய்விடும்.

வகுப்புகளுக்குப் பாதுகாப்பு

பிறகு வகுப்புகளைப்பற்றியதான மூன்றுவது வித பந்தோபஸ்து இருக்கிறது. நான் இதைப்பற்றி உங்களிடம் பலதடவை கூறியிருப்பதையே மீண்டும் கூறுகிறேன். நீங்

கள் உங்களுக்குள்ளாகவே பந்தோபஸ்துக்களைச் சமாஸமாக ஏற்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டால் கவர்ன்மெண்டார் அரசியலில் அதற்கான ஷரத்துக்களைச் சேர்க்கவேண்டியிருக்கும். ஆனால் உங்களுக்கும் ஏற்படும் முடிவுதான் சிறந்ததாக விருக்குமென்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். நீங்கள் இங்கே கடைசி வார்த்தையைக் கூறிவிட்டதாக நாங்கள் கொண்டு உங்களை விட்டுவிடப்போவதில்லை. ஏனெனில் நீங்கள் முடிவான வார்த்தையைத் தெரிவித்துவிட்டதாக நாங்கள் நம்பவில்லை. இந்தியாவில் சிறியவை, பெரியவை ஆகிய எல்லா வகுப்புகளுக்கும் அரசியலில் பந்தோபஸ்து ஏற்படுத்தப்படவேண்டும். (கரகோஷம்) அரசியலில் அந்த பந்தோபஸ்துக்கள் சேர்க்கப்படுவது மாத்திரமன்றி அது வகுப்புகளுக்குத் திருப்தி யளிப்பதாக விருக்கவேண்டும். நீங்கள் உங்கள் கையிலுள்ளதை விட்டுவிட்டு உங்களால் செய்யமுடியவில்லையென்று பிறர் அதைச் செய்யுமாறு விடப்போகிறீர்களா?. (கரகோஷம்) இந்த பந்தோபஸ்துக்களில் ஒரு பெரிய அபாயமிருக்கிறது. ஏனெனில் அரசியல் நடத்தி வைப்பதில் அது முக்கியமானதாகும். பொறுப்பான மந்திரிகள் ஜனங்களுக்குப் பிடிக்காத ஒரு விஷயத்தை நடத்தி வைக்க விரும்பினல், அதை ராஜப்பிரதிநிதியோ கவர்னரோ தங்கள் விசேஷ அதிகாரத்தை உபயோகிக்குமாறு விட்டுத் தாங்கள் தப்பித்துக்கொள்ள முடியக்கூடாது. (கேளுங்கள்)

நிர்வாக சபையில் ஒருமித்த பொறுப்பு

மேலும் இந்த விஷயம் நம்முள் கூடவிருக்கிறது. நிர்வாக சபையில் ஒருமித்த பொறுப்பு இருக்கவேண்டும். (கரகோஷம்). நான் இந்த அபிப்பிராயத்தை இதற்குமேல் வற்புறுத்தப்போவதில்லை. நிர்வாக சபையை அமைப்பதில்

பெரிய வேலை பொறுப்பைப்பற்றியதல்ல. நிர்வாக சபையின் மூலம் சட்ட சபையின் நம்பிக்கையையும் தனிக் கொள்கையை நடத்திவைப்பதில் உண்டுபண்ணுவதுதான் கஷ்டமானது.

வருங்காலத்தை ஒட்டி, பல உபக் கமிட்டிகளின் யதாஸ்துக்களும் அவற்றின்மேல் உங்களுடைய அபிப்பிராயங்களும் சேர்த்து நம்முன் வந்திருக்கின்றன.

தனிக் கமிட்டிகளின் வேலை

இத் தனிக் கமிட்டி யாதாஸ்துகளைக் கவர்ன்மெண்டார் ஊன்றிப் பரிசீலனைசெய்ய விருக்கின்றனர். முதல் கமிட்டியின் தலைவர் ஹோதாவில் லார்டு சான்ஸலர் உங்கள் புகழையும் அன்பையும் தமது வேலையின் பயனாகப் பெற்றிருக்கிறார். அக் கமிட்டியின் யாதாஸ்து இன்னும் முடிவாகத் தீர்த்ததாக வில்லாமல் ஒரு ஆதாரமாகவே யிருக்கிறது. இதில் எவ்வளவோ கஷ்டங்களிருக்கின்றன. அதைச் சரியான ஒரு அரசியல் அமைப்பாக நாம் தயாரிக்கவேண்டும். இரண்டாவது தனிக் கமிட்டி மாகாணங்களில் பூரண பொறுப்பாட்சியளிப்பதை அங்கீகரித்திருக்கிறது. இச்சமயத்தில் அவசியமென்று கருதப்பட்ட சில விசேஷ அதிகாரங்களே எல்லோர் சம்மதியின்பேரில் கவர்னருக் களிக்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மையோர் கமிட்டியைப்பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். அதில் இன்னும் ஒரு முடிவேற்படவில்லை. பர்மா தனிக் கமிட்டியின் முடிவு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் அம் முடிவை ஏற்று பர்மாவைப் பிரிக்கவும், பிரிவினைக்கான நிபந்தனைகளைத் தயாரிக்கவும் கவர்ன்மெண்டார் நடவடிக்கை யெடுத்துக் கொள்வார்கள். ஐந்தாவது தனிக் கமிட்டி வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திற்கு மற்ற மாகாணங்களைப்போல்

அந்தஸ்து அளிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. ஆனால் அதன் விசேஷ நிலைமைக் கநுகுணமாகச் சில நிபந்தனைக ளேற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஓட்டுரிமைக் கமிட்டி ஒரு நிபுணர் கமிட்டி நியமிக்க சிபார்சு செய்திருக்கிறது. அக் கமிட்டி இனி நியமிக்கப்படும்.

இந்திய ஸாண்டுஹேர்ஸ்ட்டு

பாதுகாப்பைப்பற்றிய ஏழாவது கமிட்டியின் சிபார்சுகள் உடனே கவனிக்கப்படும். பூர்ண அரசியல் திட்டத்தை அபிவிருத்திசெய்வதில் அவசியமானபடி தாமதமின்றி அதை நிறைவேற்றப்படும். இந்தியாவில் ஸாண்டுஹேர்ஸ்ட்டு கலாசாலை யேற்படுத்தப்படும். (கரகோஷம்) எட்டாவது கமிட்டி ஸர்விஸ்களைப்பற்றி முடிவுசெய்திருக்கிறது. புதிய அமைப்பின்கீழ் விதிகளின்படி இப்பொழுதுள்ள சர்விஸினரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதாக இக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அத்துடன் எதிர்காலத்தைப் பற்றியும் அது பரிசீலனை செய்திருக்கிறது.

ஒன்பதாவது கமிட்டி ஸிந்து விஷயத்தைப் பரிசீலனை செய்து பிரிவினை உண்டுபண்ணுவதென்ற கொள்கையை ஆதரிக்கிறது. இருவர்தான் இதற்கெதிராக விருந்தனர். செல்வ விஷயம் முதலியவற்றைப் பரிசீலனை செய்து இதன் சாத்தியங்களை நிர்ணயிக்க ஒரு நிபுணர் கமிட்டி நியமிக்கப்படும். இந்த உறுதிமொழிகளை நான் வெளியிடுகிறேன்.

நிர்வாக முறையால் மாறுதல்

நிர்வாகத்தில் அதிக அநுபவமுள்ள உங்களில் சிலர் இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி நிர்வாக விஷயத்தில் இம்பொழுதே செய்யக்கூடிய மாறுதல்கள் இந்த அறிக்கையை

யனுசரித்து செய்யப்படவேண்டுமென்று வற்புறுத்தினர். அவ்விதம் நாங்கள் கட்டுப்படுத்திக்கொள்வதற்கில்லை. ஆனால் நிர்வாக அனுபவமுள்ள இந்தியர்களுடன் கலந்துகொண்டு இவ் விஷயத்தைப் பரிசிலனை செய்கிறோம். அந்தப் பரிசீலனை யின்பேரில் நாங்கள் நடவடிக்கை யெடுத்துக்கொள்ளுவதா இல்லையா யென்பதை முடிவு செய்கிறோம்.

அரசியல் கைதிகள் விடுதலை

இச்சமயத்தில் ஸர். டேஜ்பகதூர் இன்று காலை என்னிடம் சுருக்கமாக வெளியிட்ட வேண்டுகோளைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர் மிகுந்த புத்திசாலித்தனத்துடன் வெகு சுருக்கமாக அந்த வேண்டுகோளை வெளியிட்டார். அது எனது மனதில் பதிந்திருக்கிறதென்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமுள்ள சம்பந்தத்தில் இந்த மகாநாடு ஒரு புதிய சகாம்தத்தை ஆரம்பிக்கவேண்டுமென்பது எனது விருப்பம். டாக்டர் ஸாப்ரு இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் வெளியிட்டுள்ள வேண்டுகோள் இந்தியாவில் ஏற்பட்டு அமைதியேற்படுவதாக உறுதியளிக்கப்படும் பக்ஷத்தில் இம் மகாநாட்டில் அவருடைய பல சகபாடிகள் வற்புறுத்தும் அவர் வேண்டுகோளை ஏற்று நடக்கப்போவதில் கவர்ன்மெண்டார் தயங்கமாட்டார்கள். (கரகோஷம்)

இனிச் செய்யவேண்டிய வேலை

நமது வேலைகளைப் பூர்த்தி செய்ய நாம் இனி என்ன செய்யவேண்டுவதென்ற கேள்வி இப்பொழுது பிறக்கிறது. அரசியல் திட்டம் எவ்வித மிருக்கவேண்டுமென்பதைப்பற்றி நாம் ஒரு முடிவு செய்திருக்கிறோம். ஆனால் இந்தத் திட்

டம் வெற்றிகரமாக அமுல் நடைபெறுவது நிலைமையைப் பற்றியும் அமைப்பைப்பற்றியும் நாம் தீரப் பரிசிலனை செய்வதைப் பொறுத்திருக்கிறது. இங்கிலாந்தில் அமுல் நடக்கும் முறையே சிறந்ததெனக் கூறுதற்கில்லை. இதில் பல குறைகளிருப்பதை நான் அறிவிக்கக்கூடும். யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜப்பான் யுத்தகாலத்திற்கு முந்தியே ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய தேச அமைப்புகளிருக்கின்றன. பல தேசங்களிலும் பலவிதமாகச் சட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை நாம் பரிசிலனை செய்யலாம். அவற்றைக்கொண்டு உங்களுடன் கலந்து இந்தியாவுக்கான ஒரு முறையை நாம் தயாரிக்கலாம். அரசியலை நடத்துவதில் அவசியமான சில நிபந்தனைகள் இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டன. பாக்கி விஷயங்களையும் கமிட்டிகளில் வெளியிடப்பட்டுள்ள மறுப்புரைகளையும் நாம் இனி முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

ஸமஷ்டியில் சமஸ்தானங்கள் நிலை

உதாரணமாக ஸமஷ்டி திட்டத்தில் சமஸ்தானங்களின் நிலை என்னவென்பதை முடிவு செய்யவேண்டி யிருக்கிறது. சமஸ்தானங்கள் ஸமஷ்டி கவர்ன்மெண்டிற்கு உட்படுத்த விரும்பாத விஷயங்களில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடமே அவற்றிற்குச் சம்பந்த மிருக்கவேண்டும். (கரகோஷம்) சட்ட சபை அமைப்பது, நிர்வாகக் கவர்ன்மெண்டை யமைப்பு முதலிய விஷயங்களிருக்கின்றன. நடை முறை விஷயங்களையும் முடிவுசெய்யவேண்டி யிருக்கிறது. வகுப்புப் பிரசனையும், மற்றப் பாதுகாப்பு விஷயங்களு மிருக்கின்றன. இப்பொழுது ஏதாகிலும் திட்டமான ஒரு நகல் திட்டத்தைத் தயாரிக்கவேண்டிய சமய மேற்பட்டிருக்கிறது. இவ்விதம்

தயாரிக்க உட்காரும்பொழுதுதான் எதை விட்டிருக்கிறோ மென்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். இவ்வேலையை இரு தேசங்களிலுமுள்ள அதிகார வர்க்கத்தினரிடம் ஒப் படைப்பதற்கில்லை. (கரகோஷம்) தகுதியுள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுடையவும் இரு தேச ஸிவிலியன்களு டையவும் உதவி கொண்டு அரசியல்வாதிகளாலே இது தயாரிக்கவேண்டும். சென்ற 10 மாதங்களில் பார்லிமெண்டி லிருந்த ஒற்றுமை இனிச் செய்யவேண்டிய வேலைகளிலு மிருந்து வருமென நான் நம்புகிறேன். (கரகோஷம்)

இந்தியாவில் செய்யவேண்டிய வேலை

மற்றொரு முக்கிய விஷய மிருந்துவருகிறது. நேரில் நாம் கலந்துகொண்டு பேச நேர்ந்தது வெற்றிக்கு ஒரு முக் கிய காரணமாகும். மகாநாடுகள் விஷயத்தில் எனக்கு மிகுந்த அநுபவ மிருந்திருக்கிறது. கடிதப் போக்குவரத்துகளைவிட நேரில் கலந்து பரஸ்பரம் அபிப்பிராயங்களை வெளியிடுவத னுல் நாம் எளிதில் ஒரு தெளிவடையக்கூடும். இதே முறையை இனியும் நான் பின்பற்ற உத்தேசித்திருக்கிறேன். இதில் பல கஷ்டங்களிருக்கின்றன. இந்தியாவில் செய்ய வேண்டிய வேலை பெரிதும் இருக்கிறது. இந்தியாவில் இம் முடிவு சம்பந்தமான அறிவைப் பெருக்கி விவரங்களை வெளி யிடவேண்டும்.

புதிய ராஜப்பிரதிநிதியுடன் ஆலோசனை

புதிய ராஜப்பிரதிநிதியுடன் உடனே கலந்தாலோசனை செய்ய நான் உத்தேசித்திருக்கிறேன். அவர் இன்னுஞ் சில தினங்களில் இங்கு வருகிறார். இதுவரையில் செய்யப்பட்

டுள்ள வேலையை அவரிடம் கூறுகிறேன். நான் கூறியுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு திட்டத்தை ஏற்கக்கூடுமென நம்புகிறேன்.

சீர்திருத்தத்தைப்பற்றிக் கவர்ன்மேண்டு கோள்கை

கவர்ன்மெண்டிலுள்ள எனது சசபாடிகள் அறிவிக்குமாறு அநுமதித்துள்ள பின்கண்ட அறிக்கையை நான் படிக்கிறேன் :—

> சில பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், விசேஷ சந்தர்ப்பங்களை சரிப்படுத்துவதற்கும், சிறுபான்மையோர் தங்கள் அரசியல் ஸிவில் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும், இடைக்காலத்திற்கான சில பாதுகாப்புகள் உண்டுபண்ணிக்கொள்ளவதுடன் இந்தியா கவர்ன்மெண்டிற்கான பொறுப்பை மத்திய சட்ட சபைக்கும் மாகாண சட்ட சபைகளுக்கும் மாற்றிவிடவேண்டுமென்பது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அபிப்பிராயமாகும். (கரகோஷம்) இடைக்காலத்திற்கான தேவைகளைத் திருப்திசெய்யச் சட்டப்படி அவ்விதம் செய்யப்படும் பாதுகாப்புகள் இந்தியா தனது கவர்ன்மெண்டிற்குத் தானே பூரண ஜவாப்தாரியாக ஆவதில் எவ்வித இடையூறு முண்டுபண்ணக்கூடாதவாறு, அந்தப் பாதுகாப்புகள் தயாரிக்கப்படவேண்டுமென்பதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கு விசேஷ அக்கரை யிருந்துவருகிறது. (கரகோஷம்)

பிரதம மந்திரி மேலும் பேசியதாவது :—இந்த அறிக்கையை வெளியிடுவதில் இம்மாதிரியான அரசியலை அமுல் நடத்துவதற்கு அவசியமெனக் கருதி யேற்படுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகள் இன்னும் முடிவாகத் தீர்மானிக்கப்பட

வில்லையென்பதை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் உணர்ந்திருக்கின்றனர். ஆனால் இங்கு செய்யப்பட்டுள்ள வேலையின் பயனாக அவை ஒருவழியாக முடிவு செய்யப்பட்டிருக்கிறபடியால் இந்த அறிக்கைக்குப்பின் செய்யப்படும் பேச்சு வார்த்தைகள் மூலம் அவை வெற்றிகரமாக முடிவு செய்யப்படுமென்ற நம்பிக்கை யிருந்துவருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவும் சுதேச சமஸ்தானங்களுமடங்கியதாயும் இரட்டை சட்டசபைகளுள்ளதாயு மிருக்கும் ஒரு ஸமஷ்டி கவர்ன்மெண்டு முறை யேற்படுத்துவதென்ற எண்ணத்தை முக்கிய ஆதாரமாகக்கொண்டே மகாநாட்டின் விவாதங்களெல்லாம் நடைபெற்றிருக்கின்றதைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முக்கியமாகக் கவனித்திருக்கின்றனர். புதிய ஸமஷ்டி கவர்ன்மெண்டின் முக்கியமான அமைப்பு முதலிய விவரங்களை மேற்கொண்டு சுதேச மன்னர்களுடனும் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசித்த பின்னர் அதில் முடிவு செய்யவேண்டும். அதனிடம் ஒப்படைக்க வேண்டியதான விவரங்களைப்பற்றியும் மேற்கொண்டு விவாதிக்கவேண்டும். ஏனென்றால் ஸமஷ்டிக் கவர்ன்மெண்டு, சமஸ்தானங்கள் பிரியப்பட்டு அனுமதிக்கும் விஷயங்களில் மாத்திரம் ஆதிக்கியம செலுத்துவதாயிருக்கும். (கரகோஷம்) சமஸ்தானங்கள் ஸமஷ்டிக்கு அனுமதிக்காத விஷயங்கள் விஷயத்தில் சமஸ்தானாதிபதிகளுக்கு ஏஜண்டான ராஜப் பிரதிநிதி மூலம் மன்னர்பிரானுடன் அவர்களுக்குச் சம்பந்தமிருக்கவேண்டுமென்ற கொள்கையில் சமஸ்தானங்கள் ஸமஷ்டிக் கவர்ன்மெண்டில் சேர்ந்திருக்கும். (கரகோஷம்) ஸமஷ்டித் தோரணையில் ஸ்தாபிக்கப்படும் சட்ட சபைகளை வைத்துக்கொண்டு இந்திய நிர்வாகிகள் சட்ட சபைக்குப் பொறுப்பாகயிருக்கவேண்டுமென்ற கொள்கையைப் பிரிட்டிஷ் கவர்ன்

மெண்டார் ஒப்புக்கொள்ளுவார்கள். இப்பொழுதுள்ள நிலைமையில் ராணுவம், வெளிநாட்டு சம்பந்தம் ஆகியவை ராஜப் பிரதிநிதிக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்களாக விருக்கும். இவ் விஷயங்களை நிர்வகிப்பதற்கு அவசியமான அதிகாரம் ராஜப் பிரதிநிதிக்களிக்க ஏற்பாடு செய்யப்படும். அத்துடன் ராஜப் பிரதிநிதி கடைசிபக்ஷமாகக் கவர்ன்மெண்டின் அமைதிக்கு ஜவாப்தாரியாகவிருப்பதாலும், சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாக்க அவர் ஜவாப்தாரியாக விருக்கவேண்டுமாதலாலும், இவற்றிற்காகவும் அவருக்கு விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும்.

செல்வ விஷயங்களில் நிபந்தனை

செல்வ விஷயம் சம்பந்தப்பட்டவரையில் இதற்கான அதிகாரத்தைச் சட்ட சபைக்கு மாற்றுவதில், இந்தியா மந்திரியால் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பொறுப்புகளையும் இந்தியாவின் நாணய மதிப்பையும் பாதுகாக்கக்கூடிய வழியில் சில நிபந்தனைகளேற்படுத்தப்படவேண்டும். ரிசர்வ் பாங்கி, கடன் பாத்தியம், நாணய பரிவர்த்தனை முதலியன உள்பட இதில் சில பாதுகாப்புகளையுண்டுபண்ண ஸமஷ்டித் திட்டக்கமிட்டி சில வழிகளைக் குறிப்பிட்டிருக்கிறது. புதிய அரசியல் திட்டத்தில் இவற்றிற்கு ஏதாகிலும் ஏற்பாடு செய்யவேண்டுமென்பது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அபிப்பிராயமாகும். செல்வ விஷயத்தில் நம்பிக்கையிருந்து வரவேண்டி இந்தப் பாதுகாப்புகளை இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களும் அங்கீகரிக்கவேண்டியது மிக அவசியமாகும். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இந்தியா கவர்ன்மெண்டு வரிகளை வசூலிக்கவும், ஒதுக்கப்படாத இலாகாக்களில் அதைச் செலவழிக்கும் பூரண செல்வ விஷயப்

பொறுப்புப் பெற்றிருக்கும். அதாவது, இப்பொழுதுள்ள நிலைமையில், மத்திய சட்ட சபையும், நிர்வாக அதிகாரிகளும் இரட்டையாட்சிக் குட்பட்டிருப்பதாக விருக்கும். இந்த முறையைப் புதிய அமைப்பில் நாம் புகுத்தவேண்டும்.

விசேஷ அதிகாரங்கள்

இச் சந்தர்ப்பத்தில் விசேஷ அதிகாரங்களளிக்கவேண்டுவது அவசியமாகிறது. மிகவும் சுதந்திரமான அரசியலைத் தயாரிக்கும்பொழுதுகூட இம்மாதிரியான விசேஷாதிகாரங்களை யுண்டுபண்ணுவது சகஜமாகவிருக்கிறது. ஆனால், இவ்வதிகாரத்தை உபயோகிப்பதற்கான சந்தர்ப்பமேற்படாமல் பார்த்துக்கொள்ள எவ்வித ஜாக்கிரதையும் எடுத்துக்கொள்ள வேண்டும். (ஸபாஷ்) உதாரணமாக மந்திரிகள் தங்களுடைய தான பொறுப்பை நிவர்த்திக்கவேண்டி அவர்கள் விசேஷ அதிகாரங்களை நம்பியிருப்பதென்பது விரும்பத்தக்கதல்ல. ஏதோ அவசர சந்தர்ப்பத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இந்த அதிகாரத்தை சகஜமாக உபயோகித்துப் பொறுப்பாட்சி அபிவிருத்தியடைவதைக் கெடுக்கக்கூடாது. இதில் எவ்வித தப்பப்பிராயமு மிருக்கவேண்டாம்.

மாகாணங்களின் அமைப்பு

கவர்னரின் மாகாணங்கள் பூர்ணப் பொறுப்பாட்சித் தோரணையில் அமைக்கப்படும். மாகாண கவர்ன்மெண்டு மந்திரிகள் சட்ட சபையினின்று நியமிக்கப்படுவார்கள். மாகாணங்களில் பூரண சுய ஆட்சி யேற்படும்வகையில் மாகாணக் கவர்ன்மெண்டு விஷயங்கள் தயாரிக்கப்படும். ஸமஷ்டி கவர்ன்மெண்டு விஷயங்களைப் பற்றியவரையில் மாத்திரம் இதன் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படும். அகில இந்தியா

வைப்பற்றிய விஷயங்களிலும் ஸமஷ்டி கவர்ன்மெண்டிற்குப் பொருப்பிருந்துவரும். அமைதிக்குப் பங்கமேற்படும் நிலைமையிலும், சட்டப்படி சிறுபான்மையோர் முதலியோருக்கேற்பட்டுள்ள உரிமைகள் பாதிக்கப்படும்பொழுது, மிகவும் விசேஷப்படியான நிலைமையிற் உபயோகிக்கப்படவேண்டிக் குறைந்தபக்ஷம் விசேஷ அதிகாரங்களே கவர்னர்களுக்களிக்கப்படுகின்றன. மகாணங்களில் சுய ஆட்சியேற்படுத்துவதில் சட்ட சபைகளை விஸ்தரிக்கவேண்டும். இன்னும் அதிகத் தாராளத்தன்மையில் தயாரிக்கப்பட்டுள்ள ஓட்டுரிமையில் சட்ட சபை தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்பது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அபிப்பிராயமாகும். அரசியல் திட்டம் தயாரிப்பதில், வகுப்புகளுக்கு ராஜீயப்பிரதிநிதித்துவமளிப்பதுடன் மத, வகுப்பு, ஜாதி வித்தியாசம் காரணமாக பிரஜா பாத்தியம் எவ்விதமும் பாதிக்கப்படாதவாறும் பார்த்துக் கொள்ளப்படும்.

அரசியல் கைதிகள் விடுதலை

அரசியல் கைதிகள் விடுதலை சம்பந்தமாக ஸர். தேஜ்பகதூர் ஸாப்ரு மிக உருக்கமான வேண்டுகோளை வெளியிட்டார். புத்திசாலித்தனத்துடன் மனதிளகும்படி அவர் வேண்டிக்கொண்டார். இது எனது மனதில் பதிந்திருக்கிறதென்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமுள்ள சம்பந்தத்தில் இம் மகாநாடு மூலம் புதிய சகாப்தம் ஆரம்பமாக வேண்டுமென்பது எனது விருப்பம். டாக்டர் சாப்ரூ இந்தியாவுக்கும் நமக்கும் செய்துகொண்டுள்ள வேண்டுகோள் இந்தியாவில் ஏற்கப்பட்டு இந்தியாவில் அமைதியேற்படும்பக்ஷத்தில், ஸர். ஸாப்ரூவால் வெளியிடப்பட்ட வேண்டுகோளுக்குப் பதில் நடவடிக்கை

யெடுத்துக்கொள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தயங்கமாட்டார்கள். (கரகோஷம்) ஸர். ஸாப்ரூவின் உணர்ச்சி மகாநாட்டில் மற்றும் பலருக்கும் இருந்து வருகிறதென்பதை நான் அறிவேன்.

தனிக் கமிட்டிகளின் வேலை

இந்திய நிலைமைக் கநுகுணமாக ஒரு அரசியல் திட்டம் தயாரிப்பதான கொள்கைகளைப் பரிசிலனை செய்யும் பல வேறு தனிக் கமிட்டிகளும் விரிவான அம்சங்களைப்பற்றி வெகுதூரம் பரிசிலனை செய்திருக்கின்றன. இதுவரையில் தீர்க்கப்படாத விஷயங்களும் வெகுதூரம் தீர்க்கப்படக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கின்றன. மகாநாட்டின் தன்மையை உத்தேசித்தும், லண்டனில் அவகாசம் குறைவாக விருப்பதை முன்னிட்டும், இத்துடன் வேலையை நிறுத்திக்கொண்டு இதுவரையில் செய்யப்பட்டுள்ள வேலையில் இந்தியாவின் அபிப்பிராயத்தை யுணர்ந்து ஏற்படும் கஷ்டங்களைத் தீர்க்க முயற்சிக்கலாமென்பது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அபிப்பிராயமாகும். நமது ஒத்துழைப்பு நீடித்து இதுவரையில் செய்யப்பட்டுள்ள வேலை ஒரு உருவாக வேண்டியதான காரியத்தைச் செய்யத் தாமதமன்னியில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒரு ஏற்பாடு செய்வார்கள். இதற்கிடையில் சட்ட மறுப்பில் சேர்த்துள்ளவர்கள் ராஜப்பிரதிநிதியின் வேண்டுகோளை ஏற்று இந்த அறிக்கைத் தோரணையில் ஒத்துழைக்கப் பொதுவாக ஒரு உணர்ச்சியிலிருக்கும்பக்ஷத்தில், அவர்கள் ஒத்துழைப்பையும் பெற முயற்சி யெடுத்துக்கொள்ளப்படும்.

இக் கூட்டத்தில் பரஸ்பரம் அறிந்துகொண்டு வேலை செய்ததுதான் அபிப்பிராய பேதங்களைத் தீர்த்து பாத்

தியதைகளை திருப்தி செய்யச் சிறந்த முறையாக விருந்தது. புதிய அமைப்பு பார்லிமெண்டில் நிறைவேறவும் இருதேச ஜனங்களின் நல்லெண்ணத்தைப் பெற்று இதை அமுல் நடத்தவும் ஒரு ஒருமைப்பாடான ஏற்பாடுண்டுபண்ணப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் முயற்சிப்பார்கள். (கரகோஷம்)

நம்மைக் கடல்கள் பிரித்தாலும் நமக்குள்ள முக்கிய சம்பந்தமும் நட்பும் நீடித்து இருக்கவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன். நீங்கள் நாடு திரும்பி இங்கு பார்த்தவற்றை அங்கு கூறுவீர்களென நம்புகிறேன். சில சமயங்களில் இப்பொழுது வரையப்பட்டுள்ளதில் நீங்கள் வேறுபட்ட அபிப்பிராயம் வெளியிடலாம். ஆனால், நீங்கள் கலந்து பேசப்பட்டதில் காட்டப்பட்ட உணர்ச்சி விஷயத்தில் வேறுபட இடமிராதென நம்புகிறேன். (ஸபாஷ்) முடிவாக நமது முயற்சிகளின் பயனாக பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தேசங்களில் இந்தியா குடியேற்ற நாட்டந்தஸ்து பெறுவதில் இருந்த ஒரு குறை நீங்கி இந்தியா, சுய ஆட்சியின் பொறுப்பு கவலை, பளு, கஷ்டங்கள் ஆகியவற்றையும் அதனால் ஏற்படும் பெருமை, கௌரவம் முதலியவற்றையும் அடையுமென நான் நம்பி அவ்விதமாக வேண்டுமென்றும பிரார்த்திக்கிறேன். (பலத்த கரகோஷம்)

லண்டன் சர்வ கட்சி மகாநாட்டில் பிரதம மந்திரி செய்த அறிக்கையின்படி இராஜப்பிரதிநிதியும் கீழ்கண்ட அறிக்கையை வெளியிட்டார். அது பின்வருமாறு:—

கவர்னர் ஜேனரலின் அறிக்கை

புதிய டில்லி, ஜனவரி 25—

ஜனவரி 19-ந் தேதி பிரிட்டிஷ் பிரதம மந்திரியால் வெளியிடப்பட்ட அறிக்கையைப்பற்றி ஆலோசிக்க சந்

தர்ப்பம் கொடுக்கும்பொருட்டு, என்னுடைய கவர்ன் மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளைக் கலந்து ஆலோசனை செய்தபின், இப்போதுள்ள அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் காரிய நிர்வாகிகள் தங்களுக்குள் ளாகவும், 1930 ஜனவரி 1-ந் தேதி முதல் மேற்படி கமிட்டியில் மெம்பர்களா யிருந்தவர்களுடனும், கலந்து விவாதிக்க பூரண சுதந்தர முடையவர்களா யிருக்க வேண்டுமென்று கருதுவதால், அதற்கனுசரணையாக மேற்படி காரியக் கமிட்டி சட்ட விரோதமான சபை யென்று விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிற விடங்களில் அந்த உத்தரவை ரத்து செய்யத் தீர்மானித்துவிட் டோம். எந்தக் கூட்டம் கூட்டவும் சட்ட பூர்வமான தடையிராதபடி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியையும் 1930 ஜனவரி 1-ந் தேதிக்குப் பின் காரியக் கமிட்டி மெம்பர்களாயு மிருந்தவர்களையும் விடுவிக்க நடவடிக்கை யெடுத்துக்கொள்ளப்படும். எவ் வித நிபந்தனையுமின்றி இவர்களை விடுவிக்கத் தீர்மானித் திருக்கிறோம். ஏனெனில், இதன்படி விடுதலையாகிற வர்கள் கலந்து விவாதிப்பதால்தான் தேசத்தில் சாந்த நிலைமை ஏற்படுமென்று நாங்கள் உணருகிறோம். சாந்த நிலைமை ஏற்படுவதற்குரிய நிச்சயம் உண்டென்று அறிவிக்கப்பட்டால் கவான்மெண்டார் அந்த ஸமிக் ஞைக்குத் தக்கபடி நடந்துகொள்ளத் தவறமாட்டார்க ளென்று முதன் மந்திரி உறுதி கூறியதை யனுசரித்தும், சமாதானமான நிலைமை ஏற்படுவதற்கு உதவியாயிருக் கும்பொருட்டும், கவர்ன்மெண்டார் இந்த நடவடிக் கையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் எந்த நோக்கத்தோடு நாங்கள் இத் தீர்மானத்திற்கு

வந்திருக்கிறோமோ, அதற்கு அனுசரணையாக நாங்கள் நம்பிக்கையுடன் விடுதலை செய்வோரும் நடந்து கொள்வார்களென்று நான் நம்புகிறேன். முக்கியமான பிரச்னைகளை சாந்தமாகவும் நிஷ்பட்சபாதமாகவும் பரிசிலனை செய்யவேண்டிய அவசியத்தை அவர்கள் ஒப்புக்கொள்வார்களென்றும் நான் நம்புகிறேன்.

(ஒப்பம்) இர்வின்.

மகாத்மாகாந்தியையும், காங்கிரஸ் காரியக் கமிட்டியின் இதர அங்கத்தினர்களையும் விடுவிக்கும்படி லார்டு இர்வின் உத்தரவு பிறப்பித்தார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி சட்ட விரோதமான சபையென்று ஏற்கெனவே கிரிமினல் லா திருத்தச் சட்டப்படி பிறப்பித்திருந்த விளம்பரத்தையும் ராஜப்பிரதிநிதி ரத்து செய்துவிட்டார்.

பண்டித மோதிலால் நேருவின் மரணம்

மகாத்மா காந்தி முதலாய் பல மாகாணங்களின் சிறையிலுள்ள காரியக் கம்மிட்டி அங்கத்தினர்களும் விடுதலை அடைந்தனர். பின்வந்த காரியக் கமிட்டி செய்துள்ள தீர்மானத்தை வெளியிடாமல் வைத்திருந்தது. சர்வகட்சி மகாநாட்டுக்குச் சென்றவர்களில் கனம் சினிவாச சாஸ்திரி, ஸ்ரீமான் ஜயகர், ஸர். ஸப்ரூ ஆகிய மூவர்களும், தாங்கள் இந்தியா வந்து சேரும்வரை காரியக் கமிட்டியைக் கூட்டவேண்டாமென்று கேட்டுக்கொண்டனர். அவர்களின் வருகையை மகாத்மா எதிர்பார்த்திருந்தார். இப்படி யிருக்கும்போது பண்டித மோதிலால் நேருவுக்கு நேரிட்ட நோய் அதிகரித்துக்கொண்

டிருந்தது. மகாத்மா அலகாபாத்துக்குச் சென்றிருந்தார். கடைசியாக பெரிய தேசாபிமானியும், பெரிய தியாகியுமான பண்டித மோதிலால் தமது தேசிய மனோரதம் நிறைவேறுமுன் பிப்ரவரி மாதம் 6-ந் தேதி காலையில் இம் மண்ணுலகை நீத்தனர். நாடெங்கும் துக்கத்தில் மூழ்கி யிருந்தது. தகனம் நடந்த இடத்தில் மகாத்மா காந்தி கீழ்க் கண்டவாறு பேசினர் :—

இந்தச் சந்தர்ப்பத்தில் வழக்கமாக இருக்கவேண்டிய துக்கமின்றி ஜனங்களின் மனதில் சந்தோஷமிருப்பதைத் தாம் காண்பதாகவும் லோகமான்யர், தேசபந்து, லாலாஜி ஆகியவர்கள் இறந்தபோதும் இவ்விதச் சந்தோஷமே ஜனங்கள் மனதில் உதித்திருந்ததென்றும், ஏனெனில் மோதிலால் தேசத்துக்காக அவரது உயிரையே தியாகம் செய்திருக்கிறாரென்றும், அவரது மரணத்தின் தத்துவத்தை நாம் உணராவிட்டால் நம்மை உலகத்தார் மிருகங்கள் என அழைப்பார்கள் என்றும், அவரது மரணத்தின் தத்துவத்தை உணர்ந்தவர்கள் பலரும் பூரண சுயராஜ்ஜியம் அடையத் தங்களாலான முயற்சி செய்வதென விரதம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறிப் பின்னல் சொன்னதாவது :—"மோதிலால் சிங்கத்தைப்போன்று தைரியமாக மரணத்தோடு போராடினர். நேற்று நான் அவரிடம் "தாங்கள் குணமடைந்தால் சுயராஜ்ஜியம் கிடைத்ததுபோலாகும்" என்றேன். அதற்கு அவர் "நாம் முன்னமே சுயராஜ்ஜியம் அடைந்துவிட்டோம்" என்றார். பண்டித மோதிலால் நேற்றிரவு ராமநாமபாராயணம் செய்து காயத்ரி மந்திரத்தை ஜபித்தார்."

சமரஸ—சம்பாஷணை

கனம் சாஸ்திரி, ஸர். ஸப்ரு, ஸ்ரீமான் ஜயகர் ஆகிய மூவரும் பம்பாய் வந்து சேர்ந்தார். ஸர். ஸப்ரு மாத்திரம் அலகாபாத்துக்குச் சென்று மகாத்மாவை பேட்டி கண்டு பேசினர். பிரதம மந்திரி அறிக்கையில் கண்டதைவிட அதிகமாக எதும் ஸப்ரு கொண்டுவராவிடில் எங்ஙனம் சமாதானமுண்டாகும் என்றார். அப்படிச் சொல்லியும் ஸர். ஸப்ரு சமாதான வழியில் அதிக நேரம் சம்பாஷணை செய்தார். பிறகு காங்கிரஸ் தலைவர்களுடனும் கலந்து யோசனை செய்தார்.

மகாத்மாவின் வேண்டுகோளுக்கிணங்கி கனம் சாஸ்திரியும், ஸ்ரீமான் ஜயகரும் அழைக்கப்பட்டனர். மகாத்மா காங்கிரஸ் தலைவர்கள் உள்பட யாவரும் சமரஸத்துக்கான வழிதேடி நீண்டகாலம் யோசனை செய்து பார்த்தனர். மகாத்மா காந்தி வைஸ்ராயுடன் கலந்து சமரஸம் பேச ஒரு கடிதம் எழுதி அதில் சில நிபந்தனைகளையுங் குறித்திருந்தார். அது போலீஸ் அதிக்கிரமத்தை யென்பது சொல்லாமலே விளங்கும். சமரஸ வாதத்தில் போலீஸ் அமிதங்களைப் பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்களும் வற்புறுத்தினர். சமாதானத் தூதர்கள் மூவரும் தனித் தனியே தலைவர்களிடம் பற்பல விஷயங்களையும் கலந்து பேசி வந்தனர். கமிட்டி அங்கத்தினர்களோடும், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சமாதானமாயும் பொறுமையாகவும் பதிலளித்து வந்தனர்.

கனம் சாஸ்திரிகள், டாக்டர் சாப்ரு, ஸ்ரீமான் ஜெயகர், ஸர். புருஷோத்தமதாஸ், மிஸ்டர் லால்சந்த் ஹீராசந்த் முதலியவர்கள் விசேஷமாகக் காங்கிரஸ்காரர்களை வற்புறுத்தி

யதன் மேல் தான் காந்திஜீ இராஜப் பிரதிநிதிக்குத் கடித மெழுதினர். கார்யக் கமிட்டி காந்திஜி இராஜப் பிரதிநிதியோடு கலந்துபேச அநுமதி கொடுத்தபின் எவ்விதம் கடித மெழுதவேண்டுமென்பது முடிவுசெய்யப்பட்டது. டில்லியில் சம்பாஷணை நடக்கையில் காந்திஜீ தாம் தயாரித்த நகல் தீர்மானத்தை யொட்டி காங்கிரஸின் அபிப்பிராயத்தை எடுத்து விளக்குவார். இச் சம்பாஷணை முடிந்ததும் கார்யக் கமிட்டிக் கூட்டம் டில்லியிலாவது பம்பாயிலாவது நடைபெறும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

காந்திஜியின் கடிதத்தை எடுத்துச் சென்ற ஜனப் ரபி ஆமத் கித்வாய் டில்லிக்கு வந்து கடிதத்தை இராஜப்பிரதிநிதியிடம் கொடுத்துவிட்டு அலகாபாத்துக்குத் திரும்பினர். இராஜப்பிரதிநிதி தந்திமூலம் தமது பதிலை அனுப்புவார் என எதிர்பார்க்கப்பட்டது. (அ-பி)

மகாத்மா வைஸ்ராய்க்கு எழுதிய இரண்டு கடிதங்களின் விஷயங்கள் மர்மமாய் வைக்கப்பட்டுள்ளதால் வெளியிடவில்லை. எதிர்பார்த்தபடி இராஜப்பிரதிநிதியைப் பேட்டி காண, மகாத்மா காந்தி எழுதிய கடிதத்துக்கு இராஜப்பிரதிநிதியின் தந்தி கிடைத்து அன்றே டில்லிக்கு புறப்பட்டுச் சென்றார். மற்ற காங்கிரஸ் தலைவர்களும் அலகாபாத்தை விட்டுப் போயினர்.

மகாத்மா வைஸ்ராய் சம்பாஷணை

டாக்டர் சாப்ரு, கனம் சாஸ்திரி, ஸ்ரீமான் ஜெயகர் ஆகிய மூவரும் பிப்ரவரி 16வ பகல் 2-15 மணிக்கு இராஜப்பிரதிநிதியைக் கண்டு இரண்டு மணி நேரம் பேசிக்

கொண்டிருந்தார்கள். இராஜப்பிரதிநிதியைக் காந்திஜீ கண்டு பேசுவதற்குமுன் பூர்வ பீடிகையாக இவர்கள் லண்டன் மகாநாட்டைப்பற்றியும் இந்தியாவின் ராஜீய நிலைமையைப் பற்றியும் தங்களுக்குத் தோன்றியுள்ள அபிப்பிராயத்தை இராஜப்பிரதிநிதியிடம் வெளியிட்டார்கள். சட்ட நிலைமை யையும் உண்மைகளையும் உணர்ந்து காந்திஜியும் லார்டு இர்வினும் வெளிப்படையாக கலந்து பேசினார்களானல் சமாதானம் ஏற்படக் கூடுமென்றும் மற்றொரு சர்வகட்சி மகாநாட்டில் தேசீய லக்ஷியம் அதிகமாக வற்புறுத்தப்பட்டு லண்டன் மகாநாட்டில் போடப்பட்ட அஸ்திவாரத்தின்மீது கட்டடத்தை எழுப்பக் கூடுமென்றும் சமாதானம் ஏற்படுவ தற்கு மனமாறுதல் ஏற்பட்டிருப்பதாகக் காட்டினல்மட்டும் போதுமாவென்றும் அல்லது திட்டமாக அதற்காக ஏதாவது காரியம் செய்து காட்டப்படவேண்டுமென வற்புறுத்தப் படுமாவென்றும் விளங்காதிருந்தன. காந்திஜி இராஜப்பிரதி நிதியோடு ஒருதரத்துக்கு அதிகமாகவே கலந்து பேசவேண்டி யிருக்கலாமெனவும் எதிர்ப்பார்க்கப்பட்டது.

பிப்ரவரிமீ 17வ பகல் 12 மணிக்கு இராஜப்பிரதிநிதி மாளிகையில் ஒருவிதமான பரபரப்பு ஏற்பட்டது. வாயில் காப்போர் பலரும் இராஜப்பிதிநிதி மாளிகைக்கு வரும்ரஸ்தா வையே பார்த்துக்கொண்டிருந்தனர். காந்திஜி டாக்டர் அன்ஸாரியின் பங்களாவிலிருந்து இரண்டடிக்க 15 நிமிஷ மிருக்கையிலேயே புறப்பட்டுவிட்டார். அவர் ஆங்காங்கு கூட்டம் கூடுவதைத் தடுக்க ஊரெல்லாம் சுற்றிக்கொண்டு கிங்ஸ்லே என்ற விடத்துக்கு வந்ததும் அரைமைல் தூரம் நடந்து சென்றார். பிறகு அவர் வண்டியில் ஏறிக்கொண்டு இராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் சென்றார். அந்தப்பக்கம் சென்ற ஒவ்வொரு வண்டியையும் ஜனங்கள் கூர்ந்து கவனித்

துக்கொண்டிருந்தார்கள். பச்சை நிறமுள்ள வண்டி ஒன்று தங்கு தடையின்றி இராஜப்பிரதிநிதி மாளிகைக்குள் சென்றது. அதில்தான் மகாத்மா கம்பீரமாக தலையில் ஒன்றும் அணிந்து கொள்ளாமல் தடிப்பான மூக்குக்கண்ணாடி அணிந்துகொண்டு வெள்ளைக் கதரை இடுப்பில் கட்டிக்கொண்டு மேலே கம்பளப் போர்வை போர்த்துக்கொண்டு காலில் மிதியடியுடன் உட்கார்ந்துகொண்டிருந்தார். மாளிகைக்குள் இந்த வண்டி சென்றதும் அக்கம் பக்கத்து அறைகளிலிருந்த காவலாளர்கள் யாவரும் மகாத்மாவைக் காண ஓடிவந்தனர். அவர்கள் பலரும் கைகூப்பி காந்திஜியை நமஸ்கரித்தனர் அவரும் புன்சிரிப்புடன் கையெடுத்து நமஸ்கரித்தார். அப்போது தான் இராஜப்பிரதிநிதியின் மெய்க்காவலாளர் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்தனர். அவர் காந்திஜியை வரவேற்று வணங்கினர். "தாங்கள் வெகு சீக்கிரமாக வந்துவிட்டீர்கள்" என அவர் சொன்னதற்குக் காந்திஜி ஆமாம் நான் சீக்கிரம்தான் வந்து விட்டேன். நான் வந்திருப்பதைப்பற்றி தயவுசெய்து இராஜப்பிரதிநிதிக்கு அறிவியுங்கள் என்றார். உடனே காந்திஜி மேல்மாடிக்கு சலவைக்கல் படிக்கட்டு வழியாக அழைத்துச் செல்லப்பட்டார். இங்கு இராஜப்பிரதிநிதி படிப்பதற்கு உபயோகிக்கும் அறையில் காந்திஜி உட்கார்ந்தார். மெய்க்காப்பாளர் காந்திஜியின் வரவை அறிவிக்க இராஜப்பிரதிநிதியின் அறைக்கு ஓடினார். காந்திஜீ பேட்டி காண அநுமதி கோரி எழுதிய கடிதத்தில் குறித்த விவரங்கள் ராஜப்பிரதியின் மனதில் நன்றாய் படிந்ததாகத் தெரிந்தது. முக்கியமாக அக் கடிதத்தின் கடைசிவரையில் இராஜப்பிரதிநிதி என்ற ஹோதாவில் லார்டு இர்வினைக் காண விரும்பவில்லை. ஒரு மனிதன் என்ற ஹோதாவில்தான் அவரைக் காண

விரும்புகிறேன் என எழுதியதில் லார்டு இர்வினுக்கு அதிகப் பற்று ஏற்பட்டிருக்கிறது. இத் தந்தி கொடுக்கும் சமயத்தில் ஒரு அழகிய அறையில் ஜனநாயகத் தத்துவக் கொள்கையுடைய சிறந்த ஒரு புருஷரும் அதிகாரவர்க்கக் கொள்கையுடைய அரிய புருஷர் ஒருவரும் தனித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கு பேசப்பட்ட விஷயங்கள் கடவுளுக்கே தெரியும்.

சமரஸத்திலும் நெருக்கடி

நன்றாக ஆரம்பித்ததென்பதற்குப் பாதி பூர்த்தியாகிய தென்று "அர்த்தமானல் அன்று மகாத்மா காந்திக்கும் லார்டு இர்வினுக்கும் 4 மணி நேரம் நடந்த சம்பாஷணை மிக்க திருப்திகாமாக இருந்ததென்று சொல்லலாம். முன்தினம் ஸர் டேஜ்பகதூர், சாப்ருவும் அவரது 2 சர்வகட்சி மகா நாட்டு சகாக்களும் இராஜப்பிரதிநிதியைக் கலந்து பேசியது இதற்குச் சாதனமாகிறது. இதனல் இராஜப்பிரதிநிதியும் மகாத்மாஜீயும் பிறரது மனோபாவங்களைப் பூர்வாங்கமாகச் சிறிது உணர்ந்து அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு மேற்கொண்டு சம்பாஷணைகளைச் செய்துகொண்டுபோக சாத்தியமாகியது. மிக்க நம்பிக்கையுடனிருந்தவர்கள்கூட அன்றைய சம்பாஷணை 1½ மணி நேரத்திற்குமேல் நீடித்திருக்குமென்று எதிர் பார்க்கவில்லை. இதனல்தான் மகாத்மாஜி சாப்ருவையும் அவரது சகாக்களையும் டாக்டர் அன்சாரி வீட்டில் தம்மை மாலை 4-மணிக்குச் சந்திக்கும்படி கேட்டிருந்தார். ஆனல் மகாத்மாஜி பேச்சில் மிக்க ஈடுபட்டுப் போனதனல் 4 மணி நேரமாகியபோதிலும் பேச்சு முடிவுக்கு வருவதாக இல்லை. அவரது சாப்பாட்டுவேளை வராவிட்டால் மகாத்மாஜி இன்னும் இராஜப்பிரதிநிதி மாளிகையிலேயே

அதிகநேரம் தங்கியிருந்திருப்பார். அன்று காலையில் காந்திஜிக்கு ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ முக்கியமான விஷயத்தைத் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. இது போலீஸ் அதிக்கிரம விசாரணையைப்பற்றி ராஜப்பிரதிநிதி கொண்டுள்ள மனோபாவத்தைப் பற்றியதாகப் பெரிதுமிருக்கக்கூடும். இது காங்கிரஸ்காரர்களுள் சாதகமாக அபிப்பிராயத்தை உண்டாக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. டாக்டர் அன்சாரியின் வீட்டில் 2வித அபிப்பிராயமுள்ளவர்கள் இருந்தார்கள். ஒரு தரப்பார் அன்று ராஜிப்பேச்சு முடிந்துவிடுமென்றும் அது பலிக்காமல் போய்விடுமென்றும் நம்பினர். மற்றொரு தரப்பார் மறுதினமும் அதற்கு மறுநாளுங்கூட ராஜிப்பேச்சு நீடித்து நடக்குமென்றும் சமாதானம் செய்துகொள்ள இச் சந்தர்ப்பத்தைக் கைவிடும் மனோபாவத்துடன் கவர்ன்மெண்டார் இல்லை என்றும் அபிப்பிராயப்பட்டனர். தற்சமயம் பின் சொன்ன தரப்பாரது அபிப்பிராயமே மேலோங்கி நிற்பதாகத் தோன்றுகிறது. மனமாறுதலைப்பற்றிய ருசுத்வான பூர்வாங்கமான நிபந்தனையாகும். அந்தப் பூர்வாங்க ருசு திருப்திகரமாக இருப்பதாக மகாத்மாவுக்குப்பட்டால் அரசியல் பிரச்னை சம்பந்தமாக உடன்பாடு செய்துகொள்ளுவதற்கு உடனே ஆதார மேற்படுமென்று கூறப்படுகிறது. அப்பொழுது ராஜப்பிரதிநிதி ராஜீயக் கைதிகளை விடுதலை செய்து சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படுமுன்பிருந்த நிலைமையை ஏற்படுத்தவும் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களை அதன் முன் சொந்தக்காரர்களிடம் ஒப்புவிக்கவும் தயாராக இருப்பார். அரசியல் மாறுதல் சம்பந்தமாக இராஜப்பிரதிநிதி புதிய மகாநாட்டிற்குக் காங்கிரஸ் வந்து கவர்ன்மெண்டில் உண்மையான பொறுப்புக் கொடுக்கவேண்டுமென்று கோர சாத்தியமாகும்படி செய்வார். தற்சமயம்

ஒரே ஒரு விஷயமாகத்தான் தகராறு ஏற்படக்கூடும். அதாவது இராஜப்பிரதிநிதி ஸிவிலியன்களால் சட்டத்தின்படி ஏற்பட்டுள்ள வரம்பு, பார்லிமெண்டிற்குள்ள பொறுப்பு ஆகிய விஷயங்களைப்பற்றி அனாவசியமாக அதிகமாக வற்புறுத்தக்கூடும். இந் நிபந்தனைகள் வெறும் சம்பிரதாயத்தைக் குறிக்கவோ அல்லது முன்னேற்றத்திற்குத் திட்டமாகத் தடை விளைவிக்கவோ உபயோகிக்கப்படலாம். விசிட்டர்கள் எல்லோருடைய மனதையும் கவர்ந்த ஒரே ஒரு அம்சத்தை மாத்திரம் குறிக்கவேண்டும் மகாத்மாஜீ இராஜப்பிரதிநிதியின் மாளிகைக்கு வந்துவிட்டுத் திரும்பிப் போவதற்குள்ளாக அவரைப் பார்ப்பதற்காக வராமலோ அன்றி அவரைத் தரிசிப்பதற்காக வெகுநேரம்வரை காத்துக்கொண்டிராமலோ உள்ள செக்ரடேரியட் ஊழியராவது இராஜப்பிரதிநிதி மாளிகை ஊழியராவது ஒருவர்கூட இல்லை. இதிலிருந்து அரசாங்க அதிகாரத்தின் உறைவிடத்தில் உள்ளவர்கள்கூட மகாத்மா காந்தியின் ஆத்மசக்தி மற்றவிடங்களிலுள்ளவர்களது மனதை ஆகர்ஷிப்பதுபோல ஆகர்ஷித்திருக்கின்றதென்பது வெளியாகிறது. அவரது வேலை இந்தியர் ஒவ்வொருவருடைய நல்லெண்ணத்தையும் ஆசியையும் பெற்றிருக்கிறதென்பதும் வெளியாகிறது.

பிப்ரவரி 18உ பிற்பகல் நடைபெற்ற காந்தி இர்வின் சம்பாஷணையின் தோரணையை என்ன வார்த்தைகொண்டு விவரிப்பதென்பது பத்திரிகைக்காரர்களுக்குக் கஷ்டமாகப் போய்விட்டது. முறிந்துவிட்ட தென்பதா, நிறுத்திவைக்கப்பட்டிருப்பதென்று கூறுவதா, அல்லது தற்காலிகமாக முறிந்துவிட்டதென்பதா வென்பது தெரியவில்லை. ராஜிப் பேச்சு முறிந்துவிட்டதெனக் கூற யாரும் துணியவில்லை. ஏனென்றால் சம்பாஷணைகாலத்தில் என்ன நடந்திருந்தாலும்

இரு தரப்பினரும் முடிவான வார்த்தையெதுவும் கூறவில்லை. அப்படியாயின் சென்ற டிசம்பர் 23-ந் தேதி நடந்ததுபோல் இப்பொழுதும் உத்தியோக தோரணையில் ஒரு முடிவு வெளியிடப்பட்டிருக்கும். இன்று ஏற்பட்ட முடிவில் இருவரும் திருப்திகொள்ளவில்லை யென்பது நிச்சயம். ஆனாலும் முடிவாகச் சமரஸமில்லையென்று ஏற்படாததுபற்றி இரு தரப்பினரும் திருப்தி கொண்டிருக்கின்றனர். நேற்றைய விவாதத்தில் சுதந்திரம்பெற எது சரியான வழி, உண்மையில் மனமாறுத லேற்பட்டிருக்கிறதா வென்பதைப்பற்றியே விவாதிக்கப்பட்டது. ஆனல், பொதுவாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட திட்டமான பிரச்னைகளைப்பற்றி விவாதம் நடந்ததாகத் தெரிகிறது. இந்த விவாதத்தில் இரு தரப்பினரும் திட்டமாகத் தங்கள் கருத்தைக் கூறிவிட்டனர். அதனுல் தான் இன்று சம்பாஷணை நேற்றைவிட முன்னதாகவே முடிவடைந்து விட்டது. இப்பொழுது இருதரப்பினரும் தங்களுக்குக் கிடைத்துள்ள பதில்களை தங்கள் தங்கள் தலைமை ஸ்தலங்களுக் கறிவித்திருக்கின்றனர். காந்திஜி காங்கிரஸ் காரியக்கமிட்டிக்கும் ராஜப்பிரதிநிதி பிரதம மந்திரியான மிஸ்டர் மாக்டோனுல்டுக்கும் அறிவித்தனர். காந்திஜியே பூர்ணமாகத் திருப்திப்படாம லிருக்கும்போது காங்கிரஸ் காரியக்கமிட்டி திருப்தியடைந்து இப்பொழுது தீர்க்கவிருக்கும் விஷயங்களில் ஒரு வழி காட்டுவதென்பதற்கு இடமில்லை. ஆனுலும், இன்னும் நம்பிக்கைக்கு இடமிருப்பதாகத் தெரிகிறது. ஏனென்றுல் மகாத்மா காந்தி உடனே ஸர் ஸாப்ரு, சுனம் சாஸ்திரியார், ஸ்ரீமான்கள் ஜயகர், ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் அன்ஸாரி முதலிய இங்குள்ள தலைவர்களுக்கு நடந்த விஷயங்களை விவரித்தார். மகாத்மா காந்தி அவசரப்பட்டு முடிவு செய்யப்போவதில்லை.

பூர்ணமாகக் கலந்தாலோசனைசெய்தே ஒரு முடிவிற்கு வருவார்.

லண்டனுக்கு ராஜப்பிரதிநிதியின் அவசரத் தந்தி

இது இப்படியிருக்க ராஜப்பிரதிநிதி அவசரத் தந்தி மூலம் அன்று மாலை விஷயங்களை லண்டனுக்கறிவித்திருந்தார். அவருக்கு மேற்கொண்டு தகவல் கிடைக்கக்கூடும். இப்பொழு தேற்பட்டுள்ள கஷ்ட நிலைமையைத் தீர்க்க காந்திஜியைப்போல் ராஜப்பிரதிநிதியும் மிகுந்த அக்கரை கொண்டிருந்தார். ஆனால் இச் சம்பாஷணையை மேற்கொண்டு நடத்துமாறு ராஜப்பிரதிநிதியை யநுமதிக்கப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிற்கு எவ்வளவு பலமிருக்கிற தென்பதையே எல்லாம் பொறுத்திருந்தது.

ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரூவும் அவர் சகபாடிகளும் அவசரமாகத் தங்களுக்குள் ஆலோசனை செய்துவருகின்றனர். ராஜப்பிரதிநிதி காந்திஜியைப் பார்க்கும் முன்னர் அவர்கள் இன்று காலை அழைக்கப்பட்டனர். அவர்கள் திரும்பவும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். சம்பாஷணை மீண்டும் சீக்கிரம் ஆரம்பிக்கப்படுமென்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்து வந்தது. பேச்சு அடியுடன் முறிந்துவிடாமல் செய்ய அவர்கள் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்தார்கள். சம்பாஷணையை நிறுத்தி வைத்திருப்பதிலிருந்து எல்லாம் முறிந்துவிட்டதாக கருதப்படவில்லை. ஏனென்றால் பாதுகாப்புகளைப்பற்றி முரண்பாடேற்பட்டதாயினும் இதைப்பற்றி மேற்கொண்டு விவாதிக்க இன்னும் பூர்ண இடமிருக்கிறது. இனியும் இவர்கள் மனம் விட்டுப் பேசுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

காந்தி—இர்வின் சம்பாஷணை

இரண்டாம் முறை

இராஜப்பிரதிநிதி மாளிகைக்கு மகாத்மாவின் புறப்பாடு

பிப்ரவரி 18வ மகாத்மா காந்தி இரண்டாம் முறையாக லார்டு இர்வினுடன் கலந்து பேச இராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் சென்றபொழுது பிற்பகல் $2\frac{1}{2}$ மணிக்கு இம்பீரியல் ஸெக்ரிடரியேட்டிற்கு முன் பெரிய விசேஷம் காணப்பட்டது. காந்திஜியின் தர்சனம் பெறவேண்டி ஸெக்ரிடரியேட் கட்டிடத்தில் வடபாகத்திலும் தென்பாகத்திலும் சுமார் 3000 ஜனங்களுக்குமேல் காத்துக்கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கவர்ன்மெண்டு சூபரின்டெண்டண்டுகள், அஸிஸ்டெண்டுகள், குமாஸ்தாக்கள், சாப்ராஸிகள் ஆகியோராவர். அவர்கள் தங்கள் காரியாலய அறைகளை விட்டு வெளிவந்து இரண்டு மணி முதல் காத்துக்கொண்டிருந்தனர். இந்தியா சட்டசபை அங்கத்தினர் ஒருவர் ஒரு இலாகாவிற்குப் போக முயற்சித்தார். ஆனல் இராஜப்பிரதிநிதி மாளிகைக்குப் போகும் ரஸ்தாவில் மிகுந்த கூட்டமிருந்தபடியால் அவர் போகக்கூடவில்லை. வழியே இல்லாமலிருந்தது. அவர் ஒரு நிருபரிடம் “அன்று குடியேற்ற நாட்டு ஞாபகச் சின்னம் திறக்கப்பட்ட காலத்திலிருந்ததை விட இப்பொழுது அதிகக் கூட்டம் காணப்படவில்லையா” வெனக் கேட்டார். அங்கு சென்றுகொண்டிருந்த ஒவ்வொரு மோட்டாரும் கவனிக்கப்பட்டது. ஆனல் மகாத்மா 2-30 மணி அடிக்க ஒரு நிமிஷ மிருக்கும்பொழுதுதான் வந்தார். இதற்கிடையில் பம்பாய் கவர்னரான ஸர் பெட்ரிக் ஸைக்ஸ் 2-25 மணிக்கு இராஜப்பிரதிநிதி மாளிகையைவிட்டு

வெளிவந்தபடியால் இக்காட்சியை அவர் கண்டார். கூட்டம் சிறிது நேரம் காத்திருந்தபின் காந்திஜியின் பச்சை மோட்டார்கார் வந்தவுடன் கவர்ன்மெண்டு ஊழியர் கூட்டத்தில் மிகுந்த பரபரப்பேற்பட்டது. காரில் காந்திஜியும் டிரைவரும்தான் இருந்தனர். பல விடங்களில் கூட்டத்தினர் காந்திஜி தரிசனத்திற்காகக் காரைச் சூழ்ந்துகொண்டனர். மகாத்மா காந்திக்கு ஜேய் என்ற ஆரவாரமில்லாவிடினும், ஒவ்வொருவரும் கைகளை கூப்பிக்கொண்டு மகாத்மாவை தர்சனஞ் செய்ததிலிருந்து இந்தியா கவர்ன்மெண்டுக்கூட இராஜப்பிரதிநிதி சம்பாஷணை இனிது நிறைவேறவேண்டுமென்ற உண்மையான அவா விருப்பது வெளியானது. நாழிகை ஆகிக்கொண்டிருந்தபடியால் மகாத்மாவின் கவனம் இராஜப்பிரதிநிதி மாளிகையிலேயே யிருந்தது. அவர் தமது வழக்கமான வழியில் ஜனங்களிடம் பிரதிப் பிரீதி வெளியிட்டார். லார்டு இர்வின் விமான கிளப்பு விருந்தில் பேசுகையில், நியூ டில்லியில் ஆகாய விமானம் உயரப் பறக்கும் பொழுது இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் எவரும் அனுப்புக் கொடுக்கும் வேலையிலிருந்துகூட தலை கிளப்பாது வேலையையே கவனித்துவருவது பெரிய விசேஷமாகத் தோன்றுவதாகக் கூறினர். ஆனல் இன்று அவ்விதமில்லை. இராஜப்பிரதிநிதி வெளியிட்ட ஆச்சர்யத்தைவிட அதிக ஆச்சர்யமாகவே இன்றைய காட்சி யிருந்தது. பல ஐரோப்பிய இந்திய உத்தியோகஸ்தர்கள் ரஸ்தாவிலிருந்த காட்சியை ஸெக்ரிடரியேட் கட்டிட ஜன்னல்கள் மூலம் பார்த்துக் கொண்டிருந்தனர். உயர் பதவியிலிருக்கும் ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தர் காந்திஜிக்கு அடுத்தாப்போல் பின்னல் வந்தார், அவர் நிலைமையை மிகுந்த தமாஷாக அநுபவித்தார். ஒரு நிருபர் அவரைக் கண்டு விசாரித்ததும் அவர்

"எவ்வளவு பேர் என்னைப் பார்க்கக் கூடியிருக்கின்றனர் பார்த்தீர்களா"வென என்னைக் கேட்டார். பச்சைமோட்டார் இராஜப்பிரதிநிதி மாளிகைக்குள் சென்றதும் கூட்டமெல்லாம் ஸெக்ரிடரியேட்டிற்குள் கலைந்து விட்டது. இரண்டு மணி நேரம் கழித்து மகாத்மாஜி இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து வெளிவந்தார்.

தலைவர்களின் வருகை

பண்டித மாளவியா, சேத் ஜமன்லால் பஜாஜ், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸர்தார் வல்லபாய் படேல் ஆகியோர் இங்கு வந்திருக்கின்றனர். மகாத்மாஜி இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து வெளிவந்ததும் ஒரு நிருபர் அவரைக் கண்டு பேசினர். விஷயங்கள் ஒன்றும் தெளிவுபடவில்லை யென அவர் கூறினர். வாரக் கடைசியில் மீண்டும் இராஜப்பிரதிநிதியைக் கண்டு பேசும் முன்னர் அன்று அங்கு வந்துள்ள தலைவர்களுடன் அவர் கலந்து பேசினர்.

தூதுக்கோஷ்டியினரின் ஆலோசனை

ஸர் டேஜ் பகதூர் ஸாப்ரூ, ஸ்ரீமான் ஜயகர், கனம் சாஸ்திரியார் ஆகியோருக்கு என்ன நடந்ததென்பதை காந்திஜி எடுத்துக் கூறியபின் தங்களுக்குள் அவர்கள் ஆலோசனை நடத்தினர். உடனே போபால் நவாப் பிக்கானீர் மகாராஜா ஆகியோருக்குத் தந்தியனுப்பி அடுத்த வண்டியிலேயே புறப்பட்டுவருமாறு அறிவித்தனர். சர்வகட்சி மகாநாட்டில் பிரதானமாகவிருந்த இந்த மிதவாதத் தலைவர்கள் இவ்விதம் நடவடிக்கை யெடுத்துக்கொண்டிருப்பதில் விசேஷக் கவனஞ் செலுத்தப்பட்டது.

காந்திஜியின் நிபந்தனை

இந்தியாவில் நடைபெற விருக்கும் மகாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொள்ளுவதற்கான நிபந்தனைகளை மகாத்மா எடுத்துக் கூறுகையில், மகாநாட்டின் முழுத்திட்டத்தையும் மாற்றவேண்டுமென்று காங்கிரஸ் விரும்புவதாகவும், முக்கியமாக ராணுவம், அன்னிய நாட்டு விஷயங்கள், செல்வ விஷயம் முதலிய பாதுகாப்பு விஷயத்தை மாற்றவேண்டுமென்றும் வற்புறுத்தியதாகத் தெரிந்தது. இந்தப் பாதுகாப்பு விஷயங்கள் முழுவதையும் இப்பொழுது இவ்விதம் திரும்பக் கிளப்புவது புத்திசாலித்தனமாகாதென்றும், ஆனால் சில மாறுதல்கள் சாத்தியமாகுமென்றும் மிதவாதத் தலைவர்கள் எடுத்துக் காட்டினர். தவிர ஸமஷ்டியை சமஸ்தானங்களுடனல்லாது சுதேச மன்னர்களுடனுண்டுபண்ணுவது பற்றியும் காங்கிரஸ்காரர்கள் தீவிரமாகக் கருதிவந்தனர். சமஸ்தானப் பிரஜைகளுக்கிடமேற்படுத்தாத வரையில் ஸமஷ்டி விஷயமே ஆபத்தாகப் போகுமென்று அவர்கள் வற்புறுத்தினர். மகாத்மா காந்தி இவ்விஷயத்தையும் மற்ற முக்கிய விஷயங்களுடன் வற்புறுத்தியிருப்பாரென்று கருதப்படுகிறது. காங்கிரஸ்காரர்கள் சர்வகக்ஷி மகாநாட்டில் தகுந்தபடி கலந்துகொள்ள வேண்டுமானால் இவ் விஷயம் அவசியம் பிரஸ்தாபிக்கப்படும். இதில் சுதேச மன்னர்களின் அபிப்பிராயங்களை அறிய வேண்டி போபால் நவாபும் பிக்கானீர் மகாராஜவும் உடனே டில்லி வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அவர்கள் வந்தவுடன் அவர்களும் மிதவாதத் தலைவர்களும் சேர்ந்து லண்டன் மகாநாட்டில் செய்யப்பட்டுள்ள முடிவின் தன்மையைக் காங்கிரஸ்காரர்களுக்கு விவரிப்பார்களெனத் தெரிந்தது. மிதவாதத்

தலைவர்கள் அபிப்பிராயத்திலிருந்து அன்று நிலைமை நம்பிக்கைக் குறைவை யுண்டுபண்ணுமலில்லை.

இந்தியா மந்திரியுடன் ராஜப்பிரதிநிதி ஆலோசனை

லார்டு இர்வின் சம்பந்தப் பட்டவரையில் காந்திஜி எழுப்பியுள்ள பிரச்னைகளைப்பற்றி இந்தியா மந்திரியுடன் கலந்துகொள்ள அவகாசம் கேட்டிருக்கிறார். ஆகவே மீண்டும் எப்பொழுது பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதென்பது பற்றி இனி அடுத்தபடியாக ராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்தே யோசனை வரவேண்டும். இப்பொழுது சத்தியாக இரண்டு தினங்களில் ராஜப்பிரதிநிதி மகாத்மாவை அழைக்கலாமென்று தெரிந்தது.

மகாத்மாவின் கோரிக்கை

காந்திஜியின் குறைந்தபக்ஷ கோரிக்கை

சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தும் முன்னர் நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகளைப்பற்றிய காந்திஜியின் குறைந்தபக்ஷ கோரிக்கை இப்பொழுது கவர்ன்மெண்டிற்கு அறிவிக்கப்பட்டது. அதாவது:—குறிப்பிட்ட போலீஸ் அதிக்கிரமங்களைப்பற்றிய விசாரணை, கள்ளுக்கடை, அன்னிய நாட்டு ஜவுளிக்கடை ஆகியவற்றை மறியல் செய்யச் சுதந்திரம். பறிமுதல் செய்யப்பட்ட சொத்தைத் திரும்பக் கொடுப்பது, சென்ற சில மாதங்களில் ராஜீயக் காரணத்திற்காக வேலையினின்று நீக்கப்பட்டவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்வது, அவசரச் சட்டங்களை ரத்து செய்வது, அரசியல் கைதிகள் விடுதலை.

காங்கிரஸ் தலைவர்களுக்குள் ஆலோசனை

சேத் ஜமன்லால்பஜாஜ் தானபூரிலிருந்து அன்று மாலை வந்தார். டாக்டர் அன்ஸாரி முதல்நாள் ராமபூரிலிருந்து வந்தார்: டில்லியிலில்லாத காங்கிரஸ் காரியக்கமிட்டி யங்கத்தினர்களும் அழைக்கப்பட்டிருந்தாலும் கமிட்டிக் கூட்டம் எதுவும் அப்பொழுது சத்தியாக நடைபெறவில்லை. ஆனால் அவ்வப்பொழுது அவர்களுக்குள் அந்தரங்க ஆலோசனை நடைபெற்று வந்தது.

நிர்வாக சபைக்கூட்டம்

லார்டு இர்வின் தாம் சம்பந்தப்பட்டவரையில் நிர்வாக சபையின் கூட்டமொன்றை நடத்தினர். அத்துடன் அவர் இங்கு வந்திருக்கும் சென்னை பம்பாய் கவர்னர்களையும் அவர் கலந்துகொண்டார். இந்தியா மந்திரியுடனும் கலந்துகொண்ட பிறகு அவர் மகாத்மா காந்தியை மீண்டும் அழைப்பார் எனத் தெரிய வந்தது.

இராஜப்பிரதிநிதியின் அவசர அழைப்பு

பிப்ரவரிமீ 19உ 1-30 மணிக்கு இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து மகாத்மாஜீ டெலிபோன் மூலம் இராஜப் பிரதிநிதி மாளிகைக்கு வருமாறு அழைக்கப்பட்டார். இது எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. அவர் இராஜப்பிரதிநிதியுடன் பேசுவதற்காக பிற்பகல் 2 மணிக்கு மற்றெல்லா அலுவல்களையும் விட்டுவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். சர்வகட்சி மகாநாட்டுப் பிரதிநிதிகள் அவரைக் கண்டு பேசவில்லை. அவர் பண்டித ஜவஹர்லால், பண்டித மதன் மோகன மாளவியாஜீ, சர்தார் வல்லபாய் படேல் இவர்களுடன் பேசுவதில் தமது நேரத்தை எல்லாம் கழித்தார்.

மேற்கண்ட தலைவர்கள் ஒவ்வொருவராக வந்தனர். டாக்டர் சாப்ரூவும், பண்டித மாளவியாவும் சாப்ரூவின் விடுதியில் கூடி யோசித்தார்கள். ஸ்ரீமான் வால்சந்து ஹீராசந்து அப்பொழுதுதான் வந்திருந்தார். அவர் சர்தார் வல்லபாய் படேலுடன் பேசிக்கொண்டிருந்தார். மகாத்மா காந்தியை திடீரென லார்டு இர்வின் அழைக்கவேண்டிய காரணமென்ன என்பதைப்பற்றி ராஜீய வாதிகளுடன் மிகுந்த பேச்சு நடந்தது. மகாத்மா இராஜப்பிரதிநிதி மாளிகைக்குச்செல்ல வண்டி யேறுகையில் வாயிலில் கூடியிருந்த ஏராளமான ஸ்திரீ, புருஷர்களுக்குத் தரிசனமளித்தார்.

கவர்ன்மெண்ட் அறிக்கை

பிப்ரவரி மீ 19உ மாலை ராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து பின்வரும் அறிக்கை வெளியிடப்பட்டது.

> "இன்று ராஜப்பிரதிநிதி மிஸ்டர் காந்திக்கு மறுபடியும் பேட்டியளித்தார். முன் சம்பாஷணைகள் மூலமாக வெளியிடப்பட்ட பல பிரச்னைகள் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஆகையால் இந்த சம்பாஷணைகளை மேற்கொண்டு நடத்துவதற்குச் சில நாட்களாகுமென்று கருதப்படுகிறது."

ஸமாஸத்திற்காக காந்திஜி கூறியுள்ள நிபந்தனைகளையும் ராஜப்பிரதிநிதி அவைகளை ஒப்புக்கொள்ள எவ்வளவுதூரம் தயாராகயிருக்கிறார் என்பதையும் இரு கக்ஷிக்காரர்களும் அதிரகஸ்யமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். ராஜப் பிரதிநிதி கவர்ன்மெண்ட் தரப்பில் எதையும் முடிவாகத் தீர்மானிக்கப் பூர்ண அதிகாரத்தைப் பெறவில்லையென்று ராஜீய கோஷ்டிகளில் நம்பப்பட்டது. மகாத்மாஜீ மூலமாகக் காங்கிரஸுக்கு முடிவாக அவர் பதிலளிக்குமுன் அதிகார

வர்க்கத்தினருடைய ஆக்ஷேப சமாதானங்களுக்கு பதில் கூற வேண்டியிருந்தது. ஆகையால் ராஜப்பிரதிநிதி முடிவாக எதையும் ஒப்புக்கொள்ள முடியாததால் அதிகமாக உறுதி மொழிகள் கூருமலிருந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

மகாத்மாஜி ராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து மாலே **5-30** மணிக்குத் திரும்பினர். காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்களுடன் அப்பொழுது ஆலோசனை செய்தார்.

ராஜப்பிரதிநிதியின் மாளிகையிலிருந்து திடீரென அழைப்பு வந்ததால் மகாத்மாஜி தங்களைவிட்டுப் பிரிந்து ராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் செல்லுவதைக் கண்டு டாக்டர் அன்சாரியின் வீட்டில் கூடியிருந்தவர்களெல்லாம் ஆச்சர்ய மடைந்தார்கள். சிலர் இது ஒரு சுபசகுன மாகுமென நினைத்தார்கள். ஆனல் மகாத்மாவின் சம்பாஷணை மிக்க முக்கியமான பிரச்சினைகளைக் கிளப்பி யிருப்பதால் அவற்றைப்பற்றிப் பூர்ணமாகச் சிந்தனைசெய்ய பிரிட்டிஷ் கவர்ன் மெண்டாருக்குச் சில நாட்களாகுமாதலால் அதற்காகக் தற்காலீகமாக நின்றுபோயுள்ள ராஜிப்பேச்சு சம்பாஷணையை இன்னும் சில நாட்கள்வரை துவக்கமுடியாம லிருக்குமென் பதைத் தெரிவிப்பதற்காகவே இராஜப்பிரதிநிதி ஏறக்குறைய மகாத்மாவை அழைத்தாரென்று சீக்கிரம் தெரியவந்தது. போராட்ட நிறுத்த நிபந்தனைகள் தற்சமயம் அவ்வளவு முக்கியமானவையாகக் கருதப்பட வில்லையென்று தோன்றுகிறது. இது விஷயமாக சமாதான தூதர்கள் ஒருவித உடன்பாடு ஏற்படும்படிசெய்ய முடிந்துவிட்டது. ஆனல் புதிய சர்வகட்சி மகாநாட்டின் நோக்கங்களும், காங்கிரஸ் காரர்கள் நிபந்தனையுமில்லாத சர்வ சுதந்தரத்துடன்தான் அதில் சேரமுடியுமாதலால் அச்சுதந்தர நிபந்தனைகளும் தான் தற்சமயம் மிக்க முக்கியமானவையாக இருக்கின்றன.

இது மூலாதாரமாகயுள்ள பிரச்சினைகளைக் கிளப்புகின்றது. இதனல் இதைப்பற்றி சிந்திக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு அவகாசம் வேண்டியிருக்கின்றது. ராஜீயக்கட்சியினர் இம்மாதிரி ராஜிப் பேச்சு நின்றது தவிர்க்க முடியாதென்று கருதினர். இப்படி யிருந்தபோதிலும் சற்று அவநம்பிக்கைக்கிடமான நிலைமையை நம்பிக்கைக்கிடமான நிலைமையாக மாற்ற ஏதேனும் அதிசயம் நிகழ்ந்தாலொழிய முடியாதென உணர்ச்சி யிருந்துவந்தது. ராஜிப்பேச்சு திடீரென முறிந்துபோகாம லிருப்பதனுலும் இருதரத்தாரும் ஒருவருக்கொருவர் பிறர் எடுத்துரைத்த விஷயங்களைப் பரிசிலனை செய்யத் தகுந்தவையாகக் கருதுவதால் நம்பிக்கைக்கு இடமிருப்பதாகக் கருதப்படுகிறது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பது சம்பந்தமாக மேற்கொண்டு முயற்சி செய்யுமுன்பு காந்திஜீயின் கோரிக்கைகளுக்கு இராஜப்பிரதிநிதி திட்டமான பதிலுரைக்கவேண்டும். இதனல் அடுத்தபடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியவர் ராஜப்பிரதிநிதியாவார்.

காந்தி—இர்வின் சம்பாஷணைகளை மேற்கொண்டு நடத்தச் சில தினங்கள் பிடிக்குமென்று கவர்ன்மெண்ட் அறிக்கை வெளியிட்டதால் ஸமரச முயற்சியைப்பற்றி அவநம்பிக்கை அதிகரித்தபோதிலும் இன்று மாலே ராஜீய கோஷ்டிகளில் விசாரித்ததில் ஸமரசம் ஏற்படுவதில் நம்பிக்கையில்லாமல் போகவில்லையென்று தெரியவந்தது. மேலும் அடுத்தவாரமத்தியில் ஸமரஸத்திற்கான சௌகரியங்கள் ஏற்படுமென்று நம்பப்படுகிறது. உடனே ஸமரஸமேற்படுவதற்கு முக்யமான தடை குறிப்பான போலீஸ் அதிக்கிரமங்களைப்பற்றி விசாரணைசெய்யக் கவர்ன்மெண்டார் ஒப்புக் கொள்வார்களா என்பதேயாகும். இந்தப் பிரச்னை சம்பந்தமாகத் திருப்திகர

மான முடிவேற்படுமானல் மற்ற விஷயங்களைப்பற்றி அதிகக் கஷ்டமிராது. கவர்ன்மெண்டார் அடுத்தபடியாக அவசரச் சட்டங்களை ரத்துசெய்து விடுவார்கள். அதேகாலத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தும்படியாகவும் அறிக்கை பிறப்பிக்கப்படும். அன்னிய ஜவுளி பஹிஷ்கார விஷயத்தைப் பற்றினவரை அவசர சட்டங்கள் ரத்துசெய்யப்பட்டுவிட்டால் தூண்டுதல் அதிகமாக விராமல் போய்விடுமென்று நம்ப இடமிருந்தது. ஆகையால் ஸமரஸ மேற்படுமுன் தீர வேண்டிய முக்கிய பிரச்சினை போலீஸ் அதிக்கிரமங்களைப் பற்றி விசாரணை செய்யவேண்டுமென்பதே.

காரியக் கமிட்டி மெம்பர்களுக்கு அவசர அழைப்பு

இராஜப்பிரதிநிதி இது விஷயமாகச் சென்னை பம்பாய் கவர்னர்களுடன் ஆலோசித்து வருவதாகவும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுடன் தந்தி மூலமாக யோசித்து வருவதாகவும் கூறப்பட்டது. இந்த யோசனைகள் முடிய மூன்று நான்கு தினங்கள் ஆகக்கூடும். ஆகையால் இராஜப்பிரதிநிதியை மகாத்மாஜி செவ்வாய்க்கிழமையோ அல்லது புதன் கிழமையோ சந்திப்பார் என்றும், அதற்குள் கவர்ன்மெண்டார் முடிவாக இவ் விஷயங்களைப்பற்றி தீர்மானித்திருப்பார்கள் என்றும் நம்பப்படுகிறது. இதனிடையில் மகாத்மாஜியும் வீணுகக்காலத்தைக் கழிக்கமாட்டார். டில்லிக்கு வெளியிருக்கும் ஸ்ரீமான் சிவப்பிரசாத குப்தா, ஸ்ரீபிரகாசர், ஸென்குப்தா, ஸையத்மகமது முதலிய எல்லாக் காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களையும் வந்து சேரும்படி அழைத்தார்.

டில்லியில் பிரம்மாண்டமான கூட்டத்தில் மகாத்மாவின் பிரசங்கம்

மகாத்மாஜீ தமது பிரசங்கத்தில் கூறியதாவது :—

இன்று ஈது பெருநாள். இதை முன்னிட்டு நான் முத லில் எனது முஸ்லீம் சகோதரர்களுக்கு எனது மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இம் மாதிரியான சந்தர்ப்பத்தில் இவ்வளவு பெருங்கூட்டத்தைக் காணும்பொழுது என் எண்ணமெல்லாம் மௌலானு முகமத லியிடம் செல்லுகின்றது. அவரது மரணமானது எனக்கு மிகுந்த துக்கத்தை உண்டுபண்ணியது. தென்னுப் பிரிக்கா விலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவந்ததுமுதல் நான் டில் லியைப்பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் மௌலானு முக மதலி, சுவாமி சிரத்தானந்தர், ஹக்கீம் அஜ்மல்கான் ஆகிய வர்கள் வாழுமிடமாக நினைத்து வந்திருப்பதால்தற் பொழுது கூட அவர்கள் ஸ்தூல சரீரத்தை நான் இந்நகரில் காணுவிட் டாலும் இங்கு அவர்களது சூக்ஷ்ம சரீரங்களிருப்பதை நான் உணருகின்றேன். இம்மாதிரியான நெருக்கடியான சந்தர்ப் பத்தில் பண்டித மோதிலாலை இழக்க நேர்ந்ததைக் குறித்தும் நான் மிக்க வருந்துகிறேன். இவர் மிக்க சமீபத்தில் மாண் டதனுல் நமது கண்ணீர்கூட இன்னும் உலரவில்லை.

இராஜப்பிரதிநிதியுடன் சம்பாஷணை

நான் இராஜப்பிரதிநிதியுடன் செய்துவரும் சம்பா ஷணைகளைப்பற்றி ஏதேனும் தெரிவிக்கவேண்டுமென்று நீங்கள் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றீர்க ளென்பதை நான் அறிவேன். எனக்கும் இராஜப் பிரதிநிதிக்குமிடையில் நடந்த சம்பாஷணைகளைப் பொது

ஜனங்களுக்கு நான் எடுத்துரைக்கக் கூடியவனாக இருக்க மாட்டேன் என்று நினைக்கின்றேன். ஏனெனில் நான் முதலாவதாக, அவற்றைப் பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுவதில்லை என்று பிரமாணஞ்செய்திருக்கின்றேன். இரண்டாவதாக எங்களுள் நடந்துள்ள சம்பாஷணையை நான் உங்களுக்கு எடுத்துரைத்தபோதிலும் அது நமக்கு உதவியாக இருக்கப் போவதில்லை. ஆனால் நான் இந்த சம்பாஷணைகள் மிக்க சிநேகபாவத்துடனும் இனிமையுடனும் நடத்தப்பட்டன என்றுமட்டும் கூறக் கூடும். இந்த சம்பாஷணைகளின் பலன் என்னாகுமென நான் கூறமுடியாது. பலன் கடவுளைப் பொறுத்திருக்கிறது. எதுவும் கடவுள் ஆணைப்படியே நிகழுகின்றது. இந்தியா உங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றதோ அதை நீங்கள் நீடித்துச் செய்துகொண்டு போகவேண்டும். அதுதான் உங்களது கடமையாகும்.

டாக்டர் அன்சாரி டில்லிவாசியாதலால், அவர் டில்லிவாசிகள் செய்த காரியத்தை வெகுவாகப் புகழ்ந்து பேசியிருப்பது இயற்கையேயாகும். ஆனால், நான் இந்தியாவெங்கும் செய்யப்படும் பெருந் தியாகங்களைப் பார்த்துவந்திருக்கின்றேன். நான் டில்லி மற்றெந்த மாகாணத்திற்கும் இணையாக இருக்கிறதென்றே கூறக்கூடும். அதற்காக நீங்கள் எனது பாராட்டுதலைப் பெறத்தகுதி வுடையவர்கள். இங்கும் சரி, வேறிடங்களிலும் சரி, ஸ்திரீகள் செய்துள்ள காரியங்கள் வருணித்து முடியா.

இந்த இயக்கத்தின் சரிதம் எழுதப்படுகையில் இந்தியாவிலுள்ள ஸ்திரீகள் செய்துள்ள தியாகங்கள் சரிதத்தில் முக்கிய பதவியைப்பெறும். அதேமாதிரி குழந்தைகளின் தியாகமும் முக்கிய பதவி பெறும். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள

ஆச்சர்யகரமான விழிப்புத்தான் இப்போராட்டத்தில் கடவுள் நம்முடனிருக்கின்ருர் என்ற எனது நம்பிக்கையை அதிகப்படுத்தி யிருக்கிறது. இந்த சிறுவர் சிறுமிகள் இம்மாதிரியான வேலைகளுக்கு ஒருபோதும் சேர்க்கப்படவில்லை. அவர்களுக்கு இம்மாதிரியான வேலைகளுக்கான பயிற்சி ஒருபோதுமளிக்கப்படவில்லை. அவர்கள் இவற்றை எல்லாம் எப்படிச் சாதித்துக் கொண்டனர் என்பது எனக்குப் புரியவே இல்லை. அல்லது இவர்களுக்கு யார் வழிகாட்டினுர்கள் என்பதையும் பிறரும் எனக்குச் சொல்ல முடியவில்லை. கடவுள்தான் அவ்வாறு குழந்தைகளுக்கு வழிகாட்டியிருக்கக்கூடும். ஆனுல் புனிதமான போராட்டத்தில் நீங்கள் செய்யும் எந்தத் தியாகமும் மிக்க அற்பமானதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெருமையால் பூரித்துக் கர்வமடையாதீர்கள். இந்தியாவுக்காக நாம் வேண்டுவது பூரண சுயராஜ்யம். அந்த இலக்ஷியத்தை அடைவதற்கு இந்தியா இன்னும் மேற்கொண்டு என்னென்ன தியாகங்களைச் செய்யவேண்டுமென்பது யாருக்குத் தெரியும்.

சமாதானத்திற்காகப் படும்பாடு

ஜனங்கள் இன்னும் அதிகமான கஷ்டங்களுக்கும் தியாகங்களுக்கும் உள்ளாக வேண்டியிராதபடி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மனிதனுல் எவ்வளவு முயற்சிகளைச் செய்யக்கூடுமோ அவ்வளவு முயற்சிகளையும் நான் செய்துவருகின்றேன் என்று உங்களுக்கு உறுதிமொழி யளிக்கின்றேன். ஆனுல் எல்லாம் கடவுளைப் பொறுத்திருக்கிறது. ராஜி ஏற்படக்கூடாதென்பது கடவுளது திருவுள்ளச் சம்மதமாக இருந்தால் நான் ஜனங்கள் இன்னும் அதிகமான கஷ்டங்களை மேற்

கொள்ளத் தயாராக இருக்கவேண்டுமெனச் சொல்ல நேரிடும்.

மற்ற நாடுகள் சுதந்தரம் பெறுவதற்காகச் செய்திருக்கும் தியாகங்களை நோக்குமிடத்து நாம் செய்துள்ள தியாகங்கள் ஒன்றுமேயில்லை. ஆனல் நாம் மற்ற நாட்டினரைப் போல அவ்வளவு கஷ்டப்படாமலிருந்துவந்ததற்கு ஒரு காரணமிருக்கிறது. அது யாதெனில் எனக்குப் பட்டப்பகலைப்போல் மிக்க நிதர்சனமாகத் தெரிகிறது. நாம் பூரண சுயராஜ்யத்தைப் பெறப் பிரதிக்ஞை செய்தபொழுது நாம் வேறு பிரதிக்ஞையும் செய்தோம். அதாவது நமது லக்ஷிய சித்திக்காக நாம் எதைச் செய்யினும் அது உண்மைக்கும் அஹிம்சைக்கும் இணங்கியதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுவதாகப் பிரதிக்ஞை செய்துகொண்டோம். இது தான் நான் சொன்ன காரணமாகும். பொதுவாக இந்தியா அனைத்தும் முக்கியமாக கிராமவாசிகளும் செய்துள்ள காரியங்களை நினைக்கையில் நாம் சத்தியம், அஹிம்சை இவற்றைப் பின்பற்றி நடப்பதாகச் செய்த பிரதிக்ஞையில் பெரும் பகுதியை நிறைவேற்றிவிட்டோமென்று அபிப்பிராயப்படுகின்றேன். நாம் சத்தியத்தையும் அஹிம்சையும் அனுஷ்டித்து வந்தபோதிலும் அதை இன்னும் நமது மதப் பூர்வமான கோட்பாடாகச் செய்யவில்லை. இதை நானும் மறக்கமாட்டேன். உங்களையும் மறக்கவிடமாட்டேன். அவற்றைச் சிலர் தற்காலத்திற்கேற்ற முறையாகவே கையாண்டுவருகின்றனர். ஆனல் நீங்கள் அதைத் தற்காலத்திற்கேற்ற முறையாக நீங்கள் மேற்கொண்டிருந்தபோதிலும் நீங்கள் இதை அனுஷ்டிக்கும்வரை பலாத்காரமுறையில் நடக்கவும் கூடாது. அம்மாதிரியான முறையைப்பற்றிச் சிந்தனையும் செய்யக்கூடாது. அசத்தியம் அல்லது பலாத்காரம் ஆகிய

வற்றைப்பற்றி நினைப்பதுகூட பிரதிக்ஞையை மீறிய செயலாகும். ஆமதாபாத் காங்கிரஸில் இவ்விஷயம் ஹக்கீம் அஜ்மல் கான், டாக்டர் அன்சாரி ஆகிய தலைவர்கள் முன்னிலையில் பூரணமாக விவாதிக்கப்பட்ட பின் நாம் எவ்வளவு காலம் சத்தியத்தையும் அஹிம்சையையும் மனோ வாக்கு காயங்களால் அனுஷ்டிக்க நம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கின்றோமோ அவ்வளவு காலம் இந்தப் பிரதிக்ஞையைச் சிறிதளவு மீறினாலும் நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களாவோமென முடிவு செய்யப்பட்டதென்பது உங்கள் எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். இந்தியர்கள் சுயராஜ்ஜியத்திற்கு அருகதையற்றவர் என்ற கூற்றை வேண்டுமானாலும் நான் சகித்திருப்பேன். ஆனால் எனது தேசத்தார் சத்தியமோ அல்லது யோக்கியமோ அற்றவர்கள் என்று புகார் உண்மையாக இருந்தால் அதை நான் ஒரு க்ஷணமும் கேட்டுச் சகியேன். கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர்கள் தெய்வ விசுவாசமற்ற முறையில் நடப்பவர்களாகவும் நம்பிக்கை மோசம் செய்பவர்களாகவும் இருப்பதைவிடப் பெரிய துக்க நிலைமை வேறெதுவும் இருக்குமென நான் நினைக்கவும் முடியவில்லை. அப்படிப்பட்ட தன்மைவாய்ந்தவர்கள் சுதந்தரத்திற்குத் தகுதியுடையவர்களே இல்லை. அவர்கள் அடிமை வாழ்விற்கும் அதினும் கேவலமான நிலைமைக்கும் தான் அருகதையுள்ளவர்களாவார்கள். இதற்காகவே நான் நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் இப்பொழுது மேற்கொண்டுள்ள முறையைக் கைவிட்டு வேறு முறையை மேற்கொள்ளலாமென்றும் ஆனால் நீங்கள் சத்தியத்தையும் அஹிம்சையும் நம்பியிருக்கின்றவரை நீங்கள் உங்களையும் உலகத்தாரையும் வஞ்சிக்கக்கூடாதென்றும், எப்பொழுதும் பலமாக வற்புறுத்தி வந்திருக்கின்றேன். இதனால் நான் அந்நியத்துணிக்

கடைகளை மறியல் செய்கையில் நம்மவர் சிறிது ஹத்து மீறிச் சென்றதாக கேள்விப்பட்டதால் நான் மிக்கவருந்தி வந்திருக்கிறேன். இது சம்பந்தமாகச் செய்யப்படும் புகார்களை ஆராய எனக்கு சாத்தியமாகவில்லை. ஆனல் 1921-22-ம் வருஷத்தில் நடந்த ஹத்துமீறிய செயல்களுக்காக இயக்கத்தை நிறுத்திப் பிராயச்சித்தம் செய்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். தற்பொழுது அம்மாதிரியான பிராயச்சித்தம் செய்வதென்பது முடியாது. ஆனல் எங்கெங்கு இந்த ஹத்துமீறிய செயல்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் நீங்கள் அதனை நிறுத்திவிட வேண்டுமென்று நான் கூறவேண்டும். மறியலில் நாம் அதிக்கிரமங்களில் ஹத்துமீறிய செயல்களிலிறங்குவதை விட அந்நியத் துணி வியாபாரிகள் அந்நியத் துணி விற்பனையையும் குடிகாரர்கள் தங்கள் குடிப்பழக்கத்தையும் நீடித்து வரும்படி விடுவது சிறந்ததாகும்.

ஆனல் மற்றொரு அபாயத்தைப்பற்றியும் நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். நாம் அதிக்கிரமங்களில் இறங்கினல் நமது நாசத்திற்கே வழி திறந்துவிட்டவர்களாவோம். சுயராஜ்ஜியம் கிடைத்து விட்டால் தலையிட்டு சமாதானத்தை ஏற்படுத்த யந்திர பீரங்கிகளுடன் கூடிய 3-வது தரப்பார் இருக்கமாட்டார்கள். நாம் ஒருவருக்கொருவர் தான் போராடிக்கொண்டிருப்போம். சகோதரருள் நடக்கும் சண்டை நமக்கு நாசத்தையே விளைவிக்கும். இதனல் அதிக்கிரமங்களில் இறங்காமல் மறியல் செய்ய முடியாதென்று உங்கள் மனதில் சிறிதளவு தோன்றினல்கூட நீங்கள் மறியலையே நிறுத்திவிடுவது உத்தமம். நான் இம்மாதிரியான விஷயங்களில் நிபுணன் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்

துக்கொள்ளவேண்டும். முன்னர் நாம் சிறிதுகூட பலாத்காரத்திலிறங்காமல் ஏராளமாக மறியல் செய்திருக்கின்றோம் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். நாம் அதிக்கிரமச் செயல்களை நீக்கியவுடன் நமது வேலை வீழ்ந்துபோகுமென அஞ்சாதீர்கள். நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களை உங்களது நிலையிலிருந்து தவறுதிருக்கும்படி கோரும் நான் வேறு சில முறைகளைக் கையாளும்படி எடுத்துச் சொல்லக் கூடியவனாக இருக்கின்றேன் என்பதை நம்புங்கள். ஆனால் நான் அவற்றைப்பற்றி இன்று எதுவும் சொல்லமாட்டேன். புகார் செய்யவும் கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன. நான் அவற்றைப்பற்றி விசாரணை செய்துகொண்டிருக்கின்றேன். நாம் தவறுகளைச் செய்திருக்கக்கூடியது சாத்தியமானது. இவற்றைக் கவனமாக ஆலோசித்துப் பார்த்து நாம் ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் அவற்றைத் திருத்தும்படி எல்லா காங்கிரஸ் ஊழியர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றேன். நான் எல்லா ஹத்துமீறிய செயல்களையும் நீக்கவேண்டுமென உங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஹத்து மீறிய செயல் என்று நான் சொல்லுவதன் பொருளைத் தெரிந்துகொள்ள நீங்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கலாம். அம்மாதிரியான ஆவலுள்ளவர்கள் என்னிடம் வந்தால் நான் அதை விளக்குகின்றேன்.

அந்நியத்துணி வியாபாரிகளுக்கோரு வார்த்தை

அந்நியத் துணி வியாபாரிகளுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகின்றேன். சில மாதங்களுக்கு அந்நியத் துணியை விற்காமலிருந்ததினால் நீங்கள் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைச்செய்துவிட்டதாக நினைத்து ஏமாறுதீர்கள். தேசத்தாரையும் ஏமாறச்செய்யாதீர்கள்.

இந்த அந்நியத் துணி வியாபாரம் நிரந்தரமாக நிற்கவேண்டும். ஏனெனில் இதன்மூலம் தான் நாம் நமது தேசத்திலுள்ள கோடிக் கணக்கான ஜனங்களின் க்ஷேமத்தை நாம் பெருக்க முடியும். அந்நியத் துணியைப் பூரணமாக பகிஷ்கரிப்பதுதான் அந்நியத் துணி வியாபாரிகளின் தர்மமென்று நான் வினயமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவ்வியாபாரிகள் தியாகஞ்செய்யத்தான் வேண்டியிருக்கும். ஆனால் சமூகத்தின் மற்றப் பகுதியினர் செய்யும் பெரும் தியாகங்களுடன் ஒப்பிடுமிடத்து இத்தியாகம் எம்மட்டு. டில்லி வாசிகளே! நீங்கள் என்னைக் கௌரவிப்பதற்காக ஆயிரக் கணக்காக வந்திருப்பதைக் குறித்து நான் தற்பெருமை கொள்ளவில்லை. நீங்கள் எல்லோரும் பூரணமாக சுயராஜியமடையத் தீர்மானங் கொண்டிருப்பதாக உலகிற்கு அறிவிக்கவே இங்கு வந்திருக்கின்றீர்கள். நான் ராஜப் பிரதிநிதியுடன் செய்யும் சம்பாஷணையைப் பற்றி நீங்கள் ஒரு கணமேனும் கவலைகொள்ளாதீர்கள். அந்த சம்பாஷணையைப்பற்றியே நினைக்காதீர்கள். நீங்கள் உங்களது வேலையைக் கவனித்துக்கொண்டு போங்கள். ஆனால் பலன் என் வசமோ அல்லது டாக்டர் அன்சாரி வசமோ அன்றி பண்டித மாளவ்யா வசமோ இல்லை என்பதையும் உங்கள் வசமே இருக்கிறதென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு கருவியேயாவேன். நான் உங்களுடைய பணிவான தூதனாகவே வேலை செய்கின்றேன். எல்லாம் நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதையே பொறுத்திருக்கிறது. நீங்கள் செய்ய தவறுகின்றவற்றைப் பொறுத்தும் பலனிருக்கும். சத்தியம் அஹிம்சா இவை சம்பந்தமாகச் செய்த பிரதிக்ஞைப்படி நடக்கக்கடவுள் உங்களுக்கு சக்தியளிப்பாராக.

காங்கிரஸ் காரியக் கமிட்டி

டில்லியில் கூட்டம்

கார்யக் கமிட்டியானது பிப்ரவரி மாதம் 21-ந் தேதி திடீரென ஏன் கூட்டப்பட்டதென்ற காரணம் மர்மமாக வே இருந்தது. அன்று காலை 8 மணிக்குக் கார்யக் கமிட்டிக்கூட்டம் பிற்பகலில் கூடுமென அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மௌலானா அபுல்கலாம்ஆஸாத் ஸ்ரீமான்கள் ஸ்ரீ பிரகாசர், ஜெயராமதாஸ், தௌலத்ராம் ஆகிய 3 மெம்பர்களைத் தவிர மற்ற மெம்பர்களெல்லாம் பிரசன்னமாக இருந்தார்கள். காங்கிரஸின் பொக்கிஷதார்களுள் ஒருவரான ஸ்ரீமான் சிவப்பிரகாசகுப்தா காசி வாசி. அவர் சமீபத்தில் காசியில் நேர்ந்த குழப்பம் பரவவொட்டாமல் தடுப்பதற்காகவும் அமைதியை ஏற்படுத்துவதற்காகவும் காசியில் தங்கியிருக்க விரும்பினர். ஆனல் அவரும் கூட்டத்தில் பிரசன்னமாக இருந்தார். மகாத்மாஜி ஏற்கெனவே இராஜப் பிரதிநிதிக்கு முன்பு சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளுக்குக் கார்யக்கமிட்டியின் அனுமதியை உத்தியோக முறையில் பெற விரும்பியதால் இக் கூட்டம் கூட்டப்பட்டதாக கூறப்பட்டது. இது நன்ருகத் தோனிக்கவில்லை. தற்சமயம் காந்திஜீயே காரியக் கமிட்டியாக இருக்கிருர். காரியக்கமிட்டியே காந்திஜியாக இருக்கிறது. மகாத்மா எது செய்தாலும் கார்யக்கமிட்டியானது சிறிதும் மறுத்துரைக்காமல் அவரது செயலை ஆதரித்து வருகிறது. பண்டித ஜவஹர்லால் நேருகூட காந்திஜியின் முடிவுக்குட்பட்டு நடக்கிருர். காங்கிரஸ் தலைவரான பண்டித ஜவஹர்லால் மகாத்மாஜீயின் யோசனைப்படி டில்லிக்கு அவசரமாகப் புறப்பட்டு

வரும்படி ஸ்ரீமதி சரோஜனி தேவிக்கும், மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் எம். எஸ். ஆனேக்கும் தந்தி அனுப்பினர். இதற்கு அவர்களைக் கலந்து பேசுவது உசிதமெனக் கருதப்பட்டது. அன்றைய கார்யக் கமிட்டிக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் நீங்கலாக டாக்டர் அன்சாரியும் பண்டித மதன்மோகன மாளவ்யாவும் பிரசன்னமாக இருந்தார்கள். ஒவ்வொருவரும் நடவடிக்கைகளை ரகசியமாக வைத்துக்கொள்ளுவதாகப் பிரமாணஞ் செய்தாதாகத் தெரிகிறது. இதன் பிறகு மகாத்மாஜீ தாம் இராஜப்பிரதிநிதியுடன் செய்த சம்பாஷணையை எடுத்துரைத்ததாகவும் தெரிகிறது. அவர் ராஜப்பிரதிநிதி தம்முடன் "மிக்க அந்நியோன்யமான தோரணையில்" பேசினதாக வருணித்ததாகவும் ராஜப்பிரதிநிதி தமக்குள்ள கஷ்டங்களைக் குறித்துத் தம்மிடம் சொன்னவற்றைக் காநதிஜீ எடுத்துக் கூறியதாகவும் தெரிகிறது. தாம் எடுத்துரைத்த கோரிக்கைகளில் பலவற்றிற்கு இராஜப்பிரதிநிதி செய்ய வேண்டு மென விரும்பிய திருத்தங்கள் யாவை என்பதையும் மகாத்மாஜி கார்யக்கமிட்டிற்கு எடுத்துரைத்தாராம். இராஜப்பிரதிநிதி ராஜீய மன்னிப்பளிக்க ஆவலுள்ளவராக இருப்பதாகவும் அதை அவர் அளிக்கத்தயாராக இருப்பதாகவும் கமிட்டிக்குக் காந்திஜீ சொன்னதாகக் கூறப்படுகிறது. கமிட்டி ஒவ்வோரு கோரிக்கையைப்பற்றியும் அது சம்பந்தமாக இராஜப்பிரதிநிதி தெரிவித்த அபிப்பிராயங்களைப் பற்றியும் 2 மணி நேரம் விவாதித்தது. கமிட்டியார் அவற்றில் எதைப்பற்றியும் இறுதியான முடிவுக்கு வரவில்லை. காங்கிரஸ் தற்போது இராஜப்பிரதிநிதிக்குச் சிறிது விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிய வந்தது. இந்த மன

மாறுதலுக்கு டாக்டர் அன்சாரியே பெரிதும் காரணமாவார் என்று சொல்லப்படுகிறது. அவர் தமது மிகுந்த செல்வாக்கை மாஜி காங்கிரஸ் தலைவர் என்ற ஹோதாவிலும் சிறந்த ராஜீயவாதிகளை உபசரிப்பவர் என்ற ஹோதாவிலும் உபயோகித்துவந்தார். அன்று காலையில் பம்பாயிலிருந்து கிடைத்த செய்தியால் ஸர் எர்னஸ்ட் ஹாட்ஸனும் மிஸ்டர் ஹட்ஸனும் டில்லியிலிருந்து டெலிபோன் செய்தி கிடைத்ததன் மேல் டில்லிக்குப் புறப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இது இராஜப்பிரதிநிதி இப் பிரச்சினை ஒருவாறு பைசல் செய்துவிட மிகத்தீவிரமாக முனைந்திருப்பதைக் காட்டுவதாகக் காங்கிரஸ்காரர்களுக்கு அபிப்பிராய மேற்பட்டிருந்தது. காங்கிரஸ் கமிட்டி புதிய மனேபாவமுடையதாக இருப்பதும் இராஜப்பிரதிநிதி நியாயம் வழங்கப்படும்படி செய்ய ஆவலாக இருப்பதும் இங்குள்ள ஒவ்வொருவரது மனதிலும் நம்பிக்கையை உண்டாக்கி வந்தன. கார்யக்கமிட்டி மறுதினம் காலை 10-மணிக்கு மீண்டும் கூடும். ஆனால் மகாத்மாகாந்திக்கு இராஜப்பிரதிநிதியின் பதில் கிடைக்கும் வரை கார்யக் கமிட்டியின் கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்படலா மென்றும் தோன்றியது. லார்டு இர்வின் மகாத்மாகாந்தியைக் கண்டு பேசிய பொழுது "காட்டிய அந்நியோன்ய பாவத்துடனேயே'' இதிலும் இருப்பதாகக் கடிதம் காட்டினல் எல்லாம் இனிது முடிவுறலாம். சர்தார் வல்லபாய், மிக்க முன் ஜாக்கிரதையுடன் கூடிய ராஜீயவாதி. அவர் இராஜப் பிரதி நிதியிடமிருந்து பதில் கிடைக்கும் வரை மகாத்மாவி கோரிக்கைகளைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி உத்தியோக முறையில் மாற்றுமலோ அல்லது குறைக்காமலோ இருப்பது உசிதமெனக் கருதியதாகத் தெரிகிறது.

காரியக்கமிட்டி கூடியிருப்பதால் டாக்டர் அன்சாரி யின் வீட்டிற்குள் அன்று எவரும் அனுமதிக்கப்படவில்லை. மகாதமாவைப் பார்க்க விரும்பிய எவரையும் கூட உள்ளே விடாதிருக்கும்படி தொண்டர்களுக்கு உத்தர விடப்பட்டிருந்தது.

ஸர் சாப்ரூவும் அவரது சர்வகட்சி மகாநாட்டுச் சகாக்களும் அன்று இராஜப்பிரதிநிதியைக் கண்டு மீண்டு பேசினர். மதன்மோகன் மாளவியாவும் கோவிந்த காந்த மாளவியாவும் முதல் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் மெம்பர்களாக இல்லாவிட்டாலும் (காரியக் கமிட்டி) விவாதத்தில் கலந்து வந்தனர்.

காரியக்கமிட்டிக்கூட்டம் 3மணி நேரம் நடைபெற்றது. விவாதிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் அபிப்பிராயம் ஏகமனதுடன் கூடியதாக இருந்தது. அடுத்த செவ்வாய்க் கிழமை யன்று லார்டு இர்வினுடன் மகாத்மாஜீ பேசுகையில் மகாத்மா திட்டமான ஆக்ஞைகளையும் பெற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு மெம்பரும் மகாத்மா காந்தியினிடம் பூரண நம்பிக்கை பெற்றிருந்தார். காரியக் கமிட்டிமெம்பர்கள் மிக்க ஒற்றுமையாக இருப்பதால் எவரிடமிருந்தும் எவ்வித தகவலையும் பெறுவது சாத்தியமில்லை. பிரதமமந்திரியின் அறிக்கையைப்பற்றி ஆலோசிக்கப்பட்டதாகப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி முற்றிலும் ஆதாரமற்றது. இது "முட்டைகளை அடைகாக்கு முன்பு குஞ்சுகளைக் கணக்கிடுவதற்கு ஒப்பாகுமென்று" ஒரு பிரபல காங்கிரஸ்காரர்கூறினர். எந்நிபந்தனைகள்மேல் போராட்டத்தைநிறுத்துவது என்பதுபற்றித் தான் விவாதிக்கப்பட்டது, "இதுகாறும் எல்லாம் ஒன்ருக நடந்து வந்திருக்கிறது இன்னும் 3 தினங்களில் இம்மாதிரியே நட

ந்தால் நிலைமைதெளிவாகிவிடும்'' என்று மற்ெருரு பிரபல காங்கிரஸ்காரர் கூறினர். இராஜப்பிரதிநிதி இங்குள்ள மாகாண கவர்னர்களுடன் நெடுநேரம் பேசினர். இங்கிலாந்திலுள்ளவர்களுடன் அவர் சதா தந்திப் போக்குவரத்து செய்து வந்ததாகவும் தெரிகிறது.

காரியக்கமிட்டி செய்த வேலை.

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் பல மாகாணங்களிலும் கராச்சிக் காங்சிரஸுக்கு முன்பு நடக்க வேண்டிய காங்கிரஸ் தேர்தல்களைப்பற்றியே முக்கியமாக விவாதிக்கப்பட்டது. ஆனல் திட்டமான முடிவுகள் எதுவும் செய்யப்படவில்லை. ராஜீய நிலைமையைப்பற்றியும் சிறிது விவாதிக்கப்பட்டது. கமிட்டியின் விசேஷ அழைப்புக்கிணங்க பண்டித மதன்மோகன மாளவியாவும் ஸ்ரீமதி சரோஜினியும், டாக்டர் அன்சாரியும், பாபுராஜேந்திர பிரசாதும் ஸ்ரீமான் எம். எஸ் ஆனேயம் கூட்டத்திற்கு வந்திருந்தனர். இராஜப்பிரதிநிதியிடமிருந்து மகாத்மாஜிக்கு ஏதேனும் ஒரு கடிதம் வருமென எதிர்பார்த்தனர். இது வரும் வரை காந்திஜீ ஸர் டேஜ்பகதூர் சாப்ருவை இங்கு தாமதிக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார். மகாத்மாஜீ அன்று பிற்பகலிலேயே தமது 24 மணி நேர மௌன விரதத்தை ஆரம்பித்து விட்டார். மறுநாள் பிற்பகலில் கார்யக் கமிட்டி தனது விவாதங்களைத் துவக்க இயலும்படி செய்வதற்காக இம்மாதிரி செய்தார். சென்ற சில தினங்களாகப் பல அமெரிக்கப் பத்திரிகா நிருபர்களும் பிரிட்டிஷ் பத்திரிகா நிருபர்களும் காந்திஜீயை பேட்டி கண்டு பேசினர்.

மகாத்மாவுக்கு மீண்டும் இராஜப்பிரதிநிதியின் அழைப்பு.

பிப்ரவரிமீ 27உ காலை இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து 11 அடிக்க 10 நிமிஷமிருக்கையில் சிகப்பு உடை அணிந்த ஒரு வேலையாள் ரோல்ஸ்ராய்ஸ் வண்டியில் டாக்டர் அன்ஸாரி பங்களாவுக்கு வந்து சேர்ந்தார். அப்போது காங்கிரஸ் கார்யக்கமிட்டிக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. காங்கிரஸ் பொதுக்காரியதரிசி டாக்டர் சையது முகம்மது பெஷாவரிலிருந்து வந்த முஸ்லிம் காங்கிரஸ்தாரர்களிடம் எல்லைப்புற நிலைமையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் இராஜப்பிரதிநிதியிடமிருந்து வந்த ஆள் ஒரு கடிதத்தை நீட்டினார். அக்கடிதத்தின் மேல் மகாத்மாவின் விலாசமிடப்பட்டிருந்தது. கடிதத்தைப்பெற்றுக்கொண்டதாகக் காரியதரிசி எழுதி வேலையாளிடம்கொடுத்து விட்டு அதை மகாத்மாவிடம் அனுப்பிவிட்டார். அதில் லார்டு இர்வின் முன்னதாகத் தகவல் அறிவிக்கமுடியாது போனதற்கு வருந்துவதாகவும் அன்று பகல் 2-30 மணிக்குத் தம்மை வந்து சந்திக்கும்படியும் எழுதியிருந்ததாகத் தெரிந்தது. அக்கடிதத்தில் இதைத் தவிரவேறு விஷயமெதுவுமில்லை. அதன்படி மகாத்மா, ஜமன்லால் பஜாஜோடும், ஸ்ரீமான் ஜி. டி. பிர்லாவோடும் சரியாக 2 மணிக்கு டாக்டர் அன்ஸாரி பங்களாவை விட்டுப் புறப்பட்டார்.

சூரியன் பிரகாசமாக ஒளி வீசிக்கொண்டிருந்தான். இராஜப்பிரதிநிதி மாளிகையில் உள்ள நீர் ஊற்றுகளிலிருந்து ஜலம் அழகாக வடிந்துகொண்டிருந்தது. மணி சரியாக 2-30 ஆயிற்று. பச்சை நிறமுள்ள மோட்டார் வண்டியொன்று ராஜப்பிரதிநிதி மாளிகையில் நுழைந்தது.

அதில் மகாத்மா மட்டும் உட்கார்ந்திருந்தார். அவர் சற்று இளைத்துப் போயிருந்தார். முழங்காலுக்குமேல் நிற்கும் இடுப்பு வேஷ்டியுடன் தலையில் ஒன்றும் அணிந்துகொள்ளாமல் வலது கையில் ஒரு நோட் புத்தகம் சகிதம் மகாத்மா இராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் சென்றார். அவரது வலது கையின் முதல் விரலில் கத்திகாயம் பட்டதால் அதற்குக் கட்டுகட்டப்பட்டிருந்தது. அன்று பிற்பகல் காந்திஜி லார்டு இர்வினைக் காணச்செல்லும் செய்தி பலருக்குத் தெரியாதாகையால் ரஸ்தாக்களில் கூட்ட மில்லை. ஒன்பது நாளைக்குப் பிறகு அன்று மீண்டும் இராஜப்பிரதிநிதி மாளிகையில் மகாத்காவும் லார்டு இர்வினும் கலந்து சமரஸ சம்பாஷணைகளை ஆரம்பித்தனர். 3½ மணி நேரம் சம்பாஷணை நடந்தது. 5-30 மணிக்கு அப்புறம் மகாத்மா வெளியே வந்து தமது வண்டியில் ஏறி மாலைச் சாப்பாட்டுக்காகவெகு வேகமாக டாக்டர் அன்ஸாரி பங்களாவுக்குச் சென்றார். அப்போது சூரியனும் அஸ்தமிக்கும் சமயமாக விருந்தது. மகாத்மா உற்சாகமாகவேயிருந்தார்.

இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து மகாத்மா வந்தவுடன் பத்திரிகை நிருபர்களிடம் மீண்டும் இராஜப் பிரதிநிதி தம்மை வந்து காணும்படி என்னிடம் சொல்லவில்லை. ஆயினும் நாளை ஒருக்கால் ராஜப்பிரதிநிதி மாளிகைக்கு நான் போகக்கூடுமென்றும் இது சம்பந்தமாக வேறு ஒன்றும் சொல்ல முடியாதென்றும் கூறினர். 8-35மணிக்கு அவர் கார்யக் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வெளியே உலாவிவரப் புறப்பட்டபோது பத்திரிகை நிருபர்களிடம் நாளைக் காலை சனிக்கிழமை தாம் இராஜப்பிரதிநிதியைக் காணப்போவதில்லையெனத் திட்டமாகச் சொன்னர். வேறு எந்த கேள்விக்கும் அவர் பதில் அளிக்க சம்மதிக்க

வில்லை. அவர் ஒரு நிருபரிடம் தற்சமயம் நிலைமை ஒரு வாறுக விருப்பதாகவும் இந்நிலையில் தாம் பத்திரிகை நிருபராகவிருந்தால் முக்கிய புருஷரை அணுகி ஒன்றும் கேட்காமலிருப்பதே நலமென நினைப்பதாகக் கூறினர்.

அன்று காங்கிரஸ் கார்யக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்ட மற்றதலைவர்களும் தங்களை ஒரு கேள்வி யும் கேட்க வேண்டாமெனச் சொல்லிவிட்டார்கள். ஒன் றும் திட்டமாகத் தெரியவில்லை. மறுநாட்காலை காரியக் கமிட்டிக் கூட்டம் மீண்டும் நடக்க இருந்தது. இச்சனிக் கிழமை யன்றுடில்லியை விட்டுப் புறப்படவிருந்தவர்களும் தங்கள் பிரயாணத்தைத் திங்கட்கிழமை வரை நிறுத்தி வைத்துக் கொண்டார்கள். யாவருக்கும் கவலையாகவே யிருந்தது. முதல் நாளிலிருந்த ஒரு சந்தோஷத் தோற்றம் அன்று காணப்படவில்லை. கூட்டம் முடிந்தபின் பண்டித மாளவியா வண்டி ஏறுகையில் ஒரு நிருபர் அவரிடம் சென்று, "நிலைமை நம்பிக்கைக் கிடமுள்ளதாக விருக் கின்றதா?" என்றதற்கு அவர் இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. தயவு செய்து என்னை வேறு கேள்வி கேட்க வேண்டாம்" என்றூர்.

டாக்டர் அன்ஸாரி வாயைத் திறக்கவில்லை. அவர் ஒருவரோடும் பேசாமல் அவசரமாகச் சாப்பாட்டுக்குச் சென்றூர். ஜனப் ஷெர்வானி கையால் சமிக்ஞை காட் டியதிலிருந்து விஷயம் ஒன்றும் திருப்தியாக வில்லையென யூகிக்கும்படி யிருந்தது. கார்யக்கமிட்டியின் மற்ற அங் கத்தினர்கள் "எங்கள்வாய்க்கு பூட்டு போடப்பட்டிருக் கிறது. எங்களை ஏதாவது சொல்லும்படிச் செய்ய முயற் சிப்பதில் பயனில்லை" என்றூர்கள்.

அங்கத்தினர்கள் ஒவ்வொருவரிடமும் சென்றுபார்த்ததிலிருந்து இராஜப் பிரதிநிதி காந்திஜியின் கோரிக்கைகள் அனைத்தையும் அங்கீகரிக்கவில்லை யென்று நினைக்க வேண்டியிருந்தது.

மகாத்மாவின் கோரிக்கைகளாவன:—

(1) ராஜீயச் சிறையாளரை நிபந்தனையின்றி விடுவிப்பது.

(2) சாத்விகமாக சீமை ஜவுளிக்கடை மறியல் நடத்தவும் சாராயக்கடை மறியல் நடத்தவும் அனுமதி கொடுப்பது.

(3) போலீஸார் அமிதமாக நடந்துகொண்டதைப் பற்றி விசாரிக்கக் கமிட்டி நியமிப்பது.

(4) பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களைத் திருப்பிக் கொடுப்பது.

(5) வரிகொடா இயக்கம் நடந்துவரும் இடங்களில் நிலவரி வசூலைக் கொஞ்ச காலத்துக்கு நிறுத்திவைப்பது.

(6) அடக்குமுறைச் சட்டங்களையும் அவசரச் சட்டங்களையும் வாபீஸ் வாங்கிக்கொள்ளுவது.

(7) உப்பு சேகரிக்கப் பொது ஜனங்களை அனுமதிப்பது.

இவைகளில் சிலவற்றை ராஜப்பிரதிநிதி அங்கீகரிக்கவில்லையென தெரிகிறது. மற்றும் சில திருத்தப்பட்டிருக்கின்றன. இவற்றைத்தான் மகாத்மாவின் கோரிக்கைகளுக்கு எதிரான கோரிக்கைகள் எனச் சொல்லவேண்டும். காங்கிரஸும் கவர்ன்மெண்டும் ஒரு அந்தஸ்தை உத்தேசித்தே போராடுவதாகத் தெரிந்தது. உப்பு விஷயத்தில் காந்திஜி சற்றும் விட்டுக் கொடுக்காமலிருந்தார். கவர்ன்மெண்டாரும் இவ்விஷயத்தில் இணங்கிவர

மறுத்தனர். இவ்விஷயத்தில் இணங்கிவிட்டால் காந்திஜிக்கு வணங்கிவிட்டதாக ஆகிவிடும் எனக் கவர்ன்மெண்டார் கருதினர். இதற்குக் கவர்ன்மெண்டார் இணங்கினலும் காங்கிரஸ்காரர்கள் எவரும் இனி உப்பு உற்பத்தி செய்வதில் காலம் கழிக்கப்போவதில்லையென்பது கவர்ன்மெண்டுக்கு நன்ருய்த் தெரியும். காந்திஜீக்கும் இது தெரிந்துதான் இருக்கும். இருந்தாலும் அவர் இதை வற்புறுத்துகிருர். மறியல் விஷயத்திலும் சற்று கஷ்டம் இருப்பதாகத் தெரிகிறது. விசாரணைக் கமிட்டி விஷயமாக ஒன்றும் திட்டமாகத் தெரியவில்லை. மற்றவற்றை இராஜப்பிரதிநிதி ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. இப்போதுள்ள நிலைமையில் நம்பிக்கைக்கிடமில்லையெனச் சொல்வதற்கில்லையென்றும் ஒருவரும் கவலைப்படுவதற்கில்லையென்றும் செய்தி தெரியவந்தது. மறுநாள் காலை கூடவிருக்கும் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இராஜப்பிரதிநிதிகூறுவதை ஏற்றுக்கொள்வதா நிராகப்பதாஎன்ற விஷயம் ஆலோசனைக்குவந்தது.

கருங்கல்லில் நார் உரிக்க முடியுமா?

இராஜப்பிரதிநிதி மாளிகையிலிருந்து காந்திஜி வெளியே வந்ததும் பத்திரிகை நிருபர்கள் பலர் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். டாக்டர் அன்ஸாரி வீட்டிலும் பலர் கூடியிருந்தார்கள். நிலைமை நம்பிக்கைக் கிடமாக விருக்கிறதா என, மகாத்மாவை நிருபர்கள் கேட்டதற்கு "கருங்கல்லிலிருந்து நார் உரிக்க முடியாது" என அவர் திட்டமாகப் பதில் சொல்லி விட்டார். அவரை டாக்டர் அன்ஸாரி மாளிகையில் கண்டபோது அவர் பேசிய விதத்திலிருந்தும் அவர் நடந்து கொள்ளும் பான்மையிலிருந்தும்

அவர் சந்தோஷத்துடன் இல்லையெனத் திட்டமாகத் தெரிகிறது என்று ஒரு நிருபர் தெரிவித்தார். அவர் விரும்பும் வண்ணம் காரியங்கள் நடக்கவில்லை யென்றும் நினைக்க வேண்டியிருந்தது. அவர் டாக்டர் அன்ஸாரி பங்களாவுக்கு அவசரமாக வந்து சாப்பிட்டு விட்டு ஒரே வார்த்தையில் பத்திரிகை நிருபர்களை அனுப்பிவிட்டுக் கார்யக் கமிட்டிக் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டார்.

கார்யக் கமிட்டிக் கூட்டம்.

கார்யக்கமிட்டிக் கூட்டத்துக்கு டாக்டர் அன்ஸாரி, பண்டித மாளவியா, ஸ்ரீமதி சரோஜனி, பாபு ராஜேந்திர பிரசாத், ஜனப் ஷெர்வானி, ஸ்ரீமான் ஆனே ஆகியவர்கள் வந்திருந்தனர். காந்திஜி அன்றுபகல் இராஜப்பிரதிநிதியோடு கலந்து பேசிய விஷயங்களைக் கமிட்டியாருக்கு அறிவித்ததாகத் தெரிந்தது. 7 மணிக்குக் கமிட்டிக் கூட்டம் அரைமணிநேரம்பிரார்த்தனைக்காகஒத்திவைக்கப்பட்டது. 7-30 மணிக்கு மீண்டும் கூட்டம் கூடியது. 8-30 மணிவரை மாகாத்மா அங்கிருந்தார். பிறகு அவர் வெளியே உலாவிவரச் சென்றுவிட்டார். கமிட்டிக்கூட்டம் இரவு 9-25 மணிவரை நடந்து சனிக்கிழமை காலை 8-30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

கமிட்டியார் இனி நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி இருவழியிலும் தீர்க்கமாக ஆலோசித்ததாகத் தெரிகிறது.

சமாதானம் ஏற்பட்டால் என்ன செய்வதென்பது ஒரு விஷயம். சமாதான முயற்சி வெளியிட்டால் என்ன செய்வதென்பது மற்றொரு விஷயம். சுருங்கச் சொல்லுமிடத்து காரியக்கமிட்டிக்கு இன்பதுன்பம் இரண்டும் தயா

ராக விருந்தது; சமாதான முயற்சி முறிந்துவிட்டால் என்ன செய்வதென்பதைப்பற்றி இன்னும் அவர்கள் ஒரு திட்டமான முடிவும் செய்யவில்லே. சமாதான மேற்படா விட்டால் அடுத்தபடி கவர்ன்மெண்டாரின் காரியம் தலே வர்களேத் தேசப்பிரஷ்டம் செய்வதாகத்தான் இருக்கும் என சிலர் கூறினர்கள். லார்டு இர்வின் இனி விஷயத்தை வளர்த்திக் கொண்டுபோக விரும்பவில்லே யெனத் தெரி கிறது. காரியக்கமிட்டிக் கூட்டம் முடிய இரவு நெடுநேர மாகிவிட்டது. பத்திரிகைக்காரர்களும், தந்தியாபீஸ்காரர் களும் தவிர வேறெவரும் அந்தச் சமயத்தில் அங்கு வேலே செய்துகொண்டில்லே. காந்திஜிக்குக் கார்யக் கமிட்டி யார் சர்வாதிகாரம் கொடுத்திருந்தும் அவர் இன்று ராஜப் பிரதிநிதியைக் கண்டு பேசிவிட்டு வந்தபின் காரியக் கமிட்டியினரைக் கலந்து பேசியதால் இராஜப்பிரதிநிதி யின் பதில் பல அம்ஸங்களில் அவருக்குத் திருப்தியைத் தந்திருக்கக்கூடும் எனச் சிலர் கருதினர்கள். இரண் டொரு சில்லரை விஷயங்களுக்காக அதை நிராகரித்து விடுவதற்கில்லேயென காந்திஜி கருதியிருக்கக்கூடும் என் றும் சிலர் நினைத்தார்கள்.

இராஜப்பிரதிநிதி கூறிய விஷயங்கள் அதிருப்தி தரக் கூடியனவாக விருந்தால் காந்திஜி உடனே அவற்றை அங்கேயே நிராகரித்துவிட்டிருப்பார். விஷயங்களே மேலுக்குமேல் வளர்த்திக்கொண்டு போகமாட்டார். உடனே போராட்டத்தைத் துவக்கிவிட்டிருப்பார். ராஜப் பிரதிநிதி கூறியதைப்பற்றிச் சிந்திக்கச் சற்று அவகாசம் எடுத்துக்கொண்டிருப்பதே ஒரு நல்ல அறிகுறியாகவிருந் தது. அது நன்மையாகவே முடியவேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது.

நிருபர்கள் வீணான யூகங்கள் செய்வது கூடாதென அவர் எச்சரிக்கை செய்தார். காரியக்கமிட்டிக் கூட்டத்தில் அவர் லார்டு இர்வினோடு கலந்து பேசிய விஷயங்களை வெளியிட்டபின் கமிட்டியினர் மூன்றுமணி நேரம் கூடி யோசித்தனர். யாவும் ரகசியமாக விருக்கின்றன. ஐக்கிய மாகாணக் கவர்ன்மெண்டு ஹோம் மெம்பர் சத்ரி நவாப் டில்லிக்கு வந்து நேற்று மாலை புறப்பட்டுப் போய் விட்டார்.

காரியக் கமிட்டியின் கூட்டம்.

பிப்ரவரி 26வ காலை மீண்டும் காரியக் கமிட்டிக் கூட்டம் 8-30 மணிக்குக் கூடியது. நடவடிக்கைகள் ஆரம்பமாக 9 மணியாயிற்று. காந்திஜியின் அறைக்குள் சென்ற ஒரு அங்கத்தினரை ஒரு நிருபர் கண்டு கேட்டபோது. "நாங்கள் ஒன்பதுபேரும் ஒன்பது கருங்கற்கள் என வைத்துக் கொள்ளுங்கள். இந்தகற்களிலிருந்து நார் உரிக்கமுடியாது'' என்றார். காந்திஜி வெளியிட்ட எல்லா கோரிக்கைகளுக்கும் இராஜப் பிரதிநிதி இணங்கி வரவில்லை என்பதுமட்டும் உண்மை. ஒப்புக்கொண்ட மற்ற நிபந்தனைகளிலிருந்து மற்ற மாறுதல் தெரிகிறதா என்பதே கேள்வி. இராஜப்பிரதிநிதி அங்கீகரிக்க மறுத்த விஷயங்களைப்பற்றி பலர் பலவிதமாகப்பேசிக் கொண்டார்கள். நிறுத்திவைப்பது சம்பந்தமாகவும் அன்று காரியக்கமிட்டி கூட்டத்தில் இராஜப்பிரதிநிதி கூறுவதை ஏற்றக்கொள்வதா மறுப்பதா என்பது முடிவு செய்யப்படும். மீண்டும் மகாத்மா இராஜப்பிரதிநிதி மாளிகைக்குப் போவது துர்லபந்தான். அவர் தமது பதிலை எழுதி அனுப்பிவிடுவதாயிருந்தது. அவர் அப்போது லார்டு இர்வினை அவரது சொந்த ஹோதாவில் கண்டுகொண்டார். விஷயங்களையும் அதிகமாகத்

தெரிந்துகொண்டார். காரியக்கமிட்டி இன்னும் அதிக தகவல்கள் வேண்டினல்தான் அவர் மீண்டும் ராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் செல்வார் என்றிருந்தது. காந்திஜியிடமிருந்து தகவல் கிடைத்தவுடன் கவர்ன்மெண்டார் அறிக்கை வெளியிடுவார்கள் எனத்தெரிய வந்தது.

மீண்டும் நம்பிக்கைக் கிடமான நிலைமை.

மார்ச்சுமீ 1௳ சரியாக பகல் 2-30 மணிக்கு மகாத்மா இராஜப்பிரதிநிதி மாளிகையில் நுழைந்தார். லார்டு இர்வினின் அந்தரங்கக் காரியதரிசி அவரைவரவேற்று இராஜப்பிரதிநிதியின் படிப்பறைக்கு அழைத்துச்சென்றூர். அங்குதான் இதுவரை சம்பாஷணைகள்யாவும் நடைபெற்றன.

அன்றுகாலை கனம் சாஸ்திரிகள் மகாத்மாவைச்சந்தித்து ஒருமணிநேரத்துக்கதிகமாகப் பேசிக்கொண்டிருந்தார். பிறகு கனம் சாஸ்திரிகள் கார்யக்கமிட்டிக் கூட்டத்துக்கும் போயிருந்தார். அங்கு அவர் சில்லரை விஷயங்களுக்காக சமரஸ முயற்சி முறிந்துபோவது வருந்தத் தக்கதென்றும் இன்று பிற்பகல் இராஜப் பிரதிநிதியோடு அரசியல் முறையைப்பற்றி பேச காந்திஜிக்குச் சர்வாதிகாரம் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அந்த சமயத்தில் ஸ்ரீமான் ஜெயகரும் டாக்டர் சாப்ரூவும் இராஜப்பிரதிநிதியைக் கண்டுபேசினர். 6 மணிக்கு மகாத்மா இராஜப்பிரதிநிதி மாளிகையை விட்டுவந்தார். பத்திரிகை நிருபர்களிடமிருந்துதப்ப அவர் வண்டியை நேராக வேகமாக ஓட்டச்சொன்னூர். மகாத்மா டாக்டர் அன்ஸாரி வீட்டுக்கு வந்து 6-20-க்கெல்லாம் சாப்பாட்டுக்குப் போய் விட்டார். அங்கு காரியக்கமிட்டிக் கூட்டமும் நடைபெற்றது.

அன்று பிற்பகல் இராஜப்பிரதிநிதியிடம் பேசிய விஷயங்களைக் காந்திஜி காரியக்கமிட்டியினருக்கு எடுத்துச் சொன்னார். 7மணிக்குப் பிரார்த்தனைக்காக 15நிமிஷ நேரம் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. பிறகு மீண்டும் காரியக்கமிட்டிக் கூட்டம் இரவு 8-45 மணிவரை நடந்தது. 9 மணிக்கு மீண்டும் மகாத்மா லார்டு இர்வினைப் பார்க்கப் புறப்பட்டார். மறுதினம் (திங்கட்கிழமை) மகாத்மாவின் மவுனவிரத தினமாகையால் அன்றிரவே சம்பாஷணையை முடித்துவிட இருதரப்பாரும் நினைத்ததாகத் தெரிந்தது. இப்போது புதிய பிரச்னைகளைப்பற்றி பேச்சு நடப்பதாகத் தெரிந்தது. போராட்டத்தை நிறுத்துவதற்கான நிபந்தனைகளைப்பற்றி இது வரை பேசியது போக இப்போது அரசியல் முறை விஷயமாகச் சம்பாஷணை நடப்பதாக விளங்கியது. காந்திஜி இரவு 9 மணிக்கு ராஜப்பிரதிநிதி மாளிகைக்குப் போகையில் நிலைமை நம்பிக்கைக் கிடம் இருப்பதாகசெய்தி எட்டியது. இரவு 11 மணிக்குத் திரும்பிவிடலா மென்ற எண்ணத்துடன் காந்திஜி ராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் சென்றார். போலீஸ் விசாரணை சம்பந்தமாக வேறு யோசனைகள் இப்போது கவர்ன் மெண்டு சார்பில் சொல்லப் பட்டிருப்பதாகத் தெரியவந்தது. அது காரியக் கமிட்டிக்குத் பதிலளித் திருப்பதாகவும் இருந்தது.

நள்ளிரவில் சம்பாஷணை.

இரவு 9 மணிக்கு ராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் சென்ற மகாத்மா 1-10 மணிக்கு அங்கிருந்து வெளியே வந்தார். மூன்று மணி நேரம் சம்பாஷணை நடந்தது. அவர் வெளியே வந்தபோது அவர் முகத்தில் புன்சிரிப்பு

பூரணமாக விருந்தது. நாழிகை அதிகமாகி விட்டதால் காந்திஜியின் வருகையை எதிர் நோக்கி சேத் ஜமன்லால் பஜாஜ், ஸ்ரீமான் மஹா தேவதேசாய் முதலியோர் ராஜப் பிரதிநிதி மாளிகையின் வெளித் தாழ்வாரத்தில் காத்துக் கொண்டிருந்தனர். சந்திரன் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருந்தான். மகாத்மா அந்த சந்திர ஒளியில் கால் நடையாக நடந்து டாக்டர் அன்ஸாரி மாளிகைக்குப் போக விரும்பினர். நடு ராத்திரி 12 மணியாகியும் மகாத்மா திரும்பி வராததால் ஸ்ரீமதி சரோஜனி வண்டி யேறி ராஜப்பிரதிநிதி மாளிகைக்குப் புறப்பட்டார். அப்போது மகாத்மா மாளிகைக்கருகில் நடந்துவருவதைக் கண்டார். இந்த நேரத்தில் படுக்கையை விட்டு ஏன் வரவேண்டும்? என்னை யாராவது தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள் என எண்ணினீர்களா?'' என மகாத்மா ஸ்ரீமதி சரோஜனியைக் கேட்டார்.

"ஆமாம், இந்த அரிய பொக்கிஷத்தை யாராவது திருடிக்கொண்டு போய்விடுவார்களோ என நான் சந்தேகித்தேன்'' என ஸ்ரீமதி சரோஜனி பதில் கூறினர். அதை கேட்ட மகாத்மா சிரித்தார்.

செவ்வாய்கிழமை யன்று இராஜப்பிரதிநிதியை மீண்டும் மகாத்மா கண்டு பேசுவாரென்றும் அப்போது ஸர் ஜார்ஜ் ஷுஸ்டரும் அங்கிருப்பாரென்றும் உப்பு சம்பந்தமாக கவர்ன்மெண்டுக்குள்ள ஒரு உரிமையைவிட்டுக் கொடுப்பதால் ஏழை ஜனங்களுக்கு அதிக நன்மை விளையாதென்பதை விளக்க ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர் சம்பாஷணையில் கலந்துகொள்வார் எனத் தெரியவந்தது.

போலீஸ் விசாரணை.

போலீஸ் விசாரணை சம்பந்தமாக மகாத்மாவைத் திருப்தி செய்த கடைசி நேரத்தில் இராஜப்பிரதிநிதி நான்கு பக்கங்கள் எழுதி ஒரு கடிதம் மகாத்மாவுக்கு அனுப்பினர். அதற்கு பதில் வருமென அவர் எதிர் பார்த்தார். போலீஸார் அமிதமாக நடந்துகொண்ட தாகச் சொல்லப்படுவதைப்பற்றித் தனியாக இரண்டு ஜில்லா ஜட்ஜுகளைக் கொண்டு விசாரணை நடத்தவும், காந்திஜிக்கு சாக்ஷியங்களின் விபரத்தை அறிவிக்கவும் கவர்ன்மெண்டு தயாராகவிருப்பதாகத் தெரிந்தது. காரியக் கமிட்டியினர் ரகசிய விசாரணை விஷயத்தில் திருப்தி கொள்ளவில்லை. இன்னும் சமாதானத்துக்கான எல்லா வழிகளையும் அனுஷ்டித்துப் பார்த்துவிட வேண்டுமென்பதற்காக இதற்குள் இருதரப்பாரும் ஒரு முடிவு செய்து விடக் கூடாதென்று கேட்டுக்கொள்ள இந்தியா சட்ட சபை அங்கத்தினர்கள் இராஜப்பிரதிநிதியிடமும் காந்திஜியிடமும் ஓடிக்கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் திட்டமாக எவ்வித ஜோஸ்யமும் சொல்ல முடியாதிருந்தது.

"அப்பா—கடைசியாக ஒரு வழி ஏற்பட்டது" என்ற உணர்ச்சியுடன் காந்தி—இர்வின் சம்பாஷணையைப்பற்றி பேச்சு நடந்தது. முன்னம் ஏற்பட்ட முட்டுக்கட்டை முடிந்தவிதம் இன்னதென திட்டமாகத் தெரியவில்லை. மகாத்மாவும் லார்டு இர்வினும் அதைப்பற்றி விளக்கும்வரை அது ரகசியமாகவேயிருந்தது. ஆனல் சற்று விஷயங்களை ஆராய்ந்து பார்த்தால் ஸர் புருஷோத்தம தாஸும், ஸர் பி. என். மித்ராவும் பின்னலிருந்து வேலை செய்ததாகத் தெரிந்தது.

இராஜப்பிரதிநிதி தமது யோசனைகளைக் கடித மூலம் மகாத்மாவுக்கு அனுப்பினார். அது லார்டு இர்வின் எழுதும் கடிதமாகவில்லை. அதன் தோரணையும் அதன் நடையும் ஆத்திரமூட்டக் கூடியதாகவிருந்தன. காரியக் கமிட்டியார் அதனால் அதை அடியோடு நிராகரித்துவிட்டனர். காங்கிரஸ்காரர்கள் பலரும் சமாதானப் பேச்சு முறிந்துவிட்டதாக நிச்சயித்துவிட்டனர். 2 நாளாக சிநேக முறையில் காந்திஜியோடு பயன் தரத்தக்க வழியில் சம்பாஷித்து வந்த இராஜப் பிரதிநிதி இவ்விதம் எழுதுவாரா எனப் பலரும் சந்தேகித்தனர். இவ்விதம் கார்யக் கமிட்டியார் செய்துவிட்ட முடிவைக் கேட்டவுடன் இந்திய வியாபாரச் சங்கப் பிரபலஸ்தர்களும் லண்டன் மகாநாட்டுப் பிரதிநிதிகளும் திடுக்கிட்டுவிட்டனர். அதன்பின் டாக்டர் சாப்ரூவும், ஸ்ரீமான் ஜெயகரும் இராஜப்பிரதிநிதி மாளிகைக்குச் சென்று என்ன பேசினார்கள் என்பது தெரியாது. உலகத்திலுள்ளவர்கள் கவர்ன்மெண்டுக்கு விரோதமான அபிப்பிராயமே கொள்ளுவார்கள் என அவர்கள் எடுத்துச் சொன்னதாகமட்டும் தெரிகிறது. இதன்மேல் இராஜப்பிரதிநிதி தமது சகாக்களுக்கு நிலைமையின் நெருக்கடியை விளக்கியதாகத் தெரிந்தது. உடனே உள்நாட்டு இலாகா காரியதரிசி உதவிக்கு வந்தார். அப்போதும் எதிர்த்து நின்றவர் ஸர் பஸ்லிஹுஸேன் ஒருவர் தான் என்று சொல்லப்பட்டது. கவர்ன்மெண்டு சார்பில் இவ்விதமிருக்க மற்றொரு பக்கத்தில் மகாத்மா கனம் சாஸ்திரிகளின் உருக்கமான பிரசங்கத்தைக் கேட்டார். எப்போதும் காந்திஜிக்குக் கனம் சாஸ்திரிகளிடம் அன்பும் மதிப்புமுண்டு. மகாத்மாவுக்கு வியாபார சம்பந்தமாக ஆலோசனை சொல்லும் நம்பிக்கையுடையவர்

களான ஸ்ரீமான்கள் அம்பாலால் சாராபாய், கஸ்தூரிபாய் லால்பாய் ஆகியவர்கள் பிரிட்டிஷ் ஜனங்களை முக்கியமான அரசியல் பிரச்சினையில் தவறாக நடக்கும்படி விட்டுவிடக்கூடாதென்றும் இந்தச் சந்தர்ப்பத்தை கைநழுவ விடக்கூடாதென்றும் காந்திஜியிடம் கூறினார்கள். காந்திஜியின் மனமும் மாறிவிட்டது. ஆகவே இராஜப்பிரதிநிதியும் மகாத்மாவும் மீண்டும் சந்தித்தபோது பழைய யோசனைகள் யாவும் கைவிடப்பட்டன. புதிதாக முயற்சி செய்யப்பட்டது. விசேஷ அபிவிருத்தியும் ஏற்பட்டது. இராஜப்பிரதிநிதி இச்சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாமல் முடிவான ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளவேண்டுமென உறுதி கொண்டார். ஆகவே இந்தியாவில் பலரும் உறங்கிக்கொண்டிருந்த சமயத்தில் ஆண்டவனுக்குப் பயந்து நடக்கும் இவர்கள் இவரும் சமாதானத்துக்கான வழி தேடினர். மகாத்மா போதுமான படி மனமாறுதல் ஏற்பட்டிருப்பதைக் கண்டார். புதிய யோசனையைப் பூரணமாக அங்கீகரித்து உத்தியோகஸ்தர்களை ஆச்சரியப்படும்படிச் செய்துவிட்டார். சாத்விக மறியல் சம்பந்தமாக ஸ்ரீமதி சரோஜனி கூறிய வியாக்யானம் இக்கஷ்டத்தைத் தீர்த்துவைக்கச் சாதகமாக விருந்தது. இராஜப்பிரதிநிதி இதை ஒப்புக்கொண்டதால் இந்த விஷயத்தில் முடிவு ஏற்பட்டுவிட்டது. உப்பு விஷயமாக மறுநாள் பொக்கிஷ மெம்பர் ஒரு திட்டம் செய்து விடுவதாயிருந்தது. இராஜப்பிரதிநிதி காந்திஜியைச் சந்திக்கையில் சமரஸத் திட்டம் யாவும் தயாராகவைத்து பிறகு அது உத்தியோக முறையில் அங்கீகரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட வேண்டியதுதான். இவ்வளவு மும்முரமாக இவ்விஷயத்தில் முனைந்திருக்கையில் மகாத்மா தமக்கு முக்கியமாகத்

தோன்றும் நிர்மாண வேலையைப் புறக்கணித்து விட வில்லை.

(அவர் ஆலைச் சொந்தக்காரர்களிடம் பேசி ஒரு வித முடிவுக்கு வந்துவிட்டார். அதன்படி இந்தியாவிலு ள்ள அந்நிய நாட்டு ஜவுளிக்குப்பதில் மில்துணியைக் கொடுத்து விட்டு அந்நிய நாட்டு ஜவுளியை வெளி நாடுகளில் விற்றுவிட ஏற்பாடு செய்யப்படும். இந்த திட்டம் சீக்கிரத்தில் அமுலுக்கு வரும். ஆமதாபாத் தில் தமக்குச் சிஷ்யர்களாக விருக்கும் ஆலைச் சொந் தக்காரர்கள் இதன்படி நடப்பார்கள் என மகாத்மா நம்பியிருக்கிறார். அவர்கள் சுயநலத்துக்காக ஒன் றும் செய்யாமையால் அவர்களுக்குமகாத்மாவிஷயத் தில் அதிக செல்வாக்கு இருக்கிறது. அதனால்தான் சமரஸ ஏற்பாடு விஷயமாக அவர்களுக்கு மகாத்மா வின் மனதையும் மாற்றச் சக்தியிருந்தது.)

ஒரு வருஷத்தில் மகாத்மா அடைந்த வெற்றி விவரம்.

மார்ச்சு 3-ந்தேதி இந்தியாவின் சரிதத்திலேயே பெரிய சுபதினமாகும். அது வெற்றி நாளுமாகும். சென்ற வருஷம் மார்ச்சு மாதம் 30-ந்தேதியன்று பிற்பகலில் தான் மகாத்மாவின் * 11 கோரிக்கைகளுடன் கூடிய கடிதம் ஒரு தூதரால் இராஜப்பிரதிநிதியிடம் சேர்க்கப்பட்டது.

அக்கடிதம் பட்டுவாடா செய்யப்பட்டுச் சரியாக 365 நாட்கள் (ஒருவருஷம்) ஆகியதும் ராஜப்பிரதிநிதி மாளிகைக்குள் மகாத்மாஜீ ராஜப்பிரதிநிதியுடன் போரா ட்ட நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொள்ள நுழைந் தார். அவர் ராஜப்பிரதிநிதி மாளிகைக்குள் நுழைவதற்கு இது 8-வது முறையாகும். அவர் ராஜப்பிரதிநிதியுடன்

---

* சமரச முயற்சி என்ற நூலில் வெளியாயிருக்கிறது.

வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். இந்த சம்பாஷணையால் யாவராலும் விரும்பப்பட்ட உடன்பாடு எற்பட்டது. இது பலருக்குக் கஷ்ட நிவாரணத்தையும் சந்தோஷத்தையுமளிக்கும்.

இதன் பயனாகச் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்படும். அடக்கு முறைகளும் அவசரக் சட்டங்களும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்படும். இதன் மூலம் சமாதானம் எற்படுத்தப்படும். பிப்ரவரி மாதம் 17-ந் தேதி செவ்வாய்க்கிழமையன்று காந்திஜீ லார்டு இர்வினுடன் நேராக ராஜிப்பேச்சு ஆரம்பித்தார். 15 தினங்களுக்கெல்லாம் "நன்றாக ஆரம்பித்த ராஜிப்பேச்சு" வெற்றிகரமாக முடிவடைந்தது. இந்த செவ்வாய்க்கிழமையன்றும், வரவு செலவு மெம்பர் ஸர் ஜார்ஜ் ஷுஷ்டரும் மகாத்மாஜீயும் கலந்து பேசினர். இதனால் நல்ல ஆரம்ப மேற்பட்டுளது. உப்பு விஷயமாக ஸர் ஜார்ஜ் ஷுஸ்டரின் ராஜதந்திரத்தால் திருப்திகரமான வுடன்பாடு ஏற்பட்டது. ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர்கடற்கரையோரத்திலுள்ள எளிய ஜனங்கள் எப்பொழுதாவது உப்பைப்பொறுக்கி விற்பதைக் கவனிக்காமல் விட்டுவிடச் சம்மதித்தார். பறிமுதல் செய்யப்பட்டசொத்துக்களைத் திருப்பிக் கொடுத்துவிடுவது சம்பந்தமாகவுள்ள ஒரு விஷயம் நீங்கலாகவுள்ள மற்ற விஷயங்களைப்பற்றிப் போராட்ட நிறுத்த நிபந்தனைகள் நிர்ணயமாகி விட்டதால் இது பிற்பகலில் ராஜப்பிரதிநிதியைக் காந்திஜீ கண்டு பேசியபொழுது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மகாத்மாஜி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். டிப்டிகாரியதரிசி மிஸ்டர் எமர்ஸனும் பிரசன்னமாக இருந்தார். மாலை 5-30 மணியாகியும் மகாத்மாஜீ திரும்பி வரவில்லை.

ராஜப்பிரதிநிதி மனமிளகினர்.

அவருக்கு சிஷ்ருஷை செய்வதில் மிக்க உஷாராக இருக்கும் அவரது சிஷ்யையான ஸ்ரீமதி மீராபென் என்ற மிஸ் ஸ்லேடு பிரிட்டிஷ் கப்பற் படைத் தலைவரின் ஒரே குமாரத்தியாவார். மிஸ் ஸ்லேடு ஜெயின சந்நியாசினியை போன்று முரட்டுக்கதராடை உடுத்திக் காலில் எதுவும் அணியாமல் மகாத்மாவின் உணவான தயிரும் ஜலத்தில் ஊறவைக்கப் பட்டிருந்த பேரீச்சம்பழமு மிருந்த மூங்கில் கூடையைக் கையில் எடுத்துக் கொண்டு பாபுவுக்கு (தந்தை என்ற அர்த்தம். மகாத்மாவை சபர்மதி ஆச்சிரம வாசிகள் இவ்வாறுதான் கூப்பிடுவது வழக்கம்) அவரது மாலை போஜனத்தைப் பரிமாற இராஜப் பிரதிநிதியின் மாளிகைக்குள் சென்றார். இராஜப்பிரதிநிதியின் மாளிகைக்குள் காலில் எதுவும் அணியாமல் நுழைந்த முதல் ஆங்கிலேய ஸ்திரீ இவர்தான். வெயிலால் வாடிப்போன ஆங்கிலேய மாதான ஸ்ரீமதி மீராபென் (மிஸ் ஸ்லேடு) மூங்கில் கூடையுடன் தாங்களிருந்த அறைக்குள் வந்ததை கண்டு இராஜப்பிரதிநிதிக்கும் மிஸ்டர் எமர்ஸனுக்கும் மிக்க மன மிளகி விட்டதாக தெரிய வந்தது. அவர்கள் தங்களது ஆசனங்களிலிருந்து எழுந்து சமாதானத் தூதரைப் போன்று விளங்கிய மிஸ் ஸ்லேடுடன் கைகுலுக்கி அவரை மிக்க அன்புடன் வரவேற்றனர். 5-55-க்கு மிஸ் ஸ்லேடு பாபுவின் உணவைப் பரமாற ஆரம்பித்தாள். இராஜப்பிரதிநிதியின் படிப்பறையில் மகாத்மாகாந்தி எர்ரவாடா சிறைக்கூட அதிகாரிகள் தமக்கு எடுத்துச் செல்ல அனுமதி கொடுத்த துத்தநாகத் தட்டிலிருந்தும் துத்தநாகக் குவளையிலிருந்தும் முறையே பேரீச்சம் பழங்களை

எடுத்துத் தின்றும் தயிரைப் பருகிக் கொண்டு மிருந்தார். போஜனம் வைத்துகொள்ளுவதற்கான மேஜை அங்கில்லை போஜன உடை என்ற தனி உடை எதுவுமணிய வில்லை. ராஜப்பிரதிநிதி எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மிஸ்டர் எமர்ஸன் ஒரு புறத்திலும் மற்றொரு புறத்தில் கதராடை தரித்த ஆங்கிலேய ஸ்திரீயான மிஸ் ஸ்லேடும் உட்கார்ந்துகொண்டிருந்தனர். மகாத்மாஜி இடதுகையில் துத்தநாகக்குவளையை வைத்துக்கொண்டும் வாயில் பேரிச்சம்பழத்தைப் போட்டு அரைத்துக்கொண்டும் பேசிக் கொண்டே இருந்தார். 6-45 மணிக்கு காந்திஜி டாக்டர் அன்சாரியின் பங்களாவுக்குத் திரும்பிவந்தார். இராஜப் பிரதிநிதி சாப்பிட்டுவிட்டுத் தயாராவதற்குள் கார்யக் கமிட்டியைச் சிறிதுநேரம் கலந்து ஆலோசித்துவிட்டுத் திரும்பிவந்து விட்டார். லார்டு இர்வினும் மகாத்மாஜீயும் இரவு 9 மணிக்குச் சம்பாஷணையைத் துவக்கினர்கள். 1-30 மணிவரை சம்பாஷணை நீடித்து நடந்தது. இர்வின் முற்பகுதியில் பறிமுதல் செய்யப்பட்டி சொத்துக்களைத் திருப்பிக்கொடுக்கும் விஷயமாக ராஜி ஏற்படவில்லை. ஏலத்தில் தனிப்பட்ட நபர்களுக்கு விற்கப்பட்ட.வை உட்படவுள்ள எல்லா நிலங்களையும் அவற்றின் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக்கொடுக்க முடியாதெனக் கவர்ன்மெண்டார் வாதித்தால் ராஜிப் பேச்சை நிறுத்திவிடும்படி மகாத்மாவுக்குக் கார்யக் கமிட்டி ஆணையிட்டது. இரவு 12 மணிக்கே இறுதியான முடிவுகள் ஏற்பட்டன. அப்பொழுது சந்திரன் மேகங்களிலிருந்து வெளிவந்து பிரகாசித்தான். மழையும் நின்றுவிட்டது. சுழல்காற்றும் மறைந்தது. அப்பொழுது லார்டு இர்வின் மகாத்மாஜீயிடம் விடை பெற்றுக்கொண்டார். "நாம் சந்தோஷ

மாகவும் அமைதியாகவும் தூங்கலாமென நம்புவோமாக'' என்று சொல்லி அவர் விடைபெற்றுக்கொண்டார்.

டாக்டர் அன்சாரியின் பங்களாவில் கார்யக்கமிட்டி மெம்பர்களும் சில பத்திரிகா நிருபர்களும் காந்திஜீயின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். மழையினாலும் பலமான காற்றினாலும் குளிர் அதிகமாக இருந்தது. இரவு 1 மணியாகியும் மகாத்மாஜி வராததைக் கண்டு எல்லோரும் மிக்க கவலையுடனிருந்தனர். கடைசியாக 1-30 மணிக்கு மகாத்மாஜீ வந்தார். அவர் வழக்கம்போல் பத்திரிகா நிருபர்களைக் கண்டு "நான் புதன்கிழமை பகல் 12 மணிக்கு ராஜப்பிரதிநிதி மாளிகைக்குத் திரும்பிச் செல்லுவேன்.'' என்று மாத்திரம் தெரிவித்தார். உடனே கார்யக்கமிட்டி கூடியது. காந்திஜீ அதில் போராட்ட நிறுத்த சம்பந்தமாக உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக அறிவித்தார். கார்யக் கமிட்டி இரவு 2-30 மணிக்குக் கலைந்தது. மகாத்மாஜி தாம் தினம் நூற்கவேண்டிய அளவுக்கு நூலை நூற்காததினால் பாக்கி நூற்கவேண்டிய நூலை நூற்க ஆரம்பித்தார். அவர் இரவு 3 மணிக்குத் தூங்கச்சென்றார். காலையில் 4 மணிக்கெல்லாம் பிரார்த்தனை செய்வதற்காக எழுந்துவிட்டார். கார்யக் கமிட்டி மெம்பர்கள் ஒவ்வொருவரும் போராட்ட நிறுத்தச் செய்தியை மிக்க சந்தோஷத்துடன் ஏற்றனர்.

ராஜிப் பேச்சு வெற்றிகரமாக முடிவு பெற்றதற்கு லார்டு இர்வினும் காந்திஜீயும் ஜவாப்தாரியாவார்கள். அதனால் ராஜி ஏற்படுவதற்காகப் பின்னிருந்து காங்கிரஸ் தரப்பில் பாடுபட்ட கௌரவத்தைத் பண்டித மதன் மோகன் மாளவ்யாவுக்கும் கவர்ன்மெண்ட் தரப்பில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் அளிக்கவேண்டும்.

சமரஸ ஒப்பந்தத்தின் தாத்பர்யம்.

காந்திஜியின் பிரசங்கம்.

புதிய டில்லி, மார்ச்சு 5-ம் தேதி பகல் டாக்டர் அன்ஸாரி பங்களாவில் அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களும் இந்தியப் பத்திரிகை நிருபர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தில் காந்திஇர்வின் ஒப்பந்தத்தின் தாத்பர்யத்தைப் பற்றியும் அதன் விவரத்தைப் பற்றியும் மகாத்மா ஒரு மணி நேரம் பிரசங்கம் செய்தார். அதன் சாரமாவது:—இராஜப்பிரதிநிதி சலியாமலும் ஊக்கத்துடனும் உழைத்திராவிட்டாலும், மிக்க மரியாதையுடன் நடந்து கொண்டிராவிட்டாலும் இப்போதுள்ளபடி இந்த ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்காது. என்னை அறியாமல் நான் அவருக்கு ஆத்திரம் வரச் செய்திருக்கக்கூடும் அவருடைய பொறுமையை நான் சோதித்திருக்கவும் கூடும். அப்போதும் அவர் ஆத்திர மடையவில்லை. பொறுமையை இழக்கவுமில்லை. அவர் ஆதியிலிருந்து அந்தம்வரையில் வெளிப்படையாக விஷயங்களை எடுத்து வெளியிட்டுவந்தார். அவர் எப்படியாவது ஒரு சமரஸ ஏற்பாடு செய்துவிட வேண்டுமென உறுதி கொண்டிருந்ததாகவே தெரிகிறது. நான் முதலில் சமரஸம் பேசப்போன போது எனக்குச் சற்று பயமும் நடுக்கமும் இருந்தன வென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். எனக்கு அவநம்பிக்கை அதிகமாக விருந்தது. ஆனால் முதலிலேயே அவர் எனது சந்தேகத்தை நிவர்த்தித்து விட்டார். எனக்குச் சவுகரியமான நிலையை உண்டுபண்ணினார். முதலில் நான் அவரைக் கண்டு பேச விரும்புவதாகக் கடிதம் எழுதியபோது இந்த முயற்சியில் பின்வாங்குவதில்லை யென்ற உறுதியுடன் நான் இக்காரியத்தில் இறங்கி

னேன். கடைசியில் ஒருவித ஒப்பந்தம் ஏற்பட்டதற்காக கடவுளுக்கு வணக்கம் செய்கிறேன். சமரஸம் முறிந்து போயிருந்தால் பொது ஜனங்களின் கஷ்டம் நூறுமடங்கு அதிகமாகி விட்டிருக்கும். ஆகவே இந்தச் சமயத்துக்கு நாட்டினர் விசேஷ கஷ்டமடையாமலிருக்க ஒரு நிலை ஏற்பட்டிருப்பதற்காகச் சந்தோஷமடைய வேண்டும். இவ்விதமே எப்போதும் கஷ்டமின்றி இருப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன். இத்தைய ஒரு ஒப்பந்தத்தில் எந்தக் கட்சி வெற்றி பெற்றது எனச் சொல்வதற்கில்லை. வெற்றி எதாவது ஏற்பட்டதென்றால் அது இருதாரப் பாரையும் சேர்ந்ததுதான். காங்கிரஸ் வெற்றிக்கு ஒரு முயற்சியும் செய்யவுல்லை. இயறகையாகவே காங்கிரஸுக்கு ஒரு குறிப்பிட்ட லக்ஷியமிருக்கிறது. அந்த லக்ஷியம் நிறைவேறும் வரை வெற்றியடைவதென்ற விஷயம் இடையில் ஒன்றுமில்லை. ஆகவே இந்த ஒப்பந்தத்தால் குதூகலமடையக்கூடிய அம்ஸம் எதாவதிருந்தால் அதற்காக எனது நாட்டிலுள்ள சகோதர சகோதரிகள் கொண்டாட்டமடிக்கக்கூடாது. அவர்கள் பணிவுடனே இருக்கவேண்டும். ஆண்டவனே அவர்கள் பணிந்து தற்போது மேற்கொண்டு காரியங்களை நடத்திச்செல்ல ஆற்றலும் அறிவும் அளிக்கும் படிப்பிரார்த்திக்கவேண்டும். இனிமேற் கொண்டு காரியங்களை நடத்தும் முறை எவ்விதமாவினும் சரியே, கஷ்டமடைந்தாலும் சரி, அல்லது அமைதியுடன் கலந்து பேசிக் காரியத்தைச் சாதித்தாலும் சரி, மகாநாடு கூடி யோசித்துக் காரியசித்தியடைந்தாலும் சரியே, சென்ற ஒரு வருஷமாகப்போராட்டத்தில் கலந்துகொண்டு கஷ்டங்களை ஏற்றுக்கொண்ட லக்ஷக்கணக்கான பேர்களும் இனியும் மகாநாடு நடக்கும் காலத்திலும் ஆலோ

சனைகள் நடக்கும் காலத்திலும் அதே விதமான கட்டுப் பாட்டையும் ஐக்கிய பாவத்தையும் முயற்சியையும் காட்ட வேண்டும்.

இந்தியாவின் புதிய சரித்திரத்தில் வீரப் பிரதாபங்க ளுடன் கூடிய காலமென அழைக்கக் கூடிய சென்ற ஒரு வருஷத்தில் அவர்கள் தங்கள் அறிவின் மேன்மையை எவ்வளவு சிறப்பாக வெளிப்படுத்திக் காட்டினார்களோ அவ்விதமே இனியும் காட்ட வேண்டும். ஆனால் இந்த ஒப் பந்தத்தால் களிப்படையக் கூடிய ஸ்திரீ புருஷர்களிருப் பதுபோல இந்த ஒப்பந்தத்தால் விசேஷ ஏமாற்றமடை யக் கூடியவர்களு மிருப்பார்கள். அவர்கள் எப்போதும் தாங்கமுடியாத துன்பங்களைச் சகிப்பதிலேயே விருப்பம் காட்டுபவர்கள். துன்பம் எவ்வளவிருந்தாலும் சரி. எத் தனை நாள் நீடித்திருந்தாலும் சரியே அவர்கள் சளைப்ப தில்லை கஷ்டத்தை அநுபவிக்கவேண்டிய சமயம் தீர்ந்த வுடன் அவர்கள் தங்கள வேலை முடிந்ததென்றும் தங்கள் பார்வையிலிருந்து தங்கள் லக்ஷியம் மறைந்து விட்டதாக வும் கருதுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சற்றுத்தாமதியுங்கள். விஷயங்களை நிதா னித்துப் பாருங்கள். துன்பம் அநுபவிப்பதென்றாலும் அதற்கும் ஒரு அளவுண்டு. துன்பம் அநுபவிப்பதிலும் புத்திசாலித்தனமும் உண்டு முட்டாள்தனமும் உண்டு. ஒரு அளவுக்கு வந்தவுடன் அதோடு விடாமல் மேற் கொண்டு கஷ்டங்களை ஏற்றுக் கொள்வதென்றால் அது புத்திசாலித்தன மாகாததோடு பெருந்தவறுமாகும். உங்களுக்கு எது விருப்பமோ அதைப்பற்றி எதிர்க்கட்சிக் காரர் உங்களிடம் கலந்து பேசச் சவுகரியம் செய்து கொடுக்கும்போது துன்பத்தையே அநுபவித்துக்கொண்டு

போவதென்றால் அது சரியாகாது. உண்மையில் சமரஸத்துக்கு வழி ஏற்பட்டால் அந்தச் சந்தர்ப்பத்தைக் கை நழுவவிடாமலிருப்பதே ஒருவரின் கடமையாகும். இந்த ஒப்பந்தத்தில் உண்மையாக ஒரு வழி ஏற்பட்டிருக்கிறதென்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். இந்த ஏற்பாடெல்லாம் தற்காலிகமானது. பல காரியங்கள் இனி நடக்கவிருப்பதைப் பொறுத்து இந்தச் சமரஸம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொள்ளுமுன் பல காரியங்கள் நடக்க வேண்டியிருக்கின்றது. பழைய தவறுகளுக்குப் பரிகாரம் தேடுவது காங்கிரஸின் லக்ஷியமல்ல. அது முக்கியமானதென்றாலும் காங்கிரஸின் லக்ஷ்யமெல்லாம் பூரண சுயராஜ்யம் அடைவது தான்.

இந்தியாவின் பிறப்புரிமை.

அது தான் இந்தியாவின் பிறப்புரிமை. அதற்குக் குறைவுபட்ட எது கிடைத்தாலும் இந்தியா திருப்தியடையாது. இந்த ஒப்பந்தத்தில் அந்த அருமையான வார்த்தையாகிய பூரண சுயராஜ்யம் என்பது காணப்படவேயில்லை. அந்த வார்த்தையைப் பக்குவமாக உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சொற்றொடரோ இரண்டு அர்த்தம் கொடுக்கக் கூடியதாக விருக்கிறது. அவ்வித அர்த்தம் தொனிக்கும்படி வேண்டுமென்றே செய்யப்பட்டதாகவுமிருக்கிறது. சமஷ்டி முறையென்பது கானல் நீரைப் போன்றதாகவிருக்கலாம். அல்லது உண்மையான உறுதியோடுகூடிய ஒரு முறையாகவுமிருக்கலாம். அதில் இரண்டு பிரிவினர் பொதுவான ஜவாப்தாரித்துவத்துடன் வேலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுமிருக்கலாம். அல்லது அது வெறும்

மாயையாகவுமிருக்கலாம். இந்தியாவின் நன்மையை நாடி ஏற்படுத்தப்பட்ட ஒரு வைரம் பொருந்திய தாங்கும் தூணுகவுமிருக்கலாம்.

பாதுகாப்புகள்.

இந்தியாவின் நன்மைக்காக ஏற்பட்டதெனச் சொல்லப்படும் பாதுகாப்புகள் வெறும் வெளிவேஷமாகவுமிருக்கலாம். அந்தப் பாதுகாப்புகள் அனைத்தும் இந்தியாவைக் கையும் காலுமாகக் கட்டித் தொண்டையை அழுத்தும் கயிறுகளாகவுமிருக்கலாம். அல்லது இளஞ்செடி யொன்றைப் பக்குவமாகக் காப்பாற்றப் போடப்பட்ட வேலிகளாகவு மிருக்கலாம். இவ்விதமாக அதற்கு ஒரு கட்சியார் ஒருவித அர்த்தமும் இன்னொரு கட்சியார் வேறுவித அர்த்தமும் கொடுக்கக்கூடும். மேலே நான் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் இருதரப்பார் தங்கள் தங்கள் வழியில் காரியங்களை நடத்திச்செல்ல இடம் கொடுப்பதாகவிருக்கிறது.

சமஷ்டி முறையை ஜவாப்தாரியானதாகச் செய்யவும் பாதுகாப்புகள் மூலம் இந்தியாவுக்குச் சமூகப் பொருளாதார ராஜிய அபிவிருத்தி ஏற்பட வழிதேடவுமே காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் காட்டியது. காங்கிரஸின் இந்த நிலையை மகாநாடு ஒப்புக்கொள்ளும்படி நாம் செய்துவிட்டால் அந்த முயற்சியின் பயனுகப் பூரண சுயேச்சை கிடைத்துவிடும் என்றே சொல்வேன். ஆனல் அது அவ்வளவு சீக்கிரம் பலித்துவிடாதென்பதும் எனக்குத் தெரியும். இடையில் பல பல தடைக்கற்கள் இருக்கின்றன. பள்ளம் படுகுழிகளுமிருக்கின்றன. காங்கிரஸ்காரர்கள் மட்டும் பூரண நம்பிக்கையுடனும் தைரி

யத்துடனும் இம்முயற்சியில் இறங்கினல் பலன் கிடைக்குமென்பதில் எனக்குச் சற்றும் சந்தேகமேயில்லை. ஆகவே இப்போது யாவும் நம்மைப் பொறுத்தேயிருக்கின்றன. தற்சமயம் ஏற்பட்ட புதிய சந்தர்ப்பத்தில் சிறந்த காரியம் எதையாவது சாதித்துக்கொள்வதானுலும் கொள்ளலாம். இல்லையேல் தன்னம்பிக்கையில்லாமலும் தைரியமில்லாமலும் சந்தர்ப்பத்தைக் கை நழுவவிட்டாலும் விடலாம்.

பிறரது உதவி.

காங்கிரஸ்காரர்களுக்கு மற்ற கட்சியாரின் ஆதரவும் வேண்டியதுதான். பெரிய சமஸ்தானுதிபதிகளின் ஆதரவு வேண்டியிருக்கிறது. அதோடு ஆங்கிலேயரின் உதவியும் வேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பற்பல கட்சியினருக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் காங்கிரஸ்காரர்களைக் காட்டிலும் தங்கள் நாட்டுக்கு உண்மையான சுதந்தரம் கிடைக்க வேண்டுமென விரும்புவதில் குறைவான ஊக்கம் காட்டவில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனுல் சமஸ்தானுதிபதிகளின் விஷயம் வேறு. அவர்கள் சமஷ்டி முறையை ஒப்புக்கொண்டது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அவர்கள் சமஷ்டி முறையுடன் கூடிய இந்தியாவில் உண்மையான பங்காளர்களாக ஆகிவிட்டால் அவர்கள் தங்கள் சொந்த விருப்பப்படி பிரிட்டன் பல வருஷங்களாக எந்த அந்தஸ்தைப்பெற முயற்சிசெய்து வருகிறதோ அந்த அந்தஸ்தைப்பெற முயற்சிக்கவேண்டும். கலப்பற்ற எதேச்சாதிகாரம், அது எவ்வளவு கருணையுடன் கூடியதாயிருந்தாலும் சரி, அதுவும் கலப்பற்ற ஜனநாயகமும் ஒன்றுசேருவது துர்லாபம்தான். அப்படிச்

சேர்ந்தாலும் அது பிளந்துதான் போகும். அவர்கள் சற்று சமரஸத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் இனி சேர விரும்பும் ஒரு பாகஸ்தரின் சார் பாகச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்குக் காது கொடுக்க மறுக்கவும்கூடாது. அவ்விதமே வேண்டுகோளை மறுத் தால் காங்கிரஸின் நிலை கேவலமாகிவிடும். காங்கிரஸ் இந்தியா பூராவுக்கும் பிரதிநிதி சபையாக விருக்கிறது. அல்லது அவ்விதமிருக்க முயற்சி செய்வதாகவாவது வைத்துக்கொள்ளுவோம். பிரிட்டிஷ் இந்தியாவில் வசிப் பவர் சமஸ்தானங்களில் வசிப்பவர் என்ற வித்தியாசம் காங்கிரஸுக்குக் கிடையாது. காங்கிரஸ் புத்திசாலித் தனத்துடனும் மிக்க அடக்கத்துடனும் சமஸ்தான காரி யங்களில் தலையிடாமலிருந்தது. அநாவசியமாக சமஸ் தானதிபதிகளின் உணர்ச்சிக்குக் கஷ்டம் விளைவிக்கா மலிருக்கவும், தக்க சமயத்தில் தனது அபிப்பிராயத்தை வற்புறுத்திக் கொள்ளலாமென்றும் காங்கிரஸ் பொறுத் திருந்தது. அந்த சமயம் இப்போது வாய்த்திருக்கிறது. ஆகவே சமஸ்தான பிரஜைகளின் சார்பாக காங்கிரஸ் காரர்கள் வெளியிடும் விண்ணப்பத்தை பெரிய சமஸ் தானதிபதிகள் காது கொடுத்து கேட்பார்கள் என்று நம்புகிறேன்.

நான் ஆங்கிலேயருக்கும் இவ்வித விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன். இந்தியா, மகாநாட் டின் மூலமும் ஆலோசனைகளின் மூலமும் சுயேச்சை அடைவதானால் ஆங்கிலேயரின் உதவியும் நல்லெண்ண மும் அத்தியாவசியமாகும்.

லண்டனில் அவர்களும் இணங்கி வந்ததாகச் சொல் லப்படும் விஷயம் இந்தியா கோரிய லக்ஷியத்துக்குக் சரி

பாதி பாகம் கூட இல்லை. உண்மையாக அவர்கள் இந்தியாவுக்குதவி செய்வதானால் அவர்கள் எவ்வித சுதந்திரத்துடனிருக்க விரும்புகிறார்களோ அந்த சுதந்தரத்தை அளிக்கவே முயற்சிக்கவேண்டும். இந்தியாவைத் தவறு செய்யவிடுவதிலும் ஆங்கிலேய ராஜதந்திரிகள் பின்வாங்கக்கூடும். தவறு செய்யவும், பாவம் செய்யவும்கூட சுதந்தரம் இருப்பதாகவில்லாவிட்டால் அந்த சுதந்தரம் இருந்தும் பயனில்லை. ஆண்டவன் தவறிழைக்கதனது சிருஷ்டியில் கீழ்ப்பட்டுள்ள ஒரு வர்க்கத்துக்கு உரிமை கொடுத்திருக்கின்றானென்றால் மானிடவர்க்கத்தில் ஒரு பகுதியார் மற்றொரு பகுதியாருக்கு அந்த உரிமையைக் கொடுக்க ஏன் மறுக்கவேண்டும்? காங்கிரஸையும் மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி அழைப்பதிலிருந்து பூரண சுதந்திரம் கொடுப்பதைத் தடுக்கமாட்டார்கள் என்றே தெரிகிறது. இந்தியா வெளியிலிருந்து சிகிச்சை செய்யப்படக்கூடிய நிலையிலுள்ள நோயாளி குழந்தையைப்போல் இல்லையென்பதே காங்கிரஸின் அபிப்பிராயம்.

அமேரிக்கருக்கு நன்றி.

அமெரிக்க ஜனநாயகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உலகத்திலுள்ள மற்ற தேசத்தினருக்கும் நான் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன். இந்தப் போராட்டம் சத்தியத்தையும் அஹிம்ஸையையும் அடிப்படையாகக் கொண்டது என்பதைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். முக்கியமாக அமெரிக்கர்கள் இது விஷயத்தில் அனுதாபமூலம் அதிக உதவி செய்திருக்கிறார்கள்.

அவ்விதம் அநுதாபம் காட்டுவதற்காக என் சார்பாகவும் காங்கிரஸ் சார்பாகவும் அவர்களுக்கு நன்றி

செலுத்துகிறேன். இனி மேற்கொள்ளவிருக்கும் கஷ்ட வேலையில் அவர்களின் அநுதாபமும் ஆதரமும் இருக்க வேண்டியது அவசியம். அந்த ஆதரவு நாளுக்குநாள் அதிகப்படுமென்றும் நம்புகிறேன். இந்தியா தன் லக்ஷியத்தை நிறைவேற்றிக்கொண்டபின் சத்தியத்தின் மூலமும் அஹிம்ஸையின் மூலமும் உலக சமாதானத்துக்கு விசேஷ உதவி செய்யும். நான் கடைசியாக போலீஸுக்கும் ஸிவில் சர்விஸைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன்.

போலீஸார் அமிதமாக நடந்துகொண்டதைப்பற்றி கவனிக்கக் கமிட்டி நியமிக்க வேண்டுமென நான் கேட்டதும் பிறகு அதைப்பற்றி வற்புறுத்தாது போனதன் காரணங்களும் ஒப்பந்தத்தில் அடங்கியிருக்கின்றன. ஸிவில் சர்விஸ் கவர்ன்மெண்டு நிர்வாகத்தின் ஒரு அம்சமாகும் அது போலீஸ் இலாகாவால் நடைபெற்று வருகிறது. இந்தியா சீக்கிரத்தில் சுய ஆட்சி பெறும் என்றும் தாங்கள் இந்தியாவுக்கு விஸ்வாஸத்துடன் ஊழியஞ் செய்ய வேண்டியது அவசியமென்றும் உண்மையாக உணர்ந்தால் போலீஸாரும் ஸிவிலியன்களும பொதுஜனங்கள் தங்களை ஊழியர்கள் என நினைக்கக்கூடிய முறையில் ஜனங்களிடம் நடந்துகொள்ளவேண்டும். போலீஸாரும் ஸிவிலியன்களும் பொதுஜனங்களின் ஊழியர்களேயன்றி எஜமானர்கள் அல்ல. இதில் ஆக்ஷேபமில்லை.

பலாத்காரக் கைதிகள்.

சத்தியாக்கிரஹக் கைதிகள் விடுதலையான பின்னும் சிறையிலிருந்து வாடவேண்டிய எனது சகாக்களான நூற்றுக்கணக்கான, ஏன், ஆயிரக்கணக்கான பேரைப்பற்றி

ஒரு வார்த்தை சொல்ல நான்கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்களைப் பற்றி பல தந்திகள் எனக்கு வந்துகொண் டிருக்கின்றன. பலாத்காரக் குற்றஞ் செய்வோரைச் சிறைப்படுத்துவது ஒரு தண்டனையென நான் நினைக்க வில்லை. அவர்கள் பலாத்காரம் செய்தாலும் ராஜீய நோக் கத்துடன் செய்வதால் அவர்களும் நம்மைப்போல் சுய நலத் தியாகத்துடனும் அறிவுடனும் தான் காரியங்கள் செய்துவருவதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகவே எனக்கு விடுதலை கிடைக்கு முன்னும் மற்ற சகாக் களுக்கு கிடைக்கு முன்னும் நான் அவர்களுக்கு விடுதலை தேடிக் கொடுக்கவேண்டும். ஆனால் இப்போது அவர்களை விடுதலைசெய்ய நான் கேட்கக் கூடாதென்பதை அவர்களே அறிவார்கள். அதனால் அவர்கள் விஷயத்தை நானே அன்றி மற்றக் காரியக்கமிட்டி அங்கத்தினர்களோ சிந்திக்கவே யில்லையென நினைக்கக்கூடாது. காங்கிரஸ் தற்காலிகமாக ஒத்துழைப்புக் கொள்கையில் வேண்டு மென்றே தங்கியிருக்கிறது. காங்கிரஸ் காரர்கள் ஒப்பந் தப்படி ஏற்பட்ட நிபந்தனைகளை கௌரவமாக நிறைவேற்றி னால் காங்கிரஸ் மதிப்பு அதிகப்படும். கவர்ன்மெண்டா ருக்கும் அதன் திறமையில் நம்பிக்கை ஏற்படும். பொது ஜனங்கள் காங்கிரஸுக்கு அந்த அந்தஸ்தையும் திறமையும் தேடி கொடுத்தால் சிக்கிரத்திலேயே மேற்குறிக்கப்பட்ட ராஜீயக் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என் பதில் சந்தேகமில்லை. அவசரச் சட்டக் கைதிகளும் மீரத் சதிவழக்குக் கைதிகளும் கூட விடுவிக்கப்படுவார் கள். இதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

அராஜகக் கட்சிக்கு விண்ணப்பம்.

இந்தியாவுக்குப் பலாத்காரமான வழிகளால் சுதந்தரம் தேட ஒரு சிறு கட்சி இங்கு வேலைசெய்து வருகிறதென்பதில் ஆக்ஷேபமில்லை. அவர்களுக்கும் நான் விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன். அவர்கள் இப்போது அஹிம்சையின் சக்தியை உணர்ந்துகொண்டார்கள். பொதுஜனங்களுக்கு விழிப்பு ஏற்பட்டதற்குக் காரணம் அஹிம்ஸையின் அபூர்வ சக்தியேயாகும். ஆகவே அவர்கள் இப்போது சற்று அமைதியாயிருந்து காங்கிரஸுக்கு அல்லது எனக்கு சத்தியம் அஹிம்ஸை ஆகிய வழிகளை அநுஷ்டித்துப் பார்க்கும்படி சந்தர்ப்பம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

டாண்டி பிரயாணம் ஆரம்பமாகி இப்போது ஒரு வருஷமும் ஆகவில்லை. முப்பதுகோடி ஜனங்களைப் பாதிக்கக் கூடிய ஒரு விஷய சம்பந்தமாக பரீக்ஷை செய்வதற்கு ஒரு வருஷம் அதிகமல்ல. அது ஒருக்ஷணமே யாகும். ஆகவே அவர்களைச் சற்று பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தாய்நாட்டின் சேவைக்காக அவர்கள் தங்கள் உயிரைப் பத்திரமாக வைத்திருக்கட்டும். தாய்நாட்டின் சேவைக்கு அவர்கள் யாவரும் சீக்கிரத்தில் அழைக்கப்படுவார்கள். கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள ராஜீயக்கைதிகள் உட்பட எல்லோரையும் விடுவிக்கக் காங்கிரஸுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும்படி நான் அவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

நான் வீணான நம்பிக்கை கொடுக்க விரும்பவில்லை. பஹிரங்கமாக என்மனதிலுள்ளதையும் காங்கிரஸின் அபி

லாஷைகளையுமே வெளியிட்டு சொல்ல விரும்புகிறேன். பணிசெய்வது நமது கடமை. பயன்தருவது ஆண்டவன் கடன்.

முடிவுரை.

இன்னும் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன். கௌரவமான ஒரு ஒப்பந்தம் ஏற்பட நான் என்னலான முயற்சி செய்து முடித்தேன். காங்கிரஸ் சம்பந்தப்பட்டமட்டில் உள்ள ஒப்பந்தத்தை அனுசரித்து வேலை செய்ய நான் விசேஷ முயற்சி செய்வதாக ஒப்புக்கொண்டேன். ஒப்பந்தத்தை உடைத்தெறிவதற்காக நான் இந்த ஏற்பாடு செய்துகொள்ளவில்லை. அதை நிரந்தரமாக்க எல்லாவித முயற்சிகளையும் செய்து முடிக்க நான் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டேன். இன்று தற்காலிகமாயிருப்பது நாளை நிரந்தரமாகலாம். கடைசியாக சமரஸ ஒப்பந்தம் ஏற்படுவதற்கு சரியான முயற்சி செய்தவர்கள் பலருக்கும் நான் வந்தனம் செலுத்துகிறேன்'' என்று முடித்தார்.

உடனே கவர்ன்மெண்டு அறிக்கையைபற்றி சில கேள்விகள் கேட்கலாமாவெனப் பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு மகாத்மா மீண்டும் பத்திரிகைக்காரர்களை தாம் நாளையும் வரும்படி அழைத்திருப்பதால் நாளைவரை பொறுத்திருக்கும்படி கூறினர்.

காந்தி இர்வின் உடன்படிக்கை.

(இந்தியா கவர்ன்மேண்டின் அறிக்கை.)

புதிய டில்லி, மார்ச் 5 தேதி சபையோடு கூடிய கவர்னர் ஜெனரலால் பின்கண்ட ஸ்டேட்மெண்டு, பொதுவாக யாவரும் அறியும் பொருட்டு வெளியிடப் பட்டது.

(1) மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதிக்கும், மிஸ்டர் காந்திக்கும் நடந்துள்ள சம்பாஷணைகளின் பயனாக, சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி விடுவதென்றும், பிரிட்டிஷ் கவர்ன் மெண்டின் சம்மதத்தைப் பெற்று இந்தியா கவர்ன் மெண்டாரும் மாகாண கவர்ன் மெண்டுகளும் சிற்சில நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதென்றும், ஏற்பாடாயிருக்கிறது.

(2) இந்திய அரசியல் அமைப்பு சம்பந்தமாக இனி வருங்காலத்தில் நடக்கப் போகும் விவாதத்தின் போக்கு, பிரிட்டிஷ் கவர்ன் மெண்டின் அங்கீகாரத்தைக் கொண்டு பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது: அதாவது, லண்டன் ஸர்வகட்சி மகா நாட்டில் விவாதிக்கப்பட்ட இந்திய அரசியல் திட்டத்தைப்பற்றி மேலே தொடர்ந்து ஆலோசிப்பதுதான் அந்த விவாதத்தின் கருத்து. லண்டன் மகாநாட்டில் நிர்ணயித்த திட்டத்தில், பெடரேஷன் அதாவது "அகில இந்திய சமஷ்டி அரசியல்" ஒரு முக்கிய அம்சமாக விருக்கும் அதேமாதிரி இந்தியரின் ஜவாப்தாரித்துவம், தேசப் பாதுகாப்பு, வெளி நாட்டு சம்பந்தம், சிறுபான்மையோர் நிலைமை, முதலியவை சம்பந்தமான பந்தோபஸ்துகளும் முக்கிய அம்சங்களாகும்.

வரவு செலவு விஷயத்தில் இந்தியாவின் மதிப்பைக் காப்பாற்றுவதும், கொடுக்க வேணடிய இனங்களுக்கு

வகை செய்வதும், அதேமாதிரி முக்ய விஷயங்களாகும் இவை இந்தியாவின் நன்மையை உததேசித்த பந்தோபஸ்கள்.

(3) 1931 ஜனவரி 19-ந்தேதி பிரிட்டிஷ் முதன் மந்திரி வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், இந்திய அரசியல் திட்ட விஷயமாய் இனிமேல் நடக்கப் போகும் விவாதங்களில் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

(4) சட்டமறுப்பு இயக்கத்துடன் நேராக சம்பந்தப்பட்ட காரியங்களை யொட்டியே இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

(5) சட்ட மறுப்பு பயன்தரும் முறையில் நிறுத்தி விடப்படும்; அதே மாதிரி பதிலுக்கு கவர்ன்மெண்டும் நடவடிக்கை யெடுத்துக்கொள்ளும். சட்ட மறுப்பு இயக்கத்தைப் பயன் தரும் வண்ணம் நிறுத்துவதென்றால், "எந்த முறைகளைக் கையாளுவதன் மூலமாக சட்டமறுப்பு இயக்கம் நடத்தப்படுகிறதோ, அந்தமுறைகளை யெல்லாம் திறமையாக நிறுத்திவிடுவது" என்று அர்த்தம். முக்கியமாக அடியிற்கண்ட காரியங்கள் நிறுத்தப்பட்டு விடும்:—
(1) எந்தச் சட்டத்தின் ஷராக்களையும் கட்டுப்பாடாக மீறி நடத்தல். (2) நிலவரி மற்றும் சட்ட பூர்வமான இதரவரிகளைக் கொடாதிருக்கத் தூண்டுவது. (3) சட்ட மறுப்பை ஆதரித்து துண்டுப்பத்திரிகைகள் வெளியிடுதல் (4) கவர்ன்மெண்டுக்கு விரோதமாக சிவில் ராணுவ சேவகர்களையும் கிராம உத்தியோகஸ்தர்களையும் நடக்கும்படி தங்கள் செல்வாக்கைக் கொண்டு தூண்ட முயலுதல்; வேலையை ராஜிநாமாச் செய்யும்படி அவர்களைத் தூண்டுதல். (5) அன்னிய நாட்டுத் துணி பஹிஷ்கார விஷயத்

தில், 2 பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. முதலாவது. பஹிஷ்காரத்தின் போக்கு; இரண்டாவது அதை அமுலுக்குக்கொண்டு வரும் பொருட்டு அனுஷ்டிக்கப்படும் முறைகள். இந்த விஷயமாய் கவர்ன்மெண்டின் நிலைமை என்ன வென்றால்:—

(6) இந்தியாவின் செல்வ நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கான பொருளாதார கைத்தொழில் இயக்கத்தின் ஒரு அம்சமாக இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு வகை செய்வதை, கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சட்டம் சமாதானத்தை பாதிக்காமலும், தனிப்பட்ட நபர்களின் சுதந்தரத்தில் தலையிடாமலும், மேற்குறித்த நோக்கத்துடன் செய்யப்படும் பிரசாரம் அல்லது விளம்பர முறைகளைக் கூடா தென்று தடுக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படவில்லை. துணி பஹிஷ்காரம் ஒன்றில் மட்டும் எல்லா அன்னிய தேசங்களும் ஒன்றாக பாவிக்கப்பட்டிருக்கின்றனவே யன்றி, மற்றப்படி இந்தியாவில் உற்பத்தி செய்யப்படாத இதர சாமான்கள் விஷயத்தில் நடத்தி வந்திருக்கும் பஹிஷ்காரப் பிரசாரமானது, முக்யமாக பிரிட்டிஷ் சாமான்களுக்கு விரோதமாகவே நடத்தப்பட்டு வந்திருக்கிறது; ராஜிய நோக்கங்கள் சித்தியாகும் பொருட்டு இந்த பஹிஷ்கார முறையையாளப் பட்டிருப்பதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தன்மை வாய்ந்ததாயும், இந் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப் பட்டதாயு முள்ள பகிஷ்காரமானது, அரசியல் பிரச்சினைகளை பற்றி பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளும் இந்திய சமஸ்தானப் பிரதிநிதிகளும் சேர்ந்து பிரிட்டிஷ் கவர்ன் மெண்டின் பிரதிநிதிகளுடனும் இங்கிலாந்திலுள்ள ராஜீயக் கட்சிகளுடனும் வெளிப்படையாக

வும் சிநேக பாவத்துடனும் விவாதிப்பதில் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளுவதற்கு அனுசரணையாக இராதென்று ஒப்புக் கொள்ளப் படுகின்றது.

இந்த ராஜி அம்மாதிரியான விவாதத்தை இனி நடத்தும் நோக்கத்துடன் தான் ஏற்படுகிறது. எனவே, சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்துவதன் மூலம், பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத்தை ஒரு ராஜியக்கருவியாக உபயோகிப்பதைத் திட்டமாக விட்டு விடுவதாக ஏற்படுகின்றது. இதனுல் ராஜீயக் கிளர்ச்சி நடந்து வந்த காலத்தில் பிரிட்டிஷ் சாமான்களை விற்பனை செய்வதையோ, அல்லது வாங்குவதையோ நிறுத்தியவர்கள், விரும்பினுல் எவ்விதமான நிர்பந்தமுமின்றித் தங்களது மனதை மாற்றிக் கொள்ளச் சுதந்தரமளிக்கப்பட வேண்டும் என்பதும் தானுக ஏற்படுகிறது.

(7) அன்னிய சரக்குகளுக்குப்பதிலாக இந்திய சரக்குகளை உபயோகிக்கும்படிக் செய்வதிலும், மயக்கமுண்டாக்கும் லாஹிரி வஸ்துக்களை உபயோகிப்பதைத் தடுப்பதிலும், சட்டத்திற்கு விரோதமான மறியல்முறைக்குட்பட்ட நடவடிக்கைகளைக் கைக் கொள்ளக்கூடாது. எவ்விடத்திலாவது எப்பொழுதாவது இந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமாயின் அந்த விடத்தில் மறியலை நிறுத்த வேண்டும்.

(8) போலிஸ் நடத்தையைப்பற்றி சில குறிப்பிட்ட சம்பவங்களை மிஸ்டர் காந்தி கவர்ன்மெண்டிற்கு அறிவித்து அந்த சம்பவங்களில் பகிரங்க விசாரணை நடத்த வேண்டிய அவசியத்தை வெளியிட்டார். தற்கால நிலையில் இவ்விதமாகச் செய்வதால் அதிகக் கஷ்டங்களேற்படுமென்று கவர்ன்மெண்டார் எண்ணுகிருர்கள். அவ்விதம்

செய்தால் ஒருவர்மேல் ஒருவர் குறைகூறி குற்றம் சாட்டு வார்களென்று நம்புகிறார்கள். அமைதி ஏற்படுத்துவதற்கு இது இடையூறாகவே யிருக்கும். இந்தக் காரணங்களை யெல்லாம் முன்னிட்டு மிஸ்டர் காந்தி அந்த விஷயத்தை வற்புறுத்தாதிருக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்.

(9) சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்ட உடனே கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை பின் வரும் பாராக்களில் விபரமாய் சொல்லப்பட்டிருக்கிறது:--

(10) சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாக வெளி யிடப்பட்ட எல்லா அவசரச் சட்டங்களும் வாபீஸ் வாங் கப்பட்டுவிடும். "பயங்கர இயக்கம்" (புரட்சி இயக்கம்) சம்பந்தமான 1931-ம் வருத்திய முதலாவது அவசரச் சட்டம் இந்த இனத்தில் சேராத (11) 1908-ம் வருஷத் திய கிரிமினல் லா திருத்தச் சட்டத்தின்படி 'சட்டமறு ப்பு' இயக்கத்தை யொட்டி என்னென்ன சபைகள் சட்ட விரோதமென்று விளம்பரப் படுத்தப்பட்டனவோ, அச் சங்கங்கள் சம்பந்தமான விளம்பரங்கள் வாபீஸ் வாங்கப் படும். பர்மா கவர்ன்மெண்டார் சமீபத்தில் அச்சட்டத்தின் படி பிறப்பித்த விளம்பரம் இந்த இனத்தில் சேரவில்லை.

(12) சட்ட மறுப்பு இயக்கம் சம்பந்தமாகத் தொடர்ந்து, பைசலாகாமலிருக்கும் சட்ட நடவடிக்கைகள் நிறுத்திக்கொள்ளப்படும். ஆனால் பலாத்காரமான குற் றங்கள் சம்பந்தப் பட்டமட்டில் இவ்வாறு செய்யப்பட மாட்டாது. பெயரளவுக்கு மட்டும் பலாத்காரமாகவோ, பலாத்காரத்திற்குத் தூண்டத்தக்க தாகவோ காணப்படும் குற்றங்களைச் செய்தவர்கள் விஷயத்திலும், வழக்குகள் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படும். (ii) கிரிமினல் பிரோ ஸீஜர் கோட்படி எடுத்துக் கொள்ளப்பட்ட ஜாமீன் நட

வடிக்கை விஷயத்திலும் இவ்வித கொள்கையே அநுஷ்டிக்கப்படும். (iii) சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக எந்த மாகாணக் கவர்ன்மெண்டாவது ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தாலும் சரி, ஹைகோர்ட்டை நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி சொல்லியிருந்தாலும் சரி, அதில் சம்பந்தப்பட்டவர் பலாத்காரத்தில் சேர்ந்ததாகவோ அன்றி பலாத்காரத்திலிறங்க தூண்டியதாகவோ பிரஸ்தாபமில்லா விட்டால் அவர் மீது ஏற்பட்ட நடவடிக்கையை வாபீஸ் வாங்கிக் கொள்ள சம்பந்தப்பட்ட கோர்ட்டில் அது மனுச்செய்து கொள்ளும். (iv) ஸோல்ஜர்கள் விஷயத்திலோ போலீஸ் விஷயத்திலோ உத்தரவை மீறியதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் இந்த ஏற்பாட்டில் அவ்வழக்குச் சேராது.

13. பெயரளவில் மட்டும் பலாத்காரம் அல்லது அவ்வித பலாத்காரத்திலிறங்கத் தூண்டுதல் ஆகியவை தவிர, மற்றப்படி பலாத்காரக் குற்றஞ் செய்யாமல் சட்ட மறுப்பு இயக்கத்துக்காக தண்டனை அனுபவித்து வருபவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் (ii) இவ்வித நிலையிலுள்ள கைதி சிறைச்சாலையில் மேற்கொண்டதுபோன்ற பலாத்காரமான குற்றத்துக்காக அதிகப்படியாகத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அந்த அதிகப்படி தண்டனையும் ரத்து செய்யப்படும். அல்லது இதற்காக எந்த ராஜீயச் சிறையாளர் மீதாவது வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தால் அதுவும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்படும். சோல்ஜர்களும் போலீஸாரும் உத்தரவுக்கு மீறி நடந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தால் அவர்கள் விஷயத்தில் இதில் பொருந்தாது.

(14) வசூலிக்கப்படாத அபராதத்தொகை வஜா செய்யப்படும். கி. பு. கோ. ஜாமீன் சட்டப்படி ஜாமீன் எங்காவது பறிமுதல் செய்யப்பட உத்தரவிடப்பட்டிருந்து. இன்னும் அது பறிமுதல் செய்யப்படாதிருந்தால் அவ்விதமே அதுவும் வஜா செய்யப்படும். எந்த சட்டப்படி ஆனாலும் வசூலிக்கப்பட்டுவிட்ட அபராதத்தொகையும், பறிமுதல் செய்து விடப்பட்ட ஜாமீன் தொகையும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

15. சட்டமறுப்பு இயக்கத்தை முன்னிட்டு ஒரு பிரதேச ஜனங்களின் செலவில் அங்கு வைக்கப்பட்டுள்ள அதிகப்படியான போலிஸ் படையை எடுத்துவிடலாமென்று மாகாண கவர்ன்மெண்டார் நினைத்தால், அப்படியே செய்வார்கள். அதிகப்படிப்போலிஸ் படையின் செலவுக்குக் கண்டு மிச்சப்படும்படி வசூல் செய்யப்பட்டிருந்தாலொழிய பணத்தைக் கவர்ன்மெண்டார் வாபிஸ் கொடுக்கமாட்டார்கள்.

16. (ஏ) ஜங்கம சொத்து சட்ட பூர்வமாக ஒருவருடைய அனுபோகத்தில் இருந்திருந்து சட்டமறுப்பியக்கத்தை முன்னிட்டு அவஸரச் சட்டங்களின்படியோ அல்லது வேறு சட்டத்தின்படியோ பறிமுதல் செய்யப்பட்டு கவர்ன்மெண்டினிடத்திலிருப்பின் அது திருப்பி கொடுக்கப்படும்.

(பி) நிலவரி அல்லது வேறு வரியை வசூல் செய்வதற்காக ஜப்தி செய்யப்பட்ட ஜங்கம சொத்து திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் வரியைக் கொடுக்கவேண்டியவர் கிரமமான காலத்திற்குள் வரியைக் கட்டமாட்டார் என்று ஜில்லா கலெக்டர் நினைப்பாரானால் சொத்து திருப்பிக் கொடுக்கமாட்டாது. கிரமமான காலமென்பது என்ன

என்று நிர்ணயிக்கையில் வரியைக்கட்டவேண்டியவர் அதற்காக அவகாசத்தைப்பெற விரும்பக்கூடியது கவனிக்கப்படும். அவசியமிருந்தால், நிலவரி, வசூல் நிர்வாக விதிகளை அனுசரித்து நிறுத்தி வைக்கப்படும்.

(ஸி) சொந்து சேதமடைந்துவிட்டதற்குப் பரிகாரம் செய்யப்படமாட்டாது.

(டி) ஜங்கம சொத்து விற்கப்பட்டுவிட்டால் அல்லது வேறுவிதமாகப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டால், பரிகாரம் செய்யப்படமாட்டாது. கிரயத் தொகை வசூலாக வேண்டிய வரியைக் காட்டிலும் அதிகமாக விருந்தாலொழிய அது திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. ஜப்தி சட்டப்படி செய்யப்படவில்லை என்ற காரணத்தை முன்னிட்டு எவரும் சட்டப்படிக் குற்ற பரிகாரத்தைத் தேட உரிமையுடையவராக இருப்பார்.

17 ஏ. 1930-ம் வருஷத்திய 9-வது அவசரச் சட்டத்தின் கீழ் ஸ்தாவர சொத்து வசப்படுத்தப்பட்டிருப்பின், அந்த அவசரச்சட்டத்தின் ஷரத்துகளை அனுசரித்து அது திருப்பிக் கொடுக்கப்படும்.

பி. நிலம் முதலிய ஸ்தாவர சொத்துக்கள் நிலவரிக்காகவோ வேறு வசூலாக வேண்டிய தொகைகளுக்காகவே ஜப்தி செய்யப்பட்டிருப்பின் திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் கிரமமான காலத்தில் வரியைக் கொடுக்க வரி கொடுக்கவேண்டியவர் மறுப்பார் என்று ஜில்லா கலெக்டர் நினைப்பாரானல், சொத்து திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கிரமமான காலம் என்னவென்று நிர்ணயிக்கையில் வரிகொடுக்க வேண்டியவர் வரியைக் கட்ட உண்மையில் காலம் வேண்டியவராக இருப்பின்

அது கவனிக்கப்படும். அவசியமிருந்தால் வரி வசூல் சட்டத்தின்படி வசூல் நிறுத்தி வைக்கப்படும்.

vi. சொத்து மூன்றாவது மனிதருக்கு விற்கப்பட்டுவிட்டதானால் கவர்ன்மெண்டார் சம்பந்தப்பட்டவரையில் அது முடிவான காரியமாகும்.

(குறிப்பு) மிஸ்டர் காந்திக்குத் தெரிவித்துள்ள தகவல்களின்படி இந்த விற்பனைகளில் சிலவாவது சட்டத்தை மீறியவையென்றும் அநியாயமானவையென்றும் அவர் அறிவித்தார். கவர்ன்மெண்டாருக்குக் கிடைத்துள்ள தகவல்களை முன்னிட்டு இதை அவர்கள் ஒப்புக்கொள்ள முடியாது.

(5) சொத்தை ஜப்தி செய்வது சட்டப்படி செல்லாது என்று சட்டப்படி பரிகாரம் தேட எவருக்கும் உரிமையுண்டு.

18. சட்ட சம்மதமில்லாத வழியில் வசூல் செய்யப்பட்டிருக்குமிடங்கள் மிகவும் குறைவாகவே இருக்குமென்று கவர்ன்மெண்டார் நம்புகிறார்கள். அத்தகைய கேஸ்களில் சட்ட விரோதமான நடவடிக்கை ருஜுப்பிக்கப்படும் பக்ஷத்தில் காலதாமதமன்னியில் விசாரணை செய்து பரிகாரம் செய்து கொடுக்கும்படி மாகாண கவர்ன்மெண்டுகள் ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்புவார்கள்.

19. ராஜிநாமா மூலமாகக் காலியான ஸ்தானங்கள் காயமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் பக்ஷத்தில் மாஜி உத்தியோகஸ்தர்களை மீண்டும் எடுத்துக்கொள்ள கவர்ன்மெண்டால் சாத்தியப்படாது. இதர ராஜிநாமாக்கள் ஒவ்வொன்றும் அதனதன் யோக்கியதா யோக்கியதையை அனுசரித்து மாகாண கவர்ன்மெண்டுகளால் கவனிக்கப்

படும். மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டு மென்று மனுச் செய்துகொள்ளும் கவர்ன்மெண்டு உத்தி யோகஸ்தர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் இவர்கள் விஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டுகள் தாராளப் போக் கைக் கையாளுவார்கள்.

20. உப்பள நிர்வாக விஷயமாக இப்பொழுது இருந்துவரும் சட்டங்களை மீறுவதை கவர்ன்மெண்டார் சகித்துக் கொண்டிருக்க முடியாது; இப்பொழுது செல்வ நிலைமை இருந்துவரும் நிலைமையில் உப்புச் சட்டங்களில் விசேஷ மாறுதல்களையும் அவர்கள் செய்யமுடியாது. இருந்தாலும் ஏழைகளில் ஒரு சாராருக்கு அனுகூலமாக உள்ளூருக்குள் உபயோகித்துக் கொள்ளவோ, அல்லது விற்பனை செய்யவோ, உப்புச் சேகரிக்கக் கூடியதாகவோ அல்லது உற்பத்தி செய்யக் கூடியதாகவோ இருக்குமிடங் களில், அவ்விடங்களிலுள்ளவர்கள் அதைத் தயாரித்துக் கொள்ளவோ அல்லது சேகரித்துக் கொள்ளவோ சில இடங்களில் அனுஷ்டானத்திலிருந்து வரும் ஏற்பாட்டை ஒட்டி நிர்வாக தோரணையில் ஏற்பாடுகள் செய்ய கவர்ன் மெண்டார் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வெளியிடங் களிலுள்ளவர்களுக்கு அதை விற்பனை செய்யக்கூடாது.

21. இந்த ஒப்பந்தத்தின்படி ஏற்படும் பொறுப்பு களைப் பூர்ணமாக நிறைவேற்றி வைக்க காங்கிரஸ் தவறும் பக்ஷத்தில், பொது ஜனங்களையும் தனிப்பட்டவர்களையும் பாதுகாக்கவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்த வும் அவசியமான நடவடிக்கைகளைக் கவர்ன்மெண்டார் எடுத்துக் கொள்ளுவார்கள்.

(ஒப்பம்) எச். டப்ளியூ. எமர்ஸன்,
உள்நாட்டு இலாகா காரியதரிசி.

காரியக் கமிட்டித் தீர்மானம்

புதிய டில்லியில் 1931 மார்ச்மீ 5-ந் தேதி காங்கிரஸ் கார்யக் கமிட்டி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது :—

இந்தியாக் கவர்ன்மெண்டுக்கும், காங்கிரஸ் சார்பாக மகாத்மா காந்திக்கும் ஏற்பட்டுள்ள தற்காலிக ஒப்பந்தத்தைக் கார்யக் கமிட்டி பரிசீலனை செய்து அங்கீகரிக்கிறது. அந்த ஒப்பந்த நிபந்தனைகளின்படி நடக்க மற்ற காங்கிரஸ் கமிட்டிகளுக்கு உத்தரவிடுகிறது.

நாட்டினர் காங்கிரஸ் நடவடிக்கைகள் சம்பந்தமாக இந்த நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பார்கள் என்றும், காங்கிரஸ் சார்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளைப் பூரணமாக நிறைவேற்றி வைப்பதைப் பொறுத்தே பூரண சுயராஜ்யம் இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய அபிவிருத்தி ஏற்படுமென்றும் கமிட்டி கருதுகிறது.

காங்கிரஸ் காரியதரிசியின் அறிக்கை

காங்கிரஸ் பொதுக் காரியதரிசி டாக்டர் சையது முகம்மது மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் பலவற்றிற்கும் கீழ்க்கண்டவாறு தந்தி கொடுத்திருக்கிறார் :— காங்கிரஸ் சார்பாக காரியக் கமிட்டிக்கும் இந்தியாக் கவர்ன்மெண்டுக்கும் ஏற்பட்ட தற்காலிகமான உடன்பாட்டை உத்தேசித்து அதன்படி நடக்கவேண்டுமென தங்கள் மாகாணத்திலுள்ள எல்லா காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அறிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். சட்ட மறுப்பு இயக்கத்தையும் வரி கொடா இயக்கத்தையும் விட்டுவிட வேண்டும். இனி சட்டங்களை மீறி நடக்கக்கூடாது.

பிரிட்டிஷ் சரக்குப் பஹிஷ்காரத்தை விட்டுவிட வேண்டும். அது சம்பந்தமாக அவரவர்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். ஆனல் மயக்கம் தரக்கூடிய வஸ்துக்கள் விற்கும் கடைகளையும் சாராயக் கடைகளையும் அன்னிய நாட்டு ஜவுளிக்கடைகளையும் எங்கெங்கு அவசியம் நேருகிறதோ, அங்கெல்லாம் பகிஷ்கரிக்க அனுமதி கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாகச் செய்யப்படும் மறியல் பலவந்தமுடையதாக யிருக்கக் கூடாது. வற்புறுத்தலும் அதில் இருக்கக்கூடாது. விரோதமான ஆர்ப்பாட்டங்கள் பொது ஜனங்களுக்குத் தடை ஏற்படக்கூடிய ஆர்பாட்டங்கள் சாதாரண சட்டத்துக்குட் பட்ட எவ்வித குற்றங்கள் ஆகியவற்றைச் செய்யக்கூடாது. மேற்கண்டவாறு நடந்துக் கொள்ளாவிட்டால் அங்கு மறியலை நிறுத்தி வைக்கவேண்டும். அந்நிய நாட்டுச் சரக்குகளுக்குப் பதிலாக சுதேசி சரக்குகள் வாங்கும்படி வலியுறுத்துவது முன்போல்தானிருக்கும் கட்டுப்பாடாக உப்புச் சட்டத்தை மீற முயற்சி செய்யக்கூடாது. உப்பளங்களை முற்றுகையிடவும் கூடாது. ஆனல் உப்பு சேகரிக்கப்படும் இடங்களில் உள்ள கிராமவாசிகளும் உப்பு உற்பத்தி செய்யப்படும் இடங்களில் உள்ள கிராம வாசிகளும் அவர்கள் வீட்டு உபயோகத்துக்கோ அல்லது அக்கம் பக்கத்தில் விற்பனை செய்வதற்கோ உப்பு சேகரிக்கலாம். உப்பு உற்பத்தி செய்யலாம். ஆனல் வெளியில் கொண்டு போய் அவற்றை விற்கக்கூடாது. அதிகாரம் பெருமல் சமாச்சாரத் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதை நிறுத்தி விட வேண்டும். வரி செலுத்துவோர் நிலவரியை செலுத்த ஏற்பாடு செய்யவேண்டும். பொருளாதாரக் கஷ்டத்தை உத்தேசித்தோ வரி செலுத்த முடியாமலோ

கிராமத்தை விட்டுப்போயிருக்கும் கிராம வாசிகள் கிராமங்களுக்குத் திரும்பவும் வரவேண்டும். வரி வஜாவுக்கு வேறு முறைகளை அனுஷ்டிக்க வேண்டும். ராஜீயக் கைதிகள் விடுதலையாக விருப்பதால் கராச்சி காங்கிரஸுக்கு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் விஷயமாக தனியான உத்தரவு சிக்கிரத்தில் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

காங்கிரஸ் மகா சபையும் மகாத்மா காந்தியும்.

ஒவ்வொரு வருடமும் காங்கிரஸ் மகா சபை டிசம்பர் மாத இறுதியில் கூடிவந்தது. டிசம்பர்மாதத்தில் பொது வாய் சந்தர்ப்பக்குறைவு ஏற்படுவதை உத்தேசித்து 1929-ல் சபை கூடியபோது, பிரதி வருடமும் மார்ச்சு மாதம் இறுதியில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. 1930-ல் நடக்கவேண்டிய மகா சபை 1931 வருஷம் மார்ச்சு மாதம் கராச்சியில் நடைபெற வேண்டியதாயிற்று. 1930-ல் மகாத்மா காந்தியின் தலைமையில் அஹிம்சா தர்ம யுத்தம் நடைபெற்றது. இந்த ஒரு வருடத்தில் நடந்த தர்ம யுத்தத்தை இங்கு விரிக்கிற்பெருகும். இதைத் தனி நூலாக வெளியிட உத்தேசித்துள்ளோம். இந்திய கவர்ன்மெண்டார் அடக்குமுறை சட்டங்களை அப்போதைக்கப்போது உபயோகித்து வந்தனர். இது ஒரு புறமிருக்க.

மகாத்மா காந்தியின் கொள்கைக்கு விரோதமான அராஜகக் கட்சி இருந்து வருவதாய்த் தெரிகிறது. சில வாலிபர் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை துப்பாக்கியால் சுட்டு விழ்த்துவதாயினர். சிலர் வெடி குண்டுகளை உபயோகித்தனர். ஒரு முறை டில்லி சட்ட சபையில் வெடி குண்டைப் போட்டனர். அந்த வகையில் சர்தார் பகத்

சிங், இராஜ குரு, சுகதேவ் அகிய மூவரும் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை பெற்றனர். இவர்களை மன்னித்து விடும்படி பெரு முயற்சிகள் செய்யப்பட்டன. மகாத்மாவும் வைஸ்ராயினிடத்தில் மன்றாடியதாகத் தெரிய வந்தது. யாதும் பலிக்கவில்லை. மார்ச்சு மாதம் 23-தேதி மாலை மூவரையும் வீரஸ்வர்க்கத்துக்கு அனுப்பினர்.

ஆஹா! என்னே—கோலம்! தீவாந்திர சிட்சையாக மாற்றியிருக்கலாகாதா? கவர்ன்மெண்டார் கோடிக்கணக்கான பொதுஜனக் கோரிக்கையைப் புரக்கணித்து விட்டனர். இதனால் என்ன நேர்ந்தது. மனக்கொதிப்பு உண்டாயது. கராச்சியில் காங்கிரஸ் ஒழுங்காய் நடைபெறுமோ என்ற அச்சமுண்டாயது. ஏனென்றால் காங்கிரஸில் ஒரு பகுதியினர் காந்தி-இர்வின் உடன்படிக்கையை ஒப்புக் கொள்ளவில்லை. அந்த வகையில் யுவர்களின் சார்பாக சுபாஷ் சந்திரபோஸ் முன்னணியிலிருந்தார். காங்கிரஸில் பிளவு திட்டமாய் ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. நவஜீவன் பாரத மகா சபை (யுவர்களின் கூட்டம்) சமரஸக் கொள்கையைக் கண்டித்தது. ஏகாதிபத்தியக்காரர்கள் ஏமாற்றி இந்தியாவை சுரண்ட இடங்கொடுக்கக் கூடாதென்றும் இன்னும் பல தீர்மானங்களை நிறைவேற்றினர். மகாத்மா காந்தி கராச்சியில் வந்திறங்கியதும் ஒரு சிறுவன் கருப்பு மலரைக் கொடுத்தான். இவைதயெல்லாம் கவனிக்கும்போது காங்கிரஸில் பிளவு நிச்சயமாய்த் தோன்றியது. மகாத்மா ஆங்காங்கு தக்க விடையளித்தார்.

கடைசியாக காங்கிரஸில் பண்டித ஜவஹர்லால்நேரு காந்தி-இர்வின் ஒப்பந்த சம்பந்தமான கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தார் :—

காந்தி—இர்வின் ஒப்பந்தம்

இந்தியா கவர்ன்மெண்டுக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கும் தற்காலிகமாக ஏற்பட்ட சமரஸ ஒப்பந்தத்தைக் காங்கிரஸ் ஆராய்ந்து பார்த்தது. அதை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனல் காங்கிரஸின் லக்ஷியம், 'பூரண சுயராஜ்யம்' அதாவது, 'பூரண சுயேச்சைதான்' என்பதையும் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறது; இந்த ஒப்பந்தத்தால் அதற்கு மாறுதல் ஏற்படாது. எந்த மகாநாட்டிலாவது காங்கிரஸ் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளோடு கலந்துகொள்ள நேர்ந்தால் அவர்கள் இந்த லக்ஷியத்தைத்தான் வற்புறுத்துவார்கள். அதிலும் முக்கியமாக நாட்டினருக்கு ராணுவ விஷயமாகவும் வெளிநாட்டு விஷயமாகவும் செல்வநிலை விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும் ஆதிக்க மிருக்க வேண்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள பண சம்பந்தமான காரியங்களைப் பக்ஷபாதமற்ற விசாரணைசபையார் பரிசீலனைசெய்து இந்தியா எவ்வளவுதூரம் பொறுப்பேற்றுக் கொள்வதென்றும், இங்கிலாந்து எவ்வளவுதூரம் பொறுப்பு ஏற்றுக்கொள்வதென்றும் அபிப்பிராயம் கூற அதிகாரமிருக்கவேண்டும். இருதரப்பாருக்கும் அவரவர்கள் விரும்பும்போது சம்பந்தத்தை அறுத்துக்கொள்ளவும் அதிகாரம் இருக்கவேண்டும். இதற்கிடையில் காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்தியாவின் நன்மைக்கேற்ற வழியில் அவ்வப்போது செய்யப்படும் அவசியமான ஏற்பாடுகளையும் அங்கீகரிக்க உரிமை வகிப்

பார்கள். காங்கிரஸ் சார்பாகக் கார்யக்கமிட்டி நிய மிக்கும் மற்ற பிரதிநிதிகளுடன் சர்வகக்ஷி மகாநாட் டில் கலந்துகொள்ளக் காங்கிரஸ் காந்திஜியை நிய மித்து அவருக்கு அதிகாரம் கொடுக்கிறது.

இத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பண்டித ஜவஹர் லால் பேசினர்.

சிலர் எதிர்த்தும் பேசினர். பிறகு ஏகமனதாய் ஒப் புக்கொள்ளப்பட்டு, மகாத்மா காந்தி காங்கிரஸிலும் வெற்றி பெற்ருர்.

டில்லி உடன்படிக்கை.

மிஸ்டர் ரேய்னுல்ட்ஸின் சந்தேகமும் மகாத்மா காந்தியின் சமாதானமும்.

மகாத்மா காந்தி "யௌவன இந்தியா"ப் பத் திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிருர் :—

என்னுடைய 11 நிபந்தனைகளடங்கிய கடிதத்தை ராஜப்பிரதிநிதிக்கு எடுத்துக்கொண்டு போனவரும், சட்டமறுப்பு இயக்கம் இங்கு நடந்துகொண்டிருக்கையில் இங்கிலாந்தில் மிகுந்த சங்கடங்களுக்கிடையேயும் இந்தியா வுக்காகப் போராடி வந்தவருமான ஆங்கிலேயரை இந் தியா நன்கறியும். மிஸ்டர் ரெயினுல்ட்ஸ் எனக்கு இப் பொழுது பின்வரும் பச்சையான கடிதத்தை எழுதியிருக் கிருர் :—

என்னுடைய கடிதத்திற்கு நீங்கள் பதில் எழுதியதில் சந்தோஷம். இந்தக் கடிதம் வந்து சேருமுன் டில்லியில் நடந்த விஷயங்கள் பத்திரிகைகள் மூலம் தெரிந்துவிட் டன. அவைகளுக்குச் சமாதானம் கேட்கவேண்டியது அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது.

உங்களுடைய கடிதம் என்னுடைய சந்தேகத்தைத் தெளிவுப்படுத்தவில்லை. உங்களை யறிந்த ஒருவரும் உங்களுடைய அந்தரங்க சுத்தியைச் சந்தேகிக்கமாட்டார்கள். நீங்கள் இந்தியாவின் சார்பாகப் பேசக்கூடிய நிலைமையிலிருந்து வரும் வரையில் உங்களுடைய செய்கைகளை எந்த ஆங்கிலேயரும் ஆட்சேபிப்பதற்கில்லை. இருந்தாலும் உங்களுடைய அபிப்பிராயத்திலிருந்து மாறுபட எனக்குப் பூரண உரிமை இருக்கிறதென்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்களென்று நம்புகின்றேன். அடியிற்கண்ட விஷயங்களில் நான் மாறுபட்ட அபிப்பிராயமுடையவனாகவிருக்கிறேன் :—

சந்தேகம்.

1. கவர்ன்மெண்டார் இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் கொடுக்கக் கட்டுபட்டிருக்கவில்லை. அவ்விதம் செய்தாலும் கவர்ன்மெண்டு கவிழ்ந்துவிடும். உங்களுடைய தேச விஷயத்தில் நியாயமாக நடந்துகொள்ள மாக்டோனல்டுக்குத் தைரியமில்லாததால் அவர் உத்தியோகத்திலிருந்து வருகிறார். உங்களுக்கு நியாயம் வழங்கினால் அவருடைய உத்தியோகம் போய்விடும் உங்களுடைய பிறப்புரிமையான பூரண சுயராஜ்யத்திற்குக் குறைவான எதையும் நீங்கள் ஒப்புக்கொள்வதாயின் அது எவ்விதம் சுயேச்சையாகும் ? அதற்கும் குடியேற்றநாட்டு அந்தஸ்துக்கும் என்ன வித்தியாசம் ? என்ன கொடுப்பதாகச் சொல்லப்பட்டது ? உறுதி மொழியின் உண்மைக் கருத்தென்ன ?

2 அடக்குமுறை இன்னும் கையாளப்பட்டு வருகிறது. இந்திய மகாஜனங்களுடைய அபிப்பிராயத்தை உதாசினம் செய்கிறவர்களாகவும் உங்களுடைய பூமியி

லேயே நீங்கள் ராஜிக்கு வரும்படி நிர்ப்பந்திப்பதற்காக ஆயுதந்தாங்கிய படைகளை உபயோகிக்கிறவர்களாகவு முள்ளவர்களிடமிருந்து சுதந்திரம் கிடைக்குமென்று எவ்விதம் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்.

3. அப்போதைக்கப்போது நீங்கள் நிபந்தனைகளைச் சொல்லி வந்திருக்கிறீர்கள். 1929 நவம்பரில் டில்லி அறிக்கையை வெளியிட்டீர்கள்; பிறகு 11 நிபந்தனைகளைக் குறிப்பிட்டீர்கள். ஸ்லோகோம்பிடம் சில நிபந்தனைகளைச் சொன்னீர்கள்; பிறகு நீங்களும் நேருவும் சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டீர்கள். இவைகள் என்னுயின? அவைகளில் சிலவற்றிற்கு கவர்ன்மெண்டார் "மனமுவந்து" விட்டுக் கொடுக்கப்போகிறுர்கள். அதுவும் ஓரளவு; அவர்களுடைய அபிப்பிராயத்தை ஒட்டி, ஆனல் சுய ஆட்சி கொடுப்பதாக அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இனி நடக்கப்போகும் மகாநாட்டில் காங்கிரஸுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடுப்பதாகவும் அவர்கள் சொல்லவில்லை. முந்தின மகாநாட்டில் செய்ததுபோல் அவர்கள் பிற்போக்காளர்களைக் கொண்டு இந்த மகாநாட்டை நிரப்பிவிடலாம்.

எல்லா ராஜீயக் கைதிகளையும் நிபந்தனைக்குட்பட்டு விடுதலை செய்வதாகவும் அவர்கள் சொல்லவில்லை. இவ்விதமே பல விஷயங்களைச் சொல்லலாம். அவைகளெல்லாம் உங்களுக்குத் தெரிந்தவைதான். இத்தகைய காரியங்கள் உங்களுக்கு உபகாரம் செய்ய விரும்புகிறவர்களாகவும் நீங்கள் சரியான வழியைக்காட்டுவீர்களென்று நம்புகிறவர்களாகவு முள்ளவர்களை மிகுந்த சங்கடமான நிலைமையில் வைத்து விடுகின்றனவென்பதை இந்தியர்களாகிய நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் சொன்ன

நிபந்தனைகளை ஆதரித்துநிற்காவிடின் எங்களுக்கு எவ்வித ஆதரவு இருக்கும்? நீங்கள் சொன்னது குறைந்தபக்ஷம் நிபந்தனையென்றும், அதை நீங்கள் விட்டுக் கொடுக்கமாட்டீர்களென்றும் நாங்கள் நினைத்தோம். ஆனால் நீங்கள் பேரம் பேசி உங்களுடைய கோரிக்கைகளைக் குறைத்துக் கொண்டு வருகிறீர்கள். நாங்கள் எவ்விதம் இனி நிஷ்கரிஷையாகப் பேச முடியும்? நாங்கள் சொல்லுவதை யார்தான் நம்புவார்கள்?

தந்திர வழியிலும் நீங்கள் அடைந்திருக்கும் லாபமென்னவென்பது தெரியவில்லை. டில்லி அறிக்கையை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளாததாலேயே சட்ட மறுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதை இன்னும் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளவில்லை. அதில் அடங்கியிருந்த ஒரு நிபந்தனையையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் இப்பொழுது சமரஸபாவத்தைக் காட்டுவதற்கு எவ்விதக் காரணங்களை சொல்லுகிறீர்களோ அதே காரணங்களை நீங்கள் சட்ட மறுப்பை ஆரம்பிக்காம லிருப்பதற்கும், சர்வகக்ஷி மகாநாட்டில் நீங்கள் கலந்துகொள்ளும்படி செய்வதற்கும் பலர் சொன்னார்கள். அந்த சமாதானங்களை நீங்கள் அப்பொழுது நிராகரித்து விட்டீர்கள். அதே காரணங்களை இப்பொழுது மறுபடியும் நீங்கள் ஏன் சொல்லுகிறீர்கள்? தேசம் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்திருக்கிறது. எதற்காக? இன்னும் பலர் சிறைகளிலிருக்கிறார்கள்; பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களில் பெரும்பாகம் இன்னும் திருப்பிக்கொடுக்கப்படவில்லை. பலர் செத்துப்போய்விட்டார்கள். தடியடிக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள முடியாது. இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? சட்ட மறுப்பு ஆரம்ப

மாவதற்கு முன் சொல்லாத எதையும் புதிதாக இப்பொழுது லார்டு இர்வின் சொல்லிவிடவில்லை. உப்பு விஷயத்தில் அற்ப உரிமையை அளித்திருப்பதைத் தவிர வேறு எதையும் அவர் விட்டுக் கொடுத்துவிடவில்லை. ராஜீ உடன்படிக்கை பூர்வஸ்திதியைக் கூட ஏற்படுத்துவதாக இருக்கவில்லை. போராட்டகாலத்தில் சம்பாதித்த சிலவற்றை அவர்கள் விட்டுக் கொடுத்திருக்கிறார்களே தவிர எதற்காகப் போராட்டம் நடைபெற்றதோ அதில் அவர்கள் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை.

நான் பட்ட வர்த்தனமாக எழுதியிருப்பதை நீங்கள் மன்னிப்பீர்களென்று நம்புகிறேன். எனக்கு வயது மாக வில்லை; அநுபவமுமில்லை. இருந்தாலும நிலைமை இன்ன தென்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கு எனக்குப் பகுத்தறிவு இருக்கிறது. நான் இருபக்கங்களிலிருந்து உங்களைத் தாக்குகிறேன். முதலாவது உங்களுடைய கோரிக்கை மிகவும் மிதமானதாக இருக்கிறது; இரண்டாவது, அதற்கு நீங்கள் கையாளும் முறை மிகவும் கடுமையானதாக இருக்கிறது. ஆரம்பம் முதலே நீங்கள் மிதமாகவிருந்தால் அதை நான் ஒப்புக்கொள்ளாதபோதிலும் அதை நான் மதிப்பேன். ஆனால் ஒன்று மில்லாததற்கு பலாத்காரமற்ற புரட்சியை நடத்தும் கொள்கை எனக்கு பிடிபடவில்லை. இந்தியாவுக்கும் அது பிடிபடாது.

இன்னுமொரு தோஷங்கூற விரும்புகிறேன். நீங்கள் இந்திய விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் பாடுபடுகிறீர்கள். இதை நான் இங்கெல்லாம் எடுத்துச் சொல்லி சுய ஆட்சி பிராமணர் ஆட்சியாகவோ, வைசியர் ஆட்சியாகவோ, கொடுமைசெய்வோர் ஆட்சியாகவோ இருந்துவராதென்று சொல்லியிருக்கிறேன்.

அவ்விதமிருக்க செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் பிற்போக்கான பிரேரணைகள் உங்களை எவ்விதம் திருப்திசெய்ய முடியும்? சர்ச்சில் கோஷ்டியினர் பணக்காரர்களைத் திருப்தி செய்வதற்காக வும் ஏழைகள்மீது அவர்களுக்கு அதிக சக்தி ஏற்படும்படி செய்வதற்காகவுமே சுய ஆட்சி கேட்கப்படுகிறதென்று சொல்லுகிறார்கள். இதை நான் அங்கீகரிக்கிறேன். ஆனால் சுயராஜ்யம் அதுவல்லவென்று நான் சொல்லி வந்திருக் கிறேன். ஏகாதிபத்திய பித்தையும் இந்திய முதலாளித் தன்மையையும் ஒழிப்பதற்காகத்தான் சுய ஆட்சி கேட் கப்படுகிறதென்று நான் சொல்லிவந்திருக்கிறேன். அப் பொழுதுதான் ஏழைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படும். இது உண்மையாயின் சமஸ்தானாதிபதிகளும் ஜமீன்தார் களும் முதலாளிகளும் அடங்கிய மகாநாடுகளால் என்ன பலனேற்படும்? அவர்களில் சுயநலங்கருதாதவர்கள் சில இருக்கிறார்கள். ஆனால் அந்த கோஷ்டியினருடைய பொது நோக்கமென்ன?

சமாதானம்.

குடும்ப சொந்த விஷயங்களைப்பற்றியிருந்த பிரஸ்தா பத்தைத்தவிர மற்றவிஷயங்களை பற்றி அக்கடிதத்திலிரு ந்து அப்படியே மேலே பிரசுரித்திருக்கிறேன். மிஸ்டர் ரெய்னால்ட்ஸின்வேண்டுகோளின்பேரில் இந்தக்கடிதத்தை நான் பிரசுரம் செய்திருக்கிறேன். காங்கிரஸ் என்னிடம் நம்பிக்கைவைத்து ராஜி உடன்படிக்கையை ஒப்புக்கொ ண்டுவிட்டபோதிலும் இந்தவீரரான ஆங்கிலேயரைப் போல் அபிப்பிராயப்படுகிற இந்தியர்களுமிருப்பதால் சந் தோஷத்துடன் இக்கடிதத்தை நான் பிரசுரம்செய்கிறேன் என்னுடைய மிதவாதத்திலும், முன்னுக்குபின் விரோத

மாக நான் நடந்து கொள்ளுவதிலும் திகைப்படையும் ஆங்கிலேயர்களும் சிலர் இருக்கலாம். ஆகவே அவர்களை உத்தேசித்து நான் ரெனல்ட்ஸின் கடிதத்திற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. வெகு காலம்வரை அவர்களுடைய உதவியும் ஆதரவும் இந்தியாவுக்கு வேண்டியிருக்கும். நான் மிதவாதியென்ற குற்றச் சாட்டை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். என்னை அறிந்த நண்பர்கள் நான் எவ்வளவு மிதவாதியோ அவ்வளவு தீவிர வாதியென்றும் எவ்வளவு கன்ஸர்னேடிவோ அவ்வளவு மாறுதலில் தீவிர நோக்கமுடையவனென்றும் அத்தாக்ஷி கொடுத்திருக்கிறார்கள். அஹிம்ஸையைப் பற்றி எனக்கிருந்துவரும் அபிப்பிராயமே இந்தக்கலப்படத்திற்குக் காரணம். முன்னுக்குப் பின் விரோதமென்பது வெளிக்குத் தோன்றக் கூடியது தான். நான் பலதரப்பட்ட நிலைமைக்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவதால் நண்பர்களுக்கு அவ்விதம் தோன்றுகிறது. வெளிக்கு ஒரே கொள்கையுடனிருப்பது வீண்பிடிவாதமாகவுமிருக்கலாம்.

முக்கிய விஷயம் என்னவெனில் மிதவாதியாகவோ அமிதவாதியாகவோ இருப்பதாவது, முன்னுக்குப் பின் விரோதமாக நடந்து கொள்வதாவது பெரிய விஷயமில்லை. தன்னுடைய மனச்சாக்ஷியைத் திருப்தி செய்து கொள்ள வேண்டியது தான் பொது ஜன ஊழியனின் கடமை. தன்னுடைய மனச்சாக்ஷியை லக்ஷியம் செய்யாமல் பொது ஜனங்களைத் திருப்தி செய்வதையே பெரிதாக நினைக்கிறவன் சுங்கானில்லாத கப்பலுக்கொப்பாவான். ஊழியமே பரிசாக இருக்கவேண்டும். ஆகவே நான் கூறப்போகும் வாதமும் விஷயங்களும் அவர்களுக்குத் திருப்தியைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், பொது ஜனங்

களுக்கு அவை போதுமானவை. உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொண்டதால் என்னுடைய கடமையைச்செய்ததாகவே நான் நினைத்தேனென்று ரெயினல்ட்ஸுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சரித்திர பூர்வமான நிலைமையைக் கவனிக்காததால் ரெயுனல்ட்ஸும் மற்றவர்களும் தப்பபிப்பிராயம் கொண்டுவிட்டார்கள். ஒரு புதிய விஷயமும் நிலைமையை அடியுடன் மாற்றிவிடலாம். ரெயினல்ட்ஸ் நான்கு சம்பவங்களைக் குறிபிட்டிருக்கிறார். (1) டில்லி உடன்படிக்கை; (2) 11 நிபந்தனைகள்; (3) ஸ்லோகோம்புக்குச் சொன்ன நிபந்தனைகள்; (4) காந்தி நேரு நிபந்தனைகள்.

டில்லி அறிக்கை லார்டு இர்வினுடைய அறிக்கைக்குப் பதிலாகும். ஆகவே அந்த அறிக்கைக்கே அதில் பதில் சொல்லப் பட்டிருந்தது. 11 நிபந்தனைகளடங்கிய கடிதம் சட்டமறுப்புக்குப் பூர்வாங்கமாக எழுதப்பட்டது. எவ்வித நிபந்தனைகளை ஒப்புக்கொண்டால் சட்டமறுப்பு ஆரம்பிக்கப்படமாட்டாதென்று அதில் சொல்லப்பட்டது. ஆகவே அதற்கும் டில்லி அறிக்கைக்கும் வித்தியாசமிருக்க வேண்டியிருந்தது.

சட்டமறுப்பு ஆரம்பமான பிறகு மிஸ்டர் ஸ்லோகோம்பிடம் நிபந்தனைகள் தெரிவிக்கப்பட்டன. ஆகவே 11 நிபந்தனைகளிலிருந்து அது சிறிது மாறுபட்டிருந்தது. ஆனால் அவை குறைத்துக் கொள்ளப்படவில்லை.

காந்தி - நேரு நிபந்தனைகள் சட்ட மறுப்பு இயக்கம் உச்ச ஸ்தானத்திலிருந்த காலத்தில் சொல்லப்பட்டவை. அப்பொழுது நாங்கள் சிறைகளில் அடைபட்டுக் கிடந்ததால் வெளிசம்பந்தம் எங்களுக்கு இல்லாமலிருந்தது. இந்த நான்கு கட்டங்களிலும் சர்வகக்ஷி மகாநாடு நடை

பெறவில்லை; கவர்ன்மெண்டின் கொள்கை இன்னதென்றும் அறிவிக்கப்படவில்லை.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்களுடைய கொள்கையை அறிவிக்காததாலும், மகாநாட்டுக்குச் செல்லும் பிரதிநிதிகளின் நோக்கமின்னதென்று தெரியாததாலும், சர்வகக்ஷி மகாநாட்டுடன் ஒத்துழைப்பதற்கு வேறு எந்த கட்டத்திலும் சாத்தியப்படவில்லை. சென்ற மார்ச்சு மாதத்தில் மகாநாட்டுப் பிரதிநிதிகள் கோரிக்கை இன்னதென்றும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கொள்கை இன்னதென்றும் தெரிந்து விட்டன. பிரிட்டிஷ் கொள்கையானது நமது கோரிக்கையை அங்கீகரிப்பதற்கொப்பானதாகும். இந்தியர்களின் குடியேற்ற நாட்டு அந்தஸதுக்கோரிக்கையாவது, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அறிக்கையாவது காங்கிரஸைத் திருப்தி செய்ததென்பதில்லை. பின்னதில் பல பாதுகாப்புகள் புகவிடப்பட்டிருக்கின்றன. அவைகள் இந்தியாவின் நன்மைக்குற்றவையுமன்று.

இருந்தாலும் முன்னமிருந்த நிலையற்ற ஸ்திதிக்கு இது அபிவிருத்தியே. அதனுடன் காங்கிரஸ் தனது கக்ஷியைத் தெரிவித்துக்கொள்ளலாமென்று தெரிந்துகொண்ட பிறகு காங்கிரஸ் தனது கோரிக்கை இன்னதென்று சொல்லி அதை அங்கீகரிக்கும்படி வற்புறுத்தாவிடின் அது தன்னை தப்பான நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டி வந்திருக்கும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அறிக்கையை வெளியிட்ட பிறகு எந்த சட்டத்திலும் காங்கிரஸ் தனது பாத்தியதைகளைப்பற்றிய விவாதத்தில் தலையிட்டேயாக வேண்டும். கண்ணியமான நிபந்தனைகளுக்குட்பட்டு ராஜியைச் செய்துகொள்ளுவதற்கு வாய்க்கும் சந்தர்ப்பத்தை ஒரு ஸத்யாக்ரஹி நழுவ விட்டு விடுவதற்கில்லை; நழுவவிடவும்

கூடாது. அதில் பலனேற்படாவிடின் மறுபடியும் போராட்டமிருக்கிறது. அவர் பூர்வாங்கமாக சன்னத்தம் செய்து கொள்ள வேண்டியதில்லை ; அவருடைய வழி எல்லோருக்கும் தெரிந்தே இருக்கிறது. போராட்டத்தை நிறுத்துவதோ நடத்துவதோ அவருக்கு ஒன்றுதான். ஒரே நோக்கத்திற்காகத் தான் அவர் போராடவோ, போராட்டத்தை நிறுத்தவோ செய்கிருர். அவர் எப்பொழுதும் எதிராளியிடம் அவநம்பிக்கைப்பட வேண்டுமென்பதில்லை. சிறு சந்தர்ப்பம் வாய்த்தாலும் சிநேகப்பான்மையை அவர் ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும். இங்கு வியாஜம் எதிர் பாராத இந்தியர்களின் ஏகோபித்த கோரிக்கை. பிரிட்டிஷ் அறிக்கை திருப்திகரமானதாக இல்லாவிடினும் லார்டு இர்வின் மிகவும் அந்தரங்க சுத்தியுடையவராக இருந்தார்.

அதிகாரிகளுடைய மனம் மாறுதலடைந்திருக்கிறதென்று நான் எபொழுதும் சொன்னதில்லை. அது இனித் தான் ஏற்படவேண்டும். அது ஏற்படுகையில் சாசுவதமான ராஜி ஏற்பட்டுவிடும். அப்பொழுது ஸத்யாக்ரஹி பூரணமாக விட்டுக்கொடுப்பார். மனமாறுதலென்ருல் இந்தியருடை கோரிக்கைக்குப் பூர்னமாக விட்டுக்கொடுப்பதென்று அர்த்தம்.

எந்த கட்டத்திலும் கொடியை இறக்கிவிடவில்லை. 23-12-1929ல் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கைவிடப் பட்டு விட்டது. அது இப்பொழுது 'பூரண சுயேச்சையாகி விட்டது. பிரிந்துகொள்ளும் உரிமையுடன் சாத்தியமானுல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்திருப்பது கொள்கை. இது மகாநாட்டின் மூலமாகக் கிடைக்க முடியாமலிருக்கலாம் ; பாதுகாப்புகள் தடைக்கல்லுகளாகவு

மிருக்கலாம். அவ்விதமாயின் மகாநாடு முறிந்துபோவதற்கு காங்கிரஸ் ஜவாப்தாரியாக இராது. அது அதிக கௌரவத்துடன் வெளிவரும்; அதன் கோரிக்கை இன்னதென்பதும் உலகிற்கு நன்ருகத் தெரிந்துவிடும். எல்லா ராஜீயக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டு விடவில்லையென்பது வாஸ்தவமே. தற்காலீக உடன்படிக்கைக்கு ஒருஷரத்தாக அதைச் சொல்லுவதற்கில்லை. பூரண ராஜி ஏற்படுகையில் அவர்கள் விடுதலையடைவார்கள். அந்த ராஜி ஏற்படாவிடில் இப்போழுது தாற்காலீகமாக வெளியிலிருப்பவர்களும் உள்ளே போய்விடுவார்கள். ஸத்தியாக்ரஹிக்கு சிறைவாழ்வு ஒரு அநருகதையன்று. சிறைதான் அவருக்கு சுதந்திரக்கோட்டையின் வாயிற்படி.

பூரண சுயராஜ்யம் என்ருல் என்னவென்று காங்கிரஸ் நினைக்கிறதென்பதைப்பற்றி எவ்விதச் சந்தேகமுமிருக்க வேண்டியதில்லை. அது பூரண பொருளாதார சுதந்திரமாகும். அது எவருடனும் நேர்மையற்ற வழியில் செய்து கொள்ளும் ஒப்பந்தமாகாது.

---

* மகாத்மா காந்தி வைசிராய்க்கு எழுதியனுப்பிய 11 திட்டங்களும், மிஸ்டர் ஸ்லோகோம்பிடம் தெரிவித்த நிபந்தனைகளும், 'சமரஸ முயற்சி' என்ற புத்தகத்தில் வெளியாயிருக்கின்றன.

8

சுயராஜ்யத்தில் பிரஜா உரிமை

பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி இவர்களடங்கிய சப் கமிட்டியினர் ஜீவாதாரமான உரிமைகளைப்பற்றிய தீர்மானத்தைப் பின்கண்டவாறு திருத்தியிருக்கிறார்கள் :—

காங்கிரஸ் கோரும் சுயராஜ்யம் என்னவென்பதை சாமான்ய ஜனங்கள் தெரிந்துகொள்ளும்படி செய்வதற்காக அவர்களுக்குப் புரியக்கூடிய விதத்தில் காங்கிரஸ் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட வேண்டுமென்று கருதுகிறது. ஆகவே காங்கிரஸ் ஒப்புக்கொள்ளும் எந்த சுயராஜ்ய திட்டமும் அடியிற் கண்டவைகளுக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டுமென்றே அல்லது ஏற்பாடு செய்ய சுயராஜ்ய கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டுமென்றே காங்கிரஸ் கருதுகிறது :—

1. பிரஜைகளுக்கு அடியிற் கண்ட ஜீவாதாரமான உரிமைகள் இருக்கவேண்டும்.

(1) சகவாஸ சுதந்திரம்;

(2) பேச்சு, பத்திரிகை சுதந்திரம்;

(3) மனச்சாக்ஷி சுதந்திரமும், பொதுஜன சமாதானத்திற்கும் சன்மார்க்க நெறிக்கும் விரோதமில்லாமல் அவர்களுடைய மதத்தைப் பின்பற்ற உரிமையும்.

(4) வித்தை, பாஷை, மைனாரிட்டி சமூகங்களுடைய லிபிகள் இவைகளுக்கு பாதுகாப்பு;

(5) எவரும் எந்தப் பாலினராகவோ (ஆண், பெண்) இருப்பதற்காக எவ்வித வித்தியாசமுமில்லாமல் எல்லோ

ருக்கும் சரிசமத்துவமான பாத்தியங்களும் பொறுப்பு களும்,

(6) மதம், வகுப்பு, அல்லது ஜாதி காரணமாக கவர்ன்மெண்டு உத்தியோக விஷயத்திலோ, கௌரவ விஷயத்திலோ, அல்லது தொழில் விஷயத்திலோ எவ்வித வித்தியாசமும் இருந்துவரக் கூடாது.

(7) பொதுக் கிணறுகள், பொது ரஸ்தாக்கள், பொது ஸ்தலங்கள் இவைகளுக்குப் போகவும், இவைகளை உபயோகித்துக்கொள்ளவும் எல்லோருக்கும் உரிமை;

(8) பின்னல் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு ஆயுதந்தாங்கியிருக்க எல்லோருக்கும் உரிமை.

1. சட்ட சம்மதமாக வல்லாது ஒருவருடைய சுதந்தரத்தையும் பறிமுதல் செய்யக்கூடாது; அல்லது ஒருவருடைய வீட்டுக்குள் பிரவேசிக்கவோ அல்லது சொத்துக்களைப் பறிமுதல் செய்யவோ கூடாது.

2. மத விஷயங்களில் கவர்ன்மெண்டார் நடுநிலைமை வகித்திருக்கவேண்டும்.

3. தொழிலாளர்களுக்கு காலக்ஷேபத்திற்குக் கட்டக்கூடிய சம்பளம்; ஒரு வரையறைக்குட்பட்ட வேலை காலம்; சவுகரியமான வேலை நிலைமை; விருத்தாப்பியம், வியாதி காலம், வேலையில்லாத காலம் இவைகளில் பாதுகாப்பு.

4. தொழிலாளர் அடிமைத்தனத்திலிருந்து நிவர்த்திக்கப்பட வேண்டும்.

5. ஸ்திரீ தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு; முக்கியமாக பிரஸவ காலத்தில் போதிய ரஜா விஷயமான ஏற்பாடுகள்.

6. பள்ளிக்கூடத்திற்குப் போகும் வயதினரான குழந்தைகளை தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளாமல் தடுத்தல்.

7. தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு சங்கங்களை அமைத்துக்கொள்ள தொழிலாளர்களுக்கு பாத்தியம். தகராறுகளை மத்தியஸ்தர் மூலமாகத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பாடு.

8. நில வரியையும் குத்தகையையும் குறைத்தல் லாபகரமாக இல்லாத நிலங்கள் சம்பந்தமாக விவசாயிகளுக்குக் குத்தகை விலக்கு; இவ்விதம் செய்வதால் சிறிய ஜமீன்தார்களுக்கு நஷ்டம் ஏற்படுகையில் அதற்குப் பரிகாரம் செய்துகொடுத்தல்.

9. குறிப்பிட்ட ஒரு தொகைக்கு அதிகமாக நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு படிப்படியாக உயர்ந்த விகித வருமான வரி.

10. வார்சு பாத்திய சொத்துக்களின்மேல் படிப்படியாக வரி.

11. 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டுரிமை.

12. இலவச ஆரம்பக் கல்வி.

13. ராணுவச் செலவில் ஒரு பாதியையேனும் குறைத்தல்.

14. ஸிவில் இலாகாக்களில் செலவையும் சம்பளங்களையும் குறைத்தல்.

நிபுணரல்லாத எந்த கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்கக் கூடாது. அந்தத் தொகை 500 ரூபாய்க்கு அதிகப்படக் கூடாது.

15. அந்நிய நாட்டுத் துணிகளையும் நூலையும் விலக்கு வதன் மூலமாக உள்நாட்டுத் துணிகளுக்கு ஆதரவு அளித்தல்.

16. போதையைத் தரக்கூடிய பானங்களையும் வஸ் துக்களையும் விலக்கு செய்தல்.

17. உப்புவரி விலக்கு.

18. இந்தியத் தொழில்களுக்கு உதவக்கூடிய வழியி லும், சாமான்ய ஜனங்களுக்குப் பரிகாரமாக இருக்கக் கூடிய வழியிலும் பரிவர்த்தனை, நாணயச் செலாவணி விஷயத்தில் ஆதிக்கம்.

19. முக்கிய தொழில்கள், சுரங்கங்கள் இவைகளில் கவர்ன்மெண்டின் ஆதிக்கம்.

20. அதிக வட்டிக்குக்கடன் கொடுக்காமல் செய்தல்.

இதில் கண்ட கோரிக்கைகளுக்கு விரோதமின்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் இவைகளைக் கூட்ட வோ, குறைக்கவோ அல்லது மாற்றவோ செய்யலாம்.

மகாத்மா காந்தி

அதன்பின், சுயராஜ்யத்தில் பிரஜைகளுக்கிருக்கக் கூடிய உரிமைகளைப்பற்றிய தீர்மானத்தைக் காங்கிரஸ் மகாநாட்டில் பிரேரித்தார். மகாத்மா சுற்றி வளைத்துப் பேசாமல் நேராக தீர்மானத்தின் வாசகத்தைப் படித்துக் காட்டி அதன் தாத்பர்யத்தை விளக்கினர். அவர் கூறிய தாவது :—

சகோதர சகோதரிகளே! நீங்கள் மிக்க பொறுமை யுடன் நான் வாசித்த தீர்மானத்தைக் கேட்டீர்கள். நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதெல்லாம் ஏழை ஜனங்

களைத்தான். நாம் குறைந்த பட்சம் கோருவதென்ன வென்பதை நான் முன்னம் குறித்த 11 விஷயங்களில் பிரஸ்தாபித்திருக்கிறேன். அந்த 11 விஷயங்களைச் சர்வ கட்சி மகாநாட்டில் வற்புறுத்துவதென நான் முதலில் உத்தேசித்தேன். பிறகு தெளிவாக அந்த 11 விஷயங் களை விளக்கிக் குறைந்த பட்சம் நாங்கள் வேண்டுவது இதுதான் எனத் திட்டமாக உலகத்தாருக்கு எடுத்துச் சொல்லிவிடலாமென்ற முடிவுக்கு வந்தேன். இதை வெளியிடுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையானல் அதைத் திட்டமாகச் சொல்லிவிடுங்கள். நமது வழி தெளிவாக இருக்கவேண்டும். நமக்கெல்லாம் சுயராஜ்யம் பெற ஆசை அதிகமாகவிருக்கிறது. அதைப்பெற நாம் எல்லா வழி களையும் அநுஷ்டிக்கவேண்டும். ஆகவே நமது விஷயங் களைத் தயாராக வைத்திருக்கவேண்டும். முதலில் ஹிந்து-முஸ்லிம் விஷயத்தையும் நாம் எடுத்துக் கொள்ளவேண் டும். அரிய கலைஞானமுடைய இரு வகுப்பினர் ஏன் ஒருவரை ஒருவர் சந்தேகித்துக்கொண்டு போராட வேண் டும். பொதுவான விஷயங்கள் பல இரண்டு வகுப்பிலு மிருக்கின்றனவே. யோசிக்கும் வேளையில் பகவத்கீதை யும் கொரானும் ஒன்ருகத்தானே யிருக்கின்றன. இப் போது நாம் சுயராஜ்யத்தை யடையும் மார்க்கத்திலிருப்ப தால் நமது போராட்டமெல்லாம் முடிந்துவிட்டது என நினைப்பதற்கில்லை. நாம் சும்மாவிருப்பதற்கில்லை. நாம் நமது பழைய வழக்கங்களை விடக்கூடாது. தீர்மானத் தில் ஸ்திரீ புருஷர்களுக்குச் சரிசமத்துவம் கொடுத்திருப் பதைக் கவனியுங்கள். ஓட் சுதந்தர விஷயத்திலும் அவர் களுக்கு நாம் சரிசமத்துவம் வழங்கியிருக்கிருேம். மற்ற வர்களைவிட நாம் ஸ்திரீகளுக்கு அதிக வசதி கொடுத்த

தில்லையா? தற்போதுள்ள அரசாட்சியில் முடியாத ஒரு காரியத்துக்கும் நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஸ்திரீகள் இராஜப்பிரதிநிதியாக வரவும் நமது திட்டத்தில் இடமிருக்கிறது. நமது கவர்ன்மெண்டில் யாவும் சாத்தியமாகும் நமது காங்கிரஸில் முதல் முதல் தலைமை வகித்த ஸ்திரீ டாக்டர் அன்னிபெஸண்டு அல்லவா? அதன்பின் ஸ்ரீமதி ஸரோஜனி தலைமை வகிக்கவில்லையா? சமீபத்தில் நடந்த போராட்டத்தில் ஸ்திரீகள் சர்வாதிகாரிகளாக விளங்கவில்லையா?

மத சம்பந்தமான விஷயங்களில் ஒருவர் குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக நாம் வித்தியாசம் எதையும் செய்யப்போவதில்லை. தொழிலாளர்கள் விஷயத்தில் நாம் அவர்களுக்கு இப்போதிருப்பதைவிட அதிக சவுகரியம் செய்துகொடுக்கப் போகிறோம். தொழிலாளரின் பெண்டுபிள்ளைகள் சுகமாகவிருக்க நாம் சுயராஜ்யத்தில் ஏற்பாடுசெய்வோம். எட்டு மணி நேரம் தான் ஒரு நாளைக்கு அப்போது வேலை வாங்கப்படும். தொழிலாளர்களை நமது சகோதரர்போல் நடத்தலாம். அவர்களின் நிலை தற்சமயம் சரியாயில்லை. ஏனெனில் கவர்ன்மெண்டு இப்போது நம்முடையதல்ல. நமது ஆட்சி ஏற்பட்டால் இந்தகஷ்டங்களையெல்லாம் நிவர்த்தித்துவிடலாம். நான் மற்ற விவரங்களைப்பற்றி இங்கு சொல்லப்போவதில்லை உங்கள்கையில் குறிப்புப் புத்தக மிருந்தால் அதில் குறித்துக் கொள்ளுங்கள். சுயராஜ்யம் வந்தால் உப்புக்கு வரி இருக்காது. உப்பு எல்லோருக்கும் சொந்தமாக இலவசத்தில் கிடைக்கும்.

நாம் விவசாயிகளுக்கு தர்மராஜ்யம் குறுகியிருப்பதாய் எடுத்துச் சொல்லவேண்டும். லண்டனுக்குப்

போனல் நாம் நமது கோரிக்கைகள் இவைதான் எனத் திட்டமாகச் சொல்லிவிடவேண்டும். சுயராஜ்யத்தில் இராஜப்பிரதிநிதிக்குக்கூட மாதம் 500 ரூபாய்க்குமேல் சம்பளம் கிடைக்காது. தீர்மானத்தை நிறைவேற்றிய பின் நீங்கள் சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரம் போடவேண்டும். மெஜாரிட்டியாகவுள்ள ஹிந்துக்கள் மைனரிட்டிகளை சமாதானப் படுத்தவேண்டும். இது அவர்கள் கடமையாகும். அவர்களின் மத சுதந்தரமும் மற்றவைகளும் பாதுகாக்கப்படுமெனச் சொல்லவேண்டும்.

அதிக வட்டிவாங்கும் வழக்கம் முகம்மதிய சட்டத்தில் தடுக்கப்பட் டிருக்கிறது. அந்த மதத்தில் வட்டி போடுவதே குற்றமெனக் கருதப்படுகிறது. ஹிந்துமதத்தில் அதற்கு அநுமதி யிருக்கிறது. மார்வாடிகள் பனியாக்கள் குஜராத்திகள் முதலியோர் அதிக வட்டி வாங்குகின்றனர். நூற்றுக்கு ஆறுவீதமோ அல்லது உயர்ந்தபடி எட்டுவீதமோதான் வட்டி விதிக்கவேண்டுமென நிர்ணயம் செய்யப்படவேண்டும். நிலவாடகையும் ஏழைகளால் செலுத்தக்கூடியபடி இருக்க வேண்டும். இதனல் ஜமீன்தார்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் பாதகம் விளைத்து விடக்கூடாது. இந்ததிட்டம் 24 மணி நோட்டீஸில் அவசரமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே இதில் பல குறைகளிருக்கலாம் ஆனல் இது முடிவல்ல. நமக்கு உதவியாகவே இதைத் தயாரித்துக் கொண்டோம். இதை ஏற்றுக் கொள்வதால் அபாயமொன்றும் ஏற்பட்டு விடாது. பயப்படுவதற்கு இடமில்லை. ஆகவே திருத்தப் பிரேரணைகள் கொண்டு வருவதற்கும் அவசியமில்லை. இதனை நிறைவேற்றிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என மகாத்மா தமது கவர்ன்மெண்டின்

நிலையை விளக்கிவிட்டு பிரசங்க மேடையிலிருந்து இறங்கினர்

ஸ்ரீமான் சென்குப்தா இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். அவர் அப்போது சிலர் அஞ்சுவதுபோல பிரிட்டிஷ் கவர்ன்மெண்டோடு நாம் நடத்தவிருக்கும் சம்பாஷணை பலிக்காது போனல் மீண்டும் நாட்டினரிடம் வந்து போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமாதலால் அப்போது சுயராஜ்யம் இன்னதென எல்லோரும் தெரிந்து கொள்ளுவதற்கு இத்தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பது அவசியமெனக் கூறினர்.

லண்டனில் லார்டு இர்வினின் பிரசங்கம்.

ஓர் எச்சரிக்கை.

லார்டு இர்வின் லண்டன் திரும்பிய பின்னர், பிரிட்டிஷ் இந்தியச் சங்கத்தினர் அவருக்கும் அவர் மனைவிக்கும் மேமீ 15உ நடத்திய விருந்தில் முதன் முதலாக இந்திய நிலைமையைப்பற்றிப் பேசினர். அச்சமயம் அவர் கூறியதாவது:— அடுத்த சில வருஷங்களில் இந்தியாவும் இந்திய விஷயங்களும் அரசியல் உலகில் முக்கியமான நிலைமையை வகிக்கக்கூடும். இத்தேச ஜனநாயகத்திற்கு இப்பொழுது மகத்தான பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஜனநாயகம் நேர்மையான முடிவுசெய்யக்கூடுமென்று நாம் சொல்ல இடமிருக்குமென நினைக்கிறேன். மிகவும் கஷ்டமான காலத்தில் இந்தியாவிலுள்ள பெரிய ஸர்விஸினர் மிகுந்த பக்தியுடனும் கடமையில் கண்ணுமாக நடந்துகொண்டதை நான் மிகப் பாராட்டுகிறேன். அந்தக் கஷ்டமான மாதங்களிலும் வருஷங்களிலும் பிரிட்

டிஷ் கவர்ன்மெண்டார் இந்திய கவர்ன்மெண்டை விசுவாசமான முறையில் ஆதரித்தது பற்றி அவர்களையும் நான் மிகப் பாராட்டுகிறேன். கவர்ன்மெண்டு கடுமையாக நடந்துகொண்டிருந்தால் உபத்திரவம் நிறுத்தப்பட்டிருக்குமென்றும், எல்லாம் சந்தோஷகரமாக நடந்திருக்குமென்றும் ஒரு உணர்ச்சியிருந்து வருகிறதென்பது எனக்குத் தெரியும். இது ஒரு பெருத்த தவறாகும் என்பதில் சந்தேகமில்லை. கவலையற்ற அடக்கு முறையை நீண்ட காலம் அனுஷ்டிப்பதான கொள்கைக்கு இப்பொழுது சத்தியாகப் பொதுஜன ஆதரவை இந்தியா கவர்ன்மெண்டார் பெறக்கூடுமென வைத்துக்கொண்டால் கூட அம்மாதிரிக் கொள்கையினால் மேலுக்கு ஏற்படும் அமைதி ஜனங்கள் இஷ்டப்பட்டு ஏற்படும் அமைதியாகாதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. விக்டோரியன் சகாப்தத்தில் நாம் ஏகாதிபத்தியமென்றும் அதன் கடமையென்றும் நினைத்து வந்ததெல்லாம் இப்பொழுது மலையேறிவிட்டது. கூட்டுபாத்தியமென்ற ஏகாதிபத்திய சம்பந்தமாகிய புதிய லக்ஷியம் அதற்குப் பதிலாக ஏற்பட்டு விட்டது. இப்பொழுது நாம் ஒரு குடும்பம்போலிருக்கிறோம். சுய ஆட்சிபெற்ற குடியேற்ற நாடுகள் சம்பந்தத்தில் இப்பொழுது புதிய லக்ஷியமேற்பட்டு விட்டது. இந்திய உணர்சி இவ்விதம் ஒருங்குபட்டிருப்பது சகஜமே யாகும். அவ்விதம் அது நேரக்கூடியது தான்.

பிரிட்டிஷ் சாமான்களைக் குறிப்பாக விலக்குவது சம்பந்தமாக நான் பம்பாயை விட்டுப் புறப்பட்ட பொழுது மிஸ்டர் காந்தியுடன் நடத்திய சம்பாஷணையில் மற்ற விஷயங்களுடன் விவாதித்தேன். இவ்விஷயத்தில் மிஸ்டர் காந்தி எனக்குத் திட்டமாக உறுதிமொழி கொடுத்திருக்

கிறார். மூன்று விஷயங்கள் முக்கியமாக ஞாபகத்திலிருத்தப்பட வேண்டும். இந்தியா பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைவதனால் காலக்கிரமத்தில் இந்தியாவின் செல்வம் பெருகி அதிகப் பொருள்கள் வாங்கும் திறனதிகரிக்கக்கூடும். இரண்டாவதாக அரசியல் போராட்டம் நின்றுவிடும் பக்ஷத்தில் இந்தியா தானாகத் திருப்தி செய்துகொள்ளக் கூடாத தேவை மிகுதியாக இந்தியாவிலிருக்கக்கூடும். இதில் பிரிட்டிஷாருக்கு நியாயமான பங்கு கிடைக்கக்கூடும். மூன்றாவதாக வியாபாரம் நல்லெண்ணத்திலேயே நிலைத்திருக்கிறது. இனியும் நல்லெண்ணமிருந்தால் தான் நிலைக்கக்கூடும். அரசியல் கலவரங்களால் கெடாமல் வியாபாரம் சுலபமாக விருத்தியடைமாறு இந்தியாவுடன் ஒரு அரசியல் ஏற்பாடு செய்து கொள்ளப்படுவதில் பிரிட்டிஷ் வியாபாரம் மிகுந்த அக்கரை கொண்டிருக்கவேண்டும்.

மிஸ்டர் காந்தி லண்டன் வந்தால் ஒரு சமரஸ முடிவேற்படுத்துவதில் அவரால் இயன்றவரையில் முயற்சிப்பாரென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை."

இந்தியா கொடுக்கவேண்டிய கடனைப்பற்றிய ஓர் குறிப்பு.

இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த பிரபு நார்த்ப்ரூக் என்பவர் 1895-96-ம் வருஷத்திலே செலவாராய்ச்சிக் கமிஷன் முன்னிலையில் தந்த சாக்ஷியத்தைக் கீழே தருகின்றோம்:—

"இராணுவத்தைத் தந்து உதவிய இந்திய சர்க்காருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் ஒழுங்காகப் பணஞ் செலுத்தவில்லை யென்றே யான் கருதுகின்றேன்.

அபிஸீனியச் சண்டைக்கு முன்னுல் நடந்த கதைகளை விட்டுவிடுவோம். அபிஸீனியச் சண்டைச் செலவை இந்தியாவின் தலையில் சுமத்தி யிருக்கலாகாது. அந்தச் சண்டை, எதற்காக நடத்தப்பட்டது? ஆங்கிலத் துருப்புகளுக்குத் தங்குமிடம் தேடுவதற்காக அந்தச் சண்டை போடப்பட்டது. ஆங்கிலேயனின் சுய மரியாதையையோ இந்தியரின்ரிகவுரவத்தையோ காப்பதற்காக அந்தச் சண்டை போடப்பட வில்லை.

அடுத்தாற்போல பிராக்குப் படை யெழுச்சியின் கதை நடந்தது. அந்தச் சண்டையின் செலவை அநியாயமாக இந்தியாவின் தலையில் தள்ளினுர்கள். சண்டையோ இந்தியாவுக்கு வெளியில் நடந்தது. இந்தப் படையெழுச்சியின் செலவை யார் ஏற்றுகொள்வது என்பதைப் பார்லிமெண்டார் பரிசிலனை செய்திருக்க வேண்டும். நான் அப்போது கவர்னர் ஜனரலாக இருந்தபடியினுல் இந்தியா இந்த அநியாயச் செலவை ஏற்பதை எதிர்த்தேன். என் எதிர்ப்பை ஒருவரும் பொருட் படுத்தினுர்களில்லை.

1882-ம் வூத்தில் எகிப்துக்குச் சென்ற படையெழுச்சியைப் பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். ஸூயஸ் கால்வாயை அடைவதில் இந்தியாவுக்குப் பிரயோசனமிருக்கலாம். எத்தகைய பிரயோசனம், எவ்வளவு பிரயோசனம் என்பதையும் கருதவேண்டுமன்ருே? இந்தப் படையெழுச்சி கொஞ்சச் செலவில் முடிந்து போகுமென எண்ணுதலில் இந்தியாவின் தலையில் அந்தச் செலவைக் கட்டுவதாக ஏற்பாடாகி இருந்தது. ஆனுல் வரவர அந்தச் சண்டை பெரியதாகி விட்டது. படையெழுச்சியின் மொத்தச் செலவு 17 லக்ஷ பவுன்கள்! அந்தச் செலவில் 12 லக்ஷம் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டு மென்ருர்கள். முணகிக்

கொண்டே இந்திய ஸர்க்கார் அந்தச் செலவை ஏற்றுக் கொண்டனர். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் சரி பாதியாக அச்செலவைப் பங்கிட்டிருக்க வேண்டியது நியாயமாகும்.

ஸூடான் படை யெழுச்சியில் இந்தியாவுக்கு இம்மி யும் இலாபமில்லை. இந்தச் செலவைப் பற்றியும் பார்லி மெண்டு சபை ஆலோசிக்கவில்லை சென்ற வருடம் ஸூகீம் என்ற இடத்திற்குச் சென்ற செலவை இந்தியாவின் தலை யில் தள்ளி இருக்கவே கூடாது.

அபிஸீனியைச் சண்டையில் செலவான 6 லக்ஷம் பவுனையும் இந்தியாவிற்குத் தரவேண்டும். பிராக் படை யெழுச்சியில் செலவான எல்லாப் பணத்தையும் பிரிட்டன் தரவேண்டும். ஸூகீம் படையெழுச்சிக்குச் செலவான 2 லக்ஷம் பவுனையும் இந்தியாவுக்குச் செலுத்த வேண்டும். எகிப்துச் சண்டையின் 3½ லக்ஷம் பவுனை இந்தியாவுக்குத் தரவேண்டுவதே நீதி.

சென்றன செல்க. இனியேனும் இந்தியாவை மரியா தையாக நடத்தலாகாதா?''

இவ்வாறு இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த பிரபு நார்த்ப்ரூக் கூறியிருக்கின்றார். இந்தியாவின் கடன், விஷம் மாதிரி ஏறி வந்ததற்கு இந்த வைஸ்ராயின் சாக்ஷியும் ஓர் உதாரணமாகும். மேலும் இந்தியாவுக்கு எவ்வளவு தொகை பிரிட்டனிடமிருந்து சேரவேண்டியது என்னும் இரகஸ்யமும் இதனின்றும் வெளியாகின்றது.

கராச்சி கதர்க்காட்சியில் ஓர் அபூர்வக்காட்சி.

கராச்சி கதர்க்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருந்த துணி வகைகளுள் நேர்த்தியானவைகளைப் பற்றி ஸ்ரீயுத ஜோராஜானி “காதி” பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்.

120 நம்பரில் துணி

பழைய காலத்திய டாக்காமஸ்லினின் பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தகைய உயர்ந்த ஸ்திதியைக் கதர்த்தொழில் அடையுமா என்று சந்தேகப் பட்டுக் கொண்டிருந்தோம். கராச்சியில் 120-ம் நெம்பர் நூலினால், “மல்மல் மஜ்லின்” என்ற புகைபோன்ற துணியைப் பார்த்தவுடன் அந்த சந்தேகம் போய் விட்டது.

எவ்வாறு நெய்தனர்?


பீஹார் மகாணத்தில் வசிக்கும் பிராமணர்கள் பூணூல் நூற்பதற்காக தங்கள் வீட்டு வாயிலில் வளர்ந்திருக்கும் செடியில் கிடைத்த பஞ்சினால் அது நூற்கப்பட்டது, அந்த பஞ்சைக்கொண்டு தக்ளியில் 60-வது நெம்பரிலிருந்து 120-வது நம்பர் வரை நூற்கிறார்கள். இவ்வாறு நூற்ற நூலை பீஹாரிலேயே நெய்ய முடியாமல் டாக்காவுக்கு அனுப்பி நெய்தனர். இப்போது ஒரு வேஷ்டி 500 ரூபா விலை பொறுமானதாக தயார் செய்ய அங்கு சவுகர்யங்களிருக்கின்றன.

மோதிரத்துக்குள் சால்வை:

காஷ்மீரத்தில் கம்பிளி நூலை நூற்கும் கலையும் அபிவிர்த்தியாகி யிருக்கின்றது. அங்கு சர்க்கா சங்கத்தினரால் தயாரிக்கப்பட்ட ஓர் கம்பளிச்சால்வை காட்சிச்

சாலையில் வைக்கப்பட்டிருந்தது. 7 கஜ நீளம் 67 அங்குல அகலமிருந்த அந்த சால்வைக்கு "ஷாடுஷ்" என்று பெயரிட்டிருந்தனர். அந்த சால்வையைக் கொசுவி ஒரு மோதிரத்தினூடே செலுத்தக் கூடும். அவ்வளவு நேர்த்தியான வேலைப்பாடு!

இவ்வாறு பல அரும்பொருள்கள் $1\frac{1}{2}$ லக்ஷம் சதுர அடி விஸ்தீரணச் சாலையில் வைக்கப்பட்டிருந்தன. மொத்தம் 80 ஆயிரம் பேர் காட்சிச்சாலையைப் பார்க்க வந்திருந்தனர். கதர் 60 ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் செய்யப்பட்டது.



வந்தேமாதரம்!

4612